Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 24 ரூபா 20.00

දිනමුරසු වාරමලර් மார்ச். 02 - 08. 2006

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 652



# ஜெனீவா பேச்சு ஓர் நேர் வெட்டு முகம்

மனதுக்கு நிம்மதி

புதிய பகுதி

சோனியா அகர்வாலுக்கு டும் டும் டும்

சினி விசிட்



தொண்டர் ஆசிரியர்களின் விவகாரம்: நடந்தது என்ன?

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

# ஆன்மீகம்

## ஆலய வழிபாட்டு முறை



**சைவ** சமயிகள் இந்து ஆலயங்களுக்குச் செல்லுமுன் உடல் தூய்மை செய்ய வேண்டும். தூய ஆடை அணிந்து திருநீறு, சந்தனம், குங்குமம் முதலிய சைவ சமயச் சின்னங்கள் தரித்து, தூய மனதோடு தெய்வத் திருநாமங்களையோ, சுவாமி திருப்பாடல்களையோ, பொதுவாகச் சொல்லிக் கொண்டு செல்ல வேண்டும்.

தெய்வ சிந்தனையைத் தவிர வேறு எந்தச் சொல்லுக்கோ செயலுக்கோ இடம்கொடாமல் ஆலயம் சென்று, வலம் வந்து வணங்க வேண்டும். பின் உட்கோயில் சென்று வழிபட வேண்டும். அத்தோடு பிறர் வழிபாட்டிற்குத் தடையில்லாமல் ஒதுங்கி நின்று வழிபட வேண்டும்.

கோவிலுக்குப் புறப்பட்டுச் செல்லுவதிலிருந்து திரும்புவது வரையிலும் வேறு சிந்தனையின்றி மனதிற்குள் வேதநாம ஜெபம் செய்த வண்ணமிருக்க வேண்டும்.

இதுவே இந்து சமயம் கூறும் ஆலய வழிபாட்டு முறைமையாகும்.

*-சிவஸ்ரீ அ.அரசரெத்தினம், சேனையூர் - 06.*

## இறைவனை அவமானப்படுத்தாதீர்கள்

**இறை** வேண்டல் செய்யும்போது அல்லது குறை வாக்குரைக்கும் போது தம் தலையை மூடிக்கொள்ளாத ஒவ்வொரு பெண்ணும் தம் தலைவரை இகழ்ச்சிக்குள்ளாக்குகிறார். இது அவர் தலையை மழித்துவிட்டதற்கு ஒப்பாகும். தம் தலையை மூடிக்கொள்ளாத எந்தப் பெண்ணும் தம் கூந்தலை வெட்டிக் கொள்ளட்டும். இவற்றை இகழ்ச்சியாகக் கருதினால் அவர் தம் தலையை மூடிக்கொள்ளட்டும். (கொரி 11.5,6,7)

அன்புச் சகோதரிகளே, அன்று கபிரியேல் தேவதூதன் கன்னியான மரியாளிடம் தோன்றி, கர்த்தர் உம்முடனே வாழ்க! பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே. நீர் தேவகுமாரனைப் பெற்றெடுக்கப் போகிறீர் என்றதும் நான் கணவனை அறியேனே. எப்படி இது ஆகும் என்று கூறிய மரியாள், இறைவனின் வார்த்தைக்கு மதிப்பளித்து தன் தலையை மூடினாள், தேவகுமாரனை பெற்ற மரியன்னையே இறைவனுக்கு மரியாதை கொடுக்கும்போது, நீங்கள் அவருக்கு அவமரியாதை கொடுப்பது மட்டுமல்ல, அவரது ஆலயத்தையும் அசுத்தப்படுத்துபவர்களாகிறீர்கள். திருப்பலி வேளையில் சற்பிரசாத எழுந்தேற்ற நேரத்தில் இயேசு அங்கு பிரசன்னமாகிறார். (உண்மையிலேயே) என்று விசுவாசிக்கும் எந்தவொரு பெண்ணும் தன் தலையை மூடிக்கொள்ளாது ஆலயம் செல்ல மாட்டாள். இறைவனுக்கு மரியாதை கொடுங்கள். நிச்சயம் உங்கள் வேண்டுதல் கேட்கப்படும்.

*-ஜோசப் அருள்சாமி, இராஜவல்ல.*

## துஆவின் மூலம் தேவைகளைப் பெற்றுக்கொள்வோம்

**துஆ** என்பது, தாழ்ந்தவன் மிக மிக உயர்வானவனிடம் சரணடைந்து தன் தேவைகளைக் கேட்பதுதான் துஆ என்று வரைவிலக்கணம் கொடுக்கலாம். உண்மையில் இறைவன் ஒருவன். அவனே இவ்வுலகத்தைப் படைத்து பரிபாலித்துக் கொண்டிருக்கிறான். அனைத்து ஆற்றல்களும் அந்த அல்லாஹ்வுக்கு உரித்தான பண்புகளாகும். எனவே அவன் ஒருவனிடம் மாத்திரமே தமது தேவைகளைக் கேட்க வேண்டும். அவனால் மாத்திரமே மனிதனின் தேவைகளை நிறைவேற்ற முடியும். எனவே தமக்குத் தேவையான தேவைகளை அல்லாஹ்விடம் கெஞ்சி, அழுது (துஆ) கேட்க வேண்டும். மேலும் துஆ இம்மையிலும் மறுமையிலும் உள்ள எல்லா நலன்களையும் உள்ளடக்கி இருக்கின்றது.

துஆ கேட்கும் போது முதலில் உலகத்திற்காகவும் நாட்டுக்காகவும் ஊருக்காகவும் உறவினர்க்காகவும் குடும்பத்திற்காகவும் கேட்டு, பின்பு இறுதியாக தமது தேவைகளை அல்லாஹ்விடம் (துஆ) கேட்க வேண்டும். எந்த வேளையிலும் நாம் கேட்கின்ற துஆ அல்லாஹ்விடம் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதனை மறந்துவிடக்கூடாது.

எனவே எமது அன்றாடத் தேவைகளை அல்லாஹ்விடம் கேட்டுப் பெற்றுக்கொள்வதோடு மட்டுமல்லாது, நல்லவைகளையும் செய்து ஈருலகில் வெற்றி பெற அல்லாஹ் அருள் புரிவானாக.

ஆமேன்.

*-றஸீன் றஸ்மின், றஹ்மத்புரம்.*

---

## கவிதைப் போட்டி இல.649



பரிசுக்குரிய கவிதை

### சிரிப்பு

ஜெனீவாப் பேச்சு
வெற்றியா
தோல்வியா
ஒன்றுமே தெரியுதில்லை
செல்வன் அண்ணா
எப்பவும் சிரித்துக்கொண்டே
பேசுவதனால்.

*-எஸ்.சிவகுமார், வவுனியா.*

### பிஞ்சு மனங்களே...!

பிஞ்சு
மனங்களே
நாம் எல்லோரும்
நம் நாட்டு
ஜனங்களே
இனங்களே
போர்வைக்குள்ளானது
போல் - நம்மை
ஒற்றுமை போர்த்த
வேணுமே
நன்மையைச் செய்து
தீமையை விடுவோம்
பிஞ்சு மனங்களே!

*-காமீம் செய்னுலாப்தீன், கிண்ணியா - 05.*

### பகல் கனவு

இலங்கை மாதாவும்
இப்படித்தான்
பிரிந்து கிடக்கும் - தன்
மூவின மக்களையும்
குரோதம் மறந்து
ஒரே குடையின்கீழ்
ஒன்றிணைக்க
ஆசைப்பட்டாள்.
அது பகல் கனவு
போலவே
பலியாமல் போய்விட்டது.

*-கே.அல்.ஆஸாத், ஏறாவூர் - 03.*

### ஐயோ... ஐயோ...

போன தேர்தலோடு எங்கள்
ஊரை விட்டுப் போன
எம்.பி.மாமா திரும்பவும்
வாறாரு
ஆதரவு கேட்டு
அவரைப் பாத்து அழுவதா
சிரிப்பதா
ஐயோ..ஐயோ..

*-ஜெ.கிஷோக், மன்னார்.*

### எப்போது?

ஒரு சீலைக்குள்
நாம் மூவரும்
ஒன்றாகி விட்டோம்
ஆனால்
ஒரு இலங்கைக்குள்
மூவினமும்
ஒன்றாவது எப்போது?

*-அ.ந.அப்துல் றஹ்மான், பட்டியடிப்பிட்டி.*

### வா - ஜெனீ - வா

சமாதானச் சாளரத்தின்
விளிம்பிலோர் ஒளிக்கீற்று
மக்கள் இதழ்களிலும்
மகிழ்ச்சிக் கீற்றுக்கள்
இவற்றை
நிரந்தரமாக்கவில்லையே
ஜெனீவா?


*-அ.சந்தியாகோ, கண்டி.*

### மூடுங்கடி!

பிள்ளை கடத்த வாராண்டி
அநியாயம் செய்வாண்டி
போர்வையால மூடுங்கடி
பொல்லாத மாயாண்டி
புன்னகை ஏனோடி
மூடி ஒளிவோமடி!

*-எஸ்.சிதாரா கலைமேகம், மூதூர் - 07.*

## கவிதைப் போட்டி இல.652



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 08.03.2006.

கவிதைப் போட்டி இல.652
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772,
கொழும்பு.

### சிரிப்போம்

சீக்கிரமாய் சிரிப்போம்
ஏனென்றால் - அடுத்த நிமிடம்
சுனாமியால்... யுத்தத்தால்
அகதியாகலாம், அனாதையாகலாம்
கற்பெனும் பயிரை வேலி மேயலாம்
உறவை...உயிரை இழக்கலாம்
அதனால்தான் காற்றுள்ள போதே
சிரிப்பை தூற்றுவோம்.

*-அ.கா.மு.றிஸ்வின், மூதூர் - 01.*

### இனம் தெரியாதோர்

நாட்டில் நடப்பதெல்லாம்
நகைப்புக் கிடமானவைதான்
இனம் தெரியாதோர் இடக்கு
முடக்கு
சமாதானத்திலும் யுத்தம்
யுத்தத்துக்காகச் சமாதானம்
சமாதானப் பேச்சுக்கள் சக
லேதும் ஜெகசாலம்
மறைந்திருந்து நாம் வேடிக்கை
பார்ப்போம்.

*-சீ.தங்கவடிவேல், மட்டக்களப்பு.*

### சிரிப்பு

ஏளனச் சிரிப்பில்
ஆணவம் அழிகிறது!
அகங்காரச் சிரிப்பில்
தீவிரவாதம் ஒழிக்கிறது
பிள்ளைச் சிரிப்பில்
சாந்தமாய்ச்
சமாதானம் மிளிர்கிறது

*-கேக்கே டீன், ஏறாவூர் - 03.*

### கலங்கிய உள்ளம்!...

இந்தப் பிஞ்சுகளின்
உதடுகள்
சிரித்தாலும்
உள்ளம் அழுவது!
ஏகதலைவனுக்கு
மட்டுமல்ல...
எவருக்குமே
புரியப்போவதில்லைதான்!

*-காமில்ஜாவீத் பாத்திமாஹனா, ஏறாவூர் - 03.*





எமது முரசே!
ஆன்மீகம் முதல்
அரசியல் தகவல்...
அதிரடி அய்யாத்துரை
வரை
அனைத்துமே
அற்புதம்
பாப்பா முரசு முதல்
தகவல் பெட்டி ஈறாக
அறிவின் பால்
ஈர்த்தெடுத்து
ஆனந்தப்படுத்துகின்றது.
அற்புதன் ஆரம்பித்த
அதிசய முரசே
நீ அள்ளி வரும்
அனைத்துமே
அற்புதம்தான்.

*-மு.ஹ.சாதிக், மருதவூர்.*

# வாசகர் சாலை

### வருக முரசே!

நாட்டு நடப்புகளின் உண்மைகளையும், எனது சுவாசங்களான கவிதைப் பகுதி, சிறுகதைகள், உலகை வியக்க வைக்கும் வரலாற்று சிற்பங்களின் வருகைகள், மரபுக் கவி வரிகள், சிறப்புக் கவிதைகள் புத்தம்புது பொழிவுடன்... அட அத்தனையும் அருமையிலும் அருமை. இடைவேளையின்றி முரசே! நீ இனிதாய்...இளமையாய்...இலட்சியப் பாதையில் ஓடிவராமல் பறந்தே வா!... வாழ்த்துகிறேன்.

*-அ.கா.மு.றிஸ்வின், மூதூர் - 01.*

### அதிரடியாரும், காதிலபூவாரும் அருமை!

அன்பின் தினமுரசே,
நீ சுமந்து வரும் அத்தனை அம்சங்களும் அருமையிலும் அருமை. அதிலும் ஆணித்தரமான உன் ஆசிரியத் தலையங்கம், சம்பந்தப்பட்டோர் உள்ளத்தில் பசுமரத்தாணி போல உறைக்க வேண்டும். அச்சொட்டாக வரும் உனது செய்திப்பக்கத்தை கூட்டித்தருவாயா? அதிரடியாரும், காதிலபூவாரும் அருமையிலும் அருமை. இருவருக்கும் எக்காரணம் கொண்டும் லீவு வழங்க வேண்டாம்.

*-வேல் வேந்தன், பம்பைமடு.*

### தருபவள் நீ!

தினமுரசு தினமும் வராதா எனத்
தவிப்பவருள் நானும் ஒருத்தி
தரமான ஆக்கங்கள் தருபவள் நீ
தீங்கனிக் கவிதைகள் தருபவள் நீ
தாரகை நடுவிலோர் தண்மதி நீ
தரணி தனில் என்றும் வாழ்க நீ

*-எம்.அனுஜா, பாண்டிருப்பு.*

### வாசக நெஞ்சங்கள் வாழ்த்து!

தினமுரசு ஆசிரியர் அவர்கட்கு!
உங்களது ஆக்கங்கள் அனைத்தும் மிகவும் அருமையாகவும் கருத்தாழம் மிக்கவையாகவும் இருக்கின்றன. இது என் கருத்து மட்டுமல்ல, இங்கு - அதாவது கட்டாரில் தொழில் புரியும் அதிகமான முரசு வாசக நெஞ்சங்களின் கருத்து. எமது அனைவர் சார்பாகவும் எதிர்வரும் காலத்தில் முரசு மென்மேலும் சிறப்புற வெளிவர வேண்டும் என மனமார வாழ்த்துகின்றேன்.

*-அகமது சித்தீக், டோகா - கட்டார்.*

# உங்கள் பக்கம்

## 155, 145, 167, 102, 112 இல. பஸ் பயணிகளே கவனம்

**கொழும்பில்** தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளுக்கிடையில் சேவையில் ஈடுபடும் பஸ்களில் மிரட்டிப் பணம் பறிக்கும் கோஷ்டிகள் மிகச் சர்வ சாதாரணமாக செயற்பட்டு வருகின்றன. வாட்ட சாட்டமான, சிங்களம் பேசும் இளைஞர்களே இவ்வாறான கைங்கரியத்தில் ஈடுபட்டு வருகின்றனர். தம்மை இரகசியப் பொலிஸார் என்று கூறிக்கொள்ளும் இவர்கள், சிங்களம் பேச முடியாத தமிழ் மக்களை மிரட்டி பணம், நகைகள் போன்றவற்றை அபகரித்து வருகின்றனர். குறிப்பாக வடக்கு, கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த மக்களே காடைக்கும்பலின் கைவரிசைக்கு இலக்காகின்றனர். 155, 145, 167, 102, 112 ஆகிய இலக்க பஸ்களிலேயே இச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. 2,3 பேராக பஸ்ஸில் பயணிக்கும் இந்தக் கும்பல்கள், பயணிகளை நன்கு நோட்டமிட்டு, அவர்களிடம் கதை கொடுத்து, அவர்களினால் சிங்களம் பேசமுடியாது என்பதை அறிந்து கொண்டதும் அடுத்த பஸ் தரிப்பில் இறங்குமாறு வலுக்கட்டாயமாக இறக்கி, ஒதுக்குப்புறமான இடங்களுக்குக் கூட்டிச் சென்று அவர்களைப் பொலிஸ் நிலையங்ளுக்குக் கொண்டு செல்ல வேண்டாம் என்றால் பணம் தருமாறு கூறி அபகரித்துச் செல்கின்றனர். எனவே குறிப்பாக மேற்படி இலக்க பஸ்களில் பயணம் செய்யும் அப்பாவி தமிழ் மக்கள் கவனமாக இருக்க வேண்டும். அதே நேரம் முக்கியமாகப் பாதுகாப்புத் தரப்பினரும் தமிழ் அரசியல்வாதிகளும் அர்த்தபுஷ்டியான நடவடிக்கைகளை மேற்கொண்டு அப்பாவித் தமிழ் பேசும் மக்களைப் பாதுகாக்க வேண்டுமென கேட்டுக்கொள்ளுகின்றேன்.

*-இப்படிக்கு பாதிக்கப்பட்ட சீ.வைரமுத்து, கொழும்பு 13.*

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# ஆயுதக் கொள்வனவுக்கு சுவிஸில் நிதி சேகரிப்பு!
## புகார்களையடுத்து கண்காணிப்பு வேலைகள் ஜரூர்

புலிகள் இயக்கம் சட்டவிரோத நடவடிக்கைகளுக்கெனச் சுவிற்சர்லாந்தில் நிதி சேகரிப்பதாக வெளிவந்த குற்றச்சாட்டுகளையடுத்து சுவிஸ் அதிகாரிகள் இது தொடர்பான தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக சுவிஸ் வெளிவிவகார அமைச்சுப் பேச்சாளரொருவர் தெரிவித்தார். இலங்கை அரசாங்கமும் சர்வதேச மனித உரிமை அமைப்புகள் சிலவும் இவ் விடயத்தை சுவிஸ் அரசின் கவனத்துக்குக் கொண்டு வந்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜெனீவாப் பேச்சுவார்த்தைக்கெனப் புலிகளின் தூதுகோஷ்டி சுவிற்சர்லாந்துக்கு வந்து சேர்வதற்கு முன்னரும் பின்னரும் ஐரோப்பிய மற்றும் ஸ்கெண்டினேவிய நாடுகளிலிருந்து வந்து சேர்ந்த புலிகளின் முகவரமைப்புகளின் பிரதிநிதிகள் தொடர்பாகவும் முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

பிரான்சிலிருந்து புலிகளின் நிதி சேகரிப்பாளரான கிருபாகரனுடன் மேலும் பன்னிரண்டு பேர் சுவிஸ் வந்து சேர்ந்ததாகவும் இவர்கள் பிரான்சில் நிதி சேகரிக்கக் கையாளும் வழிமுறைகள் பற்றியும் எடுத்து விளக்கப்பட்டிருக்கிறது. சர்வதேச தமிழர் சம்மேளனத்தின் செயலாளர் அன்ரன் பொன்ராஜா தலைமையில் மேற்படி அமைப்பின் சுவிஸ் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் நிதி சேகரிப்புக் குறித்து ஆராயப்பட்ட விடயங்கள் குறித்தும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டிருப்பதாகவும் நம்பகமாகத் தெரியவருகிறது. சூரிச்சின் மட்ரஸ்ரர் என்ற இடத்திலுள்ள 'தமிழினி' இரவு விடுதியில் நிதி சேகரிப்பதற்காகக் கடந்த 26ஆம் திகதி நடைபெற்ற நடன நிகழ்ச்சி மற்றும் இரவு விருந்தில் கலந்துகொண்ட வர்த்தகர்களிடம் நிதி சேகரிக்கப்பட்டதாகவும் அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

இது தொடர்பாகச் சுவிஸிலுள்ள தமிழ் வர்த்தகர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதம் அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டிருப்பதோடு, வலுக்கட்டாயமாகவும் மிரட்டியும் பணம் பறிக்கும் முயற்சிகள் பற்றியும் எடுத்து விளக்கப்பட்டிருக்கிறது. சந்தேகத்துக்கிடமான சிலரின் சுவிஸ் வங்கிக் கணக்குகள் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாகவும் நம்பகமாகத் தெரிய வருகிறது. புலிகளின் சட்டவிரோத நிதி சேகரிப்பு மற்றும் ஆயுதக் கொள்வனவு தொடர்பான குற்றச்சாட்டுகள் பற்றிக் குறித்துத் தெரிவித்த சுவிஸ் பாதுகாப்புத்துறை அதிகாரி ஒருவர் கூறுகையில்,

இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள், படுகொலைகள் பற்றி பல ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் இலங்கையிலிருந்தும் கூட எமக்கு முறைப்பாடுகள் வந்துள்ளன. பேச்சுவார்த்தை மூலம் இலங்கையின் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுவதையே நாம் விரும்புகிறோம். ஆயுதக் கொள்வனவுக்கு நிதி சேகரிப்பதற்கு அனுமதிக்க முடியாது. அது மட்டுமல்ல, சுவிஸிலும் தமிழ் வர்த்தகர்களிடம் மிரட்டிப் பணம் பறிக்கப்பட்டதாக எமக்குப் புகார்கள் கிடைத்துள்ளன. விசாரணைகள் நடைபெறுகின்றன என்று சொன்னார்.

## ஐ.நா.செயலாளர் நாயகம் பதவியை ஜயந்த கைப்பற்றுவாரா?

ஐ.நா.செயலாளர் நாயகம் கொபி அனானின் பதவிக் காலம் இவ்வருடம் முடிவடைவதால், அடுத்த செயலாளர் நாயகமாக இலங்கையின் முன்னாள் சமாதானச் செலகப் பணிப்பாளர் கலாநிதி ஜயந்த தனபாலவைத் தெரிவு செய்வதற்கான பிரசார முயற்சிகளை அரசாங்கம் முடுக்கிவிட்டுள்ளது. கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக சிவில் யுத்தத்தால் சீரழிந்து, சின்னாபின்னமாகியிருக்கும் இந்த நாட்டைக் கட்டியெழுப்ப ஐ.நா.செயலாளர் நாயகம் பதவி உதவுமென அரசாங்கம் கருதுகிறது. இலங்கைப் பிரச்சினையில் ஐ.நா.தலையிடுவதை விரும்பும் சக்திகளும் ஜயந்த தனபாலவுக்கு ஆதரவாகச் செயற்பட முன்வந்துள்ளன. 67 வயதான ஜயந்த தனபால, ஐ.நா ஆயுதப் பரிகரணக் குழுவின் தலைவராக ஐந்தாண்டுகள் பணிபுரிந்தவரென்பது குறிப்பிடத்தக்கது.




ஜெனீவாவிலுள்ள ஐ.நா. செயலகத்துக்கு முன்பாக கடந்த 22ஆம் திகதி இலங்கையர்கள் புலிகளின் படுகொலைக் கலாசாரத்தையும் மனித உரிமை மீறல்களையும் எதிர்த்து நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணியின் போது பிடிக்கப்பட்ட படம்.

## ஜெனீவாவில் அன்ரன் பாலசிங்கம் நிமால் சிறிபால டி சில்வா, ஹெக்லண்ட் தர்க்கம்

இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் வயது குறைந்த பிள்ளைகளைப் பலாத்காரமாகப் பிடித்துச் சென்று தமது படையணிகளில் புலிகள் சேர்க்கின்றனரென்று ஜெனீவா பேச்சுவார்த்தையின் போது அரச தரப்புத் தூதுகோஷ்டியின் தலைவரான நிமால் சிறிபால டி சில்வா குற்றஞ்சாட்டினார். இடையில் குறுக்கிட்ட அன்ரன் பாலசிங்கம், "சிறுவர்களைப் படையணிகளில் சேர்ப்பது தொடர்பாக 2002ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் எதுவுமே குறிப்பிடப்படவில்லை. எனவே ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படாத எதனையும் பற்றிப் பேசமுடியாது" என்று கூறினார். இதனை மறுதலித்த அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, "வயது குறைந்த பிள்ளைகளைப் பெற்றோரிடமிருந்து பலாத்காரமாகப் பிடித்துச் செல்வது மனித உரிமைகளோடு சம்பந்தப்பட்ட யுத்த நிறுத்த மீறல்" என்று பதிலடி கொடுத்தார். "யுனிசெவ், சர்வதேச மன்னிப்புச் சபை போன்ற சர்வதேச அமைப்புகளும் இது தொடர்பாகப் புலிகள் இயக்கத்தின் மீது குற்றஞ் சுமத்தியுள்ளன" என்றார். அப்போது குறுக்கிட்ட இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட், "2380 ஆட்கடத்தல் சம்பவங்களில் புலிகள் இயக்கம் ஈடுபட்டுள்ளது. இவற்றில் சுமார் 600 பேர் இளைஞர், யுவதிகளாவர். ஏனைய 1780 பேரும் வயது குறைந்த பிள்ளைகளாவர்" என்றார். விக்கித்துப் போன பாலசிங்கம் திக்குமுக்காடினார். அரசு தரப்பு கெட்டித்தனமாக சிறுவர் விவகாரத்தைக் கையாண்டது.

## யாழ். வழித்தோன்றல்கள் வாழும் ஒரு தமிழ் கிராமம் குருநாகலில்

இலங்கையில் திறந்தவெளி மிருகக் காட்சிச்சாலையை உருவாக்குவதற்கு நான்கு இடங்கள் தெரிவு செய்யப்பட்டிருக் கின்றன. இவற்றிலொன்றாக குருநாகல் மாவட்டத்தின் வடக்கே எல்லைப் புறத்தில் மகாகல்கமுவ என்ற இடம் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கின்றது. இங்கு நூற்றுக்கு நூறு சதவீதம் வாழும் தமிழ் மக்கள் இத் திட்டத் துக்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். அனுராதபுரத்துக்கும் குருநாகல் மாவட்டத்துக்குமிடையிலான கல்கமுவ நகரத்திலிருந்து ஒரு கிலோ மீற்றர் உள்ளே செல்ல ஆரம்பமாகும் இந்தப் பின்தங்கிய கிராமம், சுமார் நான்கு கிலோ மீற்றர்கள் வரை நீண்டு செல்கிறது. இத் தமிழ் கிராமத்தைச் சூழச் சிங்களக் கிராமங்களே இருந்தாலும் மக்கள் பிரச்சினைகளின்றி அந்நியோன்யமாகவே வாழ்ந்து வருகின்றனர். சங்கிலிய மன்னன் காலத்தில் கத்தோலிக்கர்களாக மாறிய சைவ சமய மக்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகவும் அதிலிருந்து தப்பியோடி வந்து மகா கல்கமுவ கிராமத்தில் தஞ்சமடைந்த மக்களின் வழித்தோன்றல்களே இப்போதும் அங்கு வாழ்வதாகவும் வரலாறு கூறுகிறது. சுமார் ஆயிரத்துக்கு மேற்பட்ட சனத் தொகையைக் கொண்ட இக் கிராமத்தில் ஒரேயொரு ரோமன் கத்தோலிக்கத் தமிழ் பாடசாலை மட்டுமே உள்ளது. அங்குள்ள ஒரேயொரு கத்தோலிக்கத் தேவாலயத்தில் தமிழில் மட்டுமே ஆராதனைகள் நடை பெறுகின்றன. சிங்களத்தில் நன்கு பரிச்சயமுடைய இத் தமிழ் மக்களின் தமிழ் பேச்சு வழக்கில் சில சிங்களச் சொற்களின் தாக்கத்தையும் காணக் கூடியதாக இருக்கிறது. பாரிய குளமொன்றும் குகைகளும் கூட இங்கு காணப்படுகின்றன. வரலாற்றாசிரியர்கள் இக் கிராமம் பற்றி ஆய்வு நடத்த வேண்டுமென்று அக் கிராம மக்கள் கோருகின்றனர்.

## ஊடகப் பயங்கரவாதம் இதுதான்!

வடக்கு - கிழக்கில் அரச ஆயுதப் படைகளின் துணையுடன் இயங்கும் துணைப் படைகளே கடந்த டிசம்பர், ஜனவரி மாதங்களில் அப்பாவி தமிழ் மக்களைக் கொன்று குவித்தனவென்று அன்ரன் பாலசிங்கம் தெரிவித்த குற்றச்சாட்டை, அரச தூது கோஷ்டியும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் வன்மையாக மறுத்தன. இதனால் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இயங்கும் ஆயுதக் குழுக்கள் மற்றும் தனிநபர்களென்ற வார்த்தைப் பிரயோகத்தை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைக்குப் புலிகள் தள்ளப்பட்டனர். அதாவது அரசியல் வேலைக்கென அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வரும் புலிகளே ஆயுத வேலைகளைச் செய்வதாக அரச தரப்பு அழுத்தந்திருத்தமாகக் குற்றஞ்சாட்டியது என்று கூறினார் அரசியல் ஆய்வாளர் மணிவண்ணன். அதனால் இப்போது ஈ.பி.டி.பி.யினர் ஆயுதங்களுடன் திரிவதாக புலிகளின் நிதர்சனம் இணையத்தளம் செய்திகளை வெளியிட்டு வருகிறது. செய்திகளின் நம்பகத்தன்மை பற்றிக் கொஞ்சமேனும் அக்கறைப்படாத தமிழ் ஊடகங்கள் சில அவற்றைப் பிரசுரித்து மக்களை ஏமாற்றுகின்றன. இதனையே ஊடகப் பயங்கரவாதமெனக் குறிப்பிடப்படுகிறது. வெலிக்கடைச் சிறையில் கொல்லப்பட்ட குட்டிமணி, தங்கத்துரை போன்ற தமிழ் தலைவர்களைத் தவிர அமிர்தலிங்கத்திலிருந்து யோகேஸ்வரன், சரோஜினி யோகேஸ்வரன் ஏன் லக்ஷ்மன் கதிர்காமர் வரை கொன்றவர்கள் புலிகள்தான் என்பதை இந்த ஊடகங்கள் என்றுமே தெரிவிக்க மாட்டா. ஏனென்றால் புலிகளின் துப்பாக்கிகள் ஊடகவியலாளர்களின் நெற்றிப் பொட்டுகளில் வெடிவைத்துவிடும். ஆகக் குறைந்தது பத்திரிகைப் பிரதிகளையாவது எரித்து விடும் என்றும் விளக்கினார் அவர்.

## ஈராக்கின் ஸியா - சுனி மோதலுக்குக் கண்டனம்

ஈராக்கின் தலைநகரான பாக்தாத்தில் ஸியா - சுனி முஸ்லிம் பிரிவுகளுக்கிடையில் ஏற்பட்டிருக்கும் மோதல், முழு இஸ்லாமிய உலகத்தையுமே தலைகுனிய வைக்கும் செயல். பள்ளிவாசல்களுக்குள்ளும் சிறைக்கூடங்களுக்குள்ளும் புகுந்து தாக்குமளவுக்கு நிலைமை சீர்கெட்டுள்ளது. சம்பந்தப்பட்ட தரப்புகள் அடாவடித்தனங்களைக் கைவிட்டு மனித உயிர்களுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்று கொழும்பு இஸ்லாமிய ஐக்கிய அமைப்பு விடுத்திருக்கும் அறிக்கையில் தெரிவித்துள்ளது. ஏகாதிபத்திய சக்திகளின் தந்திரோபாயங்களுக்குள் இஸ்லாமிய சமூகம் சிக்கக் கூடாதென்றும் அறிக்கையில் கோரப்பட்டுள்ளது.

## யுத்தத்தால் அநாதைகளான மூவினப் பிள்ளைகளுக்கும் உதவி

யுத்தம் காரணமாகப் பெற்றோர்களை இழந்து அனாதரவான நிலையில் கைவிடப்பட்ட சிறுவர்களைப் பராமரித்து, கல்வியூட்டி வருகின்ற வஜிர ஸ்ரீ புனர்வாழ்வு சிறுவர் இல்லம் ஆரம்பிக்கப்பட்டு 22 வருடங்கள் நிறைவடைகின்ற போதிலும் சமூக சேவைகள் அமைச்சர் ஒருவர் முதற் தடவையாக இப்போது தான் எமது இல்லத்துக்கு வருகை தந்துள்ளார் என்றும், அமைச்சர் அவர்களின் வருகை தனக்கும் இங்குள்ள சிறுவர்களுக்கும் பெரிதும் மகிழ்ச்சியை அளிப்பதாகவும் நுகேகொடை ஸ்ரீ ஜயவர்த்தனபுர வஜிர ஸ்ரீ புனர்வாழ்வு சிறுவர் இல்லத்தின் ஸ்தாபகரும், நிறைவேற்றுப் பணிப்பாளருமான கலாநிதி ஹுனுபலகம வஜிர ஸ்ரீ நாயக்க தேரர் தெரிவித்துள்ளார். மேற்படி சிறுவர் நிலையத்தைப் பார்வையிடுவதற்காக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடந்த 24ஆம் திகதி அங்கு சென்றிருந்த சமயம் அமைச்சரை வரவேற்றுப் பேசும் போதே தேரர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேற்படி சிறுவர் இல்லம் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு அனாதரவான நிலையில் கைவிடப்பட்ட சிறுவர்களைப் பராமரித்து, அவர்களுக்கு கல்வியறிவூட்டி வருவதாகவும், இந்த இல்லத்தில் மூவினத்தையும் சேர்ந்த சிறுவர், சிறுமியர்கள் வாழ்ந்து வருவதாகவும் தெரிவித்த தேரர், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் கொள்கையின்பால் தானும் ஈர்க்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சரைப் போல் அரசியல் உயர் மட்டத்திலுள்ளவர்கள் இருந்தால் இந்த நாட்டில் இனப்பிரச்சினையே இருக்காது என்றும் தெரிவித்தார்.

## நுழைவுக் கட்டணம் 7500 ரூபா

ஜெனீவா, பிரைபோர்ன் நகரி லுள்ள ஸ்ரட் மண்டபத்தில் புலிகள் இயக்கம் நடத்திய நிதி சேகரிப்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்ட புலம் பெயர் வாழ் தமிழர்களிடமிருந்து தலா நூறு சுவிஸ் பிராங் (7500 ரூபா) வீதம் அறவிடப்பட்டதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன. அந் நகரிலுள்ள தமிழ் வர்த்தக நிலையங்களில் இந்த நிதி சேகரிப்புத் தொடர்பான சுவரொட்டிகள் பேச்சுவார்த்தை முன்னரே ஒட்டப்பட்டிருந்தன. அத்துடன் நேரடியாகச் சென்றும் அழைப்புகள் விடுக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## யுத்தக் குற்றவாளிகள்

1992 - 1995ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஓர் இலட்சத்துக்கு மேற்பட்ட மக்களைக் கொன்று குவித்தமைக்காகச் செர்பிய, மொன்டிநிகிரோ அரசுகளுக்கெதிராக யுத்தக் குற்றங்களுக்கான சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. யுகோஸ்லாவியா, அல்பேனியா போன்ற நாடுகளில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக இனப்படுகொலைகள் இடம்பெற்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. வழக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட்டு விட்டதாகவும் அநேகமாக வருட இறுதிக்குள் தீர்ப்பு வழங்கப்படலாமென்றும் தெரிவிக்கப்படுகிறது.

## மாகாண மட்டங்களில் இருமொழிப் பயிற்சி நிலையங்கள்

அரச கருமங்கள் சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் ஆற்றப்பட வேண்டுமென்ற இரு மொழிக் கொள்கைக்கு அமைச்சரவை அங்கீகாரமளித்ததையடுத்து, மாகாண மட்டத்தில் மொழிப் பயிற்சி நிலையங்களை அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அரசாங்க ஊழியர்கள் இரு மொழிகளிலும் பரிச்சயமுடையவர்களாக இருக்க வேண்டுமென்ற அரசாங்கத்தின் கொள்கைக்கு இணங்கவே இத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இரு மொழிகளிலும் ஆற்றலுள்ள ஊழியர்களுக்கு சலுகைக் கொடுப்பனவு, சம்பள அதிகரிப்பு ஆகியவை வழங்கவும் அரசு உத்தேசித்துள்ளது. தமிழும் உத்தியோகபூர்வ மொழியாகப் பிரகடனப்படுத்தப்பட்டு சுமார் பதினெட்டு வருடங்கள் கழிந்துவிட்ட நிலையிலும் சிங்களப் பகுதிகளிலுள்ள அரச நிறுவனங்களுடன் தமிழில் தொடர்பு கொள்ள முடியாத நிலையே இன்னமும் நிலவுவதாக அரசியல் விவகார, ஒருங்கிணைப்பு அமைச்சின் பேச்சாளரொருவர் கூறினார். எழுதுவினைஞர்கள், சுருக்கெழுத்தாளர், தட்டெழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர்கள் பதவிகளில் உள்ளவர்களுக்கு இந்த விசேட பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன என்றும் அவர் சொன்னார். கொழும்பில் தமிழ் மக்கள் பெரும் எண்ணிக்கையில் வாழும் வெள்ளவத்தை, கொட்டாஞ்சேனை, பம்பலப்பிட்டி ஆகிய பொலிஸ் நிலையங்களில் கூடத் தமிழ் மக்கள் தமது தாய்மொழியில் முறைப்பாடுகளைப் பதிவு செய்ய முடியாத துரதிர்ஷ்ட நிலைமை இன்னமும் நிலவுவதாகக் குறிப்பிட்ட அவர், இனப் பிரச்சினை மோசமடைய இவ்வாறான பாரபட்சங்களும் காரணமென்று குறிப்பிட்டார்.

## தமிழக சட்டமன்றத் தேர்தலில் பா.ம.க.வும் சிறுத்தைகளும் மோதல்

தமிழகத்தில் செயற்பட்டுவரும் புலிச் சார்புக் கட்சிகளான பாட்டாளி மக்கள் கட்சியும் அதன் கூட்டாளிக் கட்சியான விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பும் எதிரெதிர் கூட்டணிகளில் சேர்ந்து போட்டியிடுகின்றன. பாட்டாளி மக்கள் கட்சிக்கு தி.மு.க கூட்டணியில் சேர்ந்து போட்டியிட இட ஒதுக்கீடு செய்த தி.மு.க. தலைவர் கருணாநிதி, விடுதலைச் சிறுத்தைகள் அமைப்புக்கு இடமளிக்க மறுத்துவிட்டார். இதனையடுத்து புலிகளின் எதிரியெனக் கருதப்படும் ஜெயலலிதாவின் அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வோடு இணைந்து தேர்தலில் போட்டியிட சிறுத்தைகள் அமைப்பின் தலைவரான திருமாவளவன் முன்வந்துள்ளார். திருமாவளவனின் கட்சிக்கு ஒன்பது தொகுதிகள் தேர்தல் போட்டிக்கென ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. எதிர்வரும் தமிழக சட்டசபைத் தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் இணைந்து போட்டியிடும் பாட்டாளி மக்கள் கட்சி விரும்பினால் அதற்கென ஒதுக்கப்பட்ட தொகுதிகளில் சிலவற்றை விடுதலைச் சிறுத்தைகளுக்கு ஒதுக்கித் தரலாமென்று கருணாநிதி அறிவித்திருந்தார். எனினும் பா.ம.க.தலைவர் டாக்டர் இராமதாஸ் இதற்கு இணங்க மறுத்துவிட்டார்.

## கல்முனைப் பிரச்சினை

சுனாமியால் பாதிக்கப்பட்ட கல்முனை கரையோரப்பிரதேச மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முகமாக அப்பகுதி முஸ்லிம் அரசியல்வாதிகள் இவ்வாரம் அவர்களை சந்தித்து பேசவுள்ளனர். நிரந்தர வீடுகள் அமைப்பதற்கான காணியைப் பெறுவது பற்றி ஆராயப்பட்டு வருகிறது.

தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:- 1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):- 011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

## முரசம்

### அரசு சிந்தித்து செயலாற்ற வேண்டிய தருணம்

**அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.**

**ஜெனீவாவில்** அரசுக்கும் புலிகளுக்கும் நடந்த பேச்சுவார்த்தைகள் இன்னொரு திகதிவரை நீடிக்கப்பட்டிருப்பது ஓரளவு ஆறுதலான விடயம். அந்தப் பேச்சுக்களின் போது அன்ரன் பாலசிங்கம், புலிகளையும், புலிகளின் முகவர்களையும் தவிர்ந்த வடக்கு - கிழக்கில் இயங்கும் அனைத்துத் தரப்பினரையும் ஒரே சொல்லில் துணைப் படைகள் என்று கூறியிருப்பதானது அறிவீனமாகும். புலிகளின் போராட்ட வழிமுறையின் தவறுகளைச் சுட்டிக்காட்டி அல்லது அதற்கு எதிரான ஜனநாயக வழியை மக்களுக்குக் காட்டும் சக்திகளையும் துணைப் படைகளின் பட்டியலில் சேர்த்துக் கூறியிருக்கின்றார். இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தான பிறகு சமாதானம் மீதான விருப்பத்தோடும், தமது தற்காப்புக்காகக் கொண்டிருக்கும் ஆயுதங்கள் விவகாரம் ஒரு பெரும் பிரச்சினையாகிவிடக்கூடாது என்பதற்காகவும் ஈ.பி.டி.பி., புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப்., வரதர் அணி போன்ற கட்சிகள் ஆயுதங்களை அரசாங்கத்திடம் போர் நிறுத்தக் கண்காணிப்பாளர்களின் முன்னிலையில் கையளித்தன. பின்னர் அரசியல் பணி செய்வதாக வந்த புலிகள் இந்தக் கட்சிகளின் உறுப்பினர்களைத் தேடித்தேடி, வீட்டிலும், கோயில்களிலும், திரையரங்குகளிலும், பொது இடங்களிலுமாக சுட்டும், வெட்டியும், படுகொலை செய்தனர். அரசு இக்கட்சிகளின் அலுவலகங்களுக்குப் பாதுகாப்பு வழங்கிய போதும் உறுப்பினர்கள் புலிகளால் படுகொலை செய்யப்பட்டனர். இவ்வாறு தம்மீது படுகொலைகளைப் புரிவதற்கே ஒப்பந்தத்தில் தமது ஆயுதங்களைக் களைய வேண்டும் என்பதை ஒரு சரத்தாகப் புலிகள் சேர்த்திருந்தனர் என்று மேற்படி அரசியல் கட்சிகள் குற்றஞ் சாட்டியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

அடுத்ததாக, கருணா புலிகளின் தலைமையோடு பிளவுபட்டுப் பிரிந்த பிறகு பெரும் படையணி கொண்டு தாக்கியதையும், கருணாவுக்கு ஆதரவானவர்களை கொழும்பு உட்பட கட்டார் வரை தேடிச் சென்று படுகொலை செய்ததையும் இதே சமாதான ஒப்பந்த காலத்திலேயே புலிகள் செய்தனர். இதற்கு எதிர்த் தாக்குதலை கருணா ஆரம்பித்தபோது, துணைப் படை என்றும் அவர்களின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும் என்றும் கூறுவது வினோதமாகும்.

அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஆயுதங்களைக் கொண்டு நடமாடுவது ஒப்பந்த மீறல் என்றால், புலிகள் புரிந்த படுகொலைகள், தாக்குதல்கள் என்பவற்றுக்கெல்லாம் ஆயுதங்களை ஏந்தாமலா புலிகள் செய்தனர்? அதை ஒப்பந்தத்தின் எந்த சரத்தில் சேர்ப்பது? குறிப்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு அனுப்பப்பட்ட தற்கொலைக் குண்டுதாரி, கொள்ளுப்பிட்டி பொலிஸில் குண்டை வெடிக்க வைத்ததையும் கூறலாம் என்று அரசியல் விமர்சகர்கள் கூறுவதும் சிந்தனைக்குரியதாகும்.

இப்போது ஈ.பி.டி.பி.யினர் தினமுரசு பத்திரிகை விநியோகத்துக்கு வரும்போதும், வேறு தேவைகளுக்காக நடமாடும் போதும் யாழ். குடா நாட்டில் துப்பாக்கிகளோடு திரிவதாகத் திட்டமிட்டு பிரச்சாரப்படுத்தி வருவதையும் புலிகள் கச்சிதமாகச் செய்து வருகின்றனர். இதற்கு அங்கு இயங்கும் ஊடகங்களும் ஒத்துப்பாடுவது அவர்களின் அடிமைத்தனத்தையே வெளிப்படுத்துகிறது.

ஆகவே ஜெனீவா பேச்சுவார்த்தைகள் நம்பிக்கை தரும்படியாக அமையவில்லை என்பதே உண்மையாகும். அது தவிர்வும் மாற்று ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள் மீதான படுகொலைகளோ, படைத்தரப்பு மீதான தாக்குதல்களோ முடிவுக்கு வரும் என்ற உத்தரவாதமும் எதுவும் கொடுக்கப்படாத துர்ப்பாக்கியமான சூழல் இன்னும் நீடித்துக் கொண்டிருப்பதை அவதானிக்க முடிகிறது. இந்த விடயத்தில் மிகக் கடுமையான - முன்னெச்சரிக்கையான ஏற்பாடுகளை எடுக்க வேண்டியுள்ளது.

இதற்கிடையே சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் குறித்த பார்வை இரண்டாம் பட்சமாகிப் போயிருப்பதும் கவலைக்குரியதாகும். பாதிக்கப்பட்ட சுனாமி அகதிகள் தமக்கான அபிவிருத்தியை வலியுறுத்தி போராட்டம் நடத்துகின்ற நிலைமை கவனத்தில் எடுக்கப்பட்டுத் தீர்வு காணப்படவேண்டும். ஏற்கனவே குறிப்பிட்டு வந்ததைப் போல மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்கும், அதோடு ஒட்டிய அன்றாடப் பிரச்சினைகளுக்கும் சுமுகமான தீர்வைக் காணாமல் வெறுமனே சமாதானம் பேசிக் கொண்டிருக்க முடியாது. தொண்டர் ஆசிரியர்களின் விவகாரம் உட்பட அவ்வப்போது அரச தொழில் துறைசார் ஊழியர்களின் போராட்டங்கள் சாதாரண மக்களின் இயல்பு வாழ்வைப் பாதிப்பதாகவே அமையும். ஆகவே, அரசின் தீர்க்கமானதும், விரைவானதுமான செயற்பாடு அவசியமாகும்.
இல்லையெனில், நாளுக்கு நாள் நெருக்கடி அதிகரிப்பதைத் தவிர்க்கமுடியாமல் போகும்.

■■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

**எரிக்** சொல்ஹெய்மின் ஏற்பாட்டில் நான்கு வருடங்களுக்கு முன்னர் ரணில் விக்கிரமசிங்காவும் வேலுப்பிள்ளை பிரபாகரனும் செய்து கொண்டதே யுத்த நிறுத்த ஒப்பந்தம். அது அர்த்தபுஷ்டியுடன் அமுல்படுத்தப்படவில்லை என்பதே யுத்தத்தில் சம்பந்தப்பட்டிருந்த அரசாங்கத்தினதும் புலிகளினதும் ஏகோபித்த நிலைப்பாடாகும். இதனால்தான் அதனை அர்த்தபுஷ்டியுடன் அமுல்படுத்தும் வழிவகைகள் பற்றி ஆராய்வதற்காக இருதரப்பும் ஜெனீவாவில் கூடிப் பேசின. மீண்டும் ஏப்ரல் மாதம் 19-21 ஆம் திகதிகளில் ஜெனீவாவில் கூடிப் பேசுவதெனவும் இரு தரப்புகளும் இணங்கியுள்ளன. பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக அமைந்தன வென்று அரசாங்கம் மார்தட்டிக் கொள்கிறது. அரசாங்கம், ஜெனீவாவிலொன்றும் பேச்சு முடிந்த பின்னர் வேறொன்றும் பேசுவதாகத் தமிழ்ச்செல்வன் குற்றஞ்சாட்டுகிறார். யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை அட்சரசுத்தமாக அமுல்படுத்த அரசாங்கம் தவறினால் மீண்டும் யுத்தத்துக்குப் போவதைத் தவிர வேறு வழியில்லை என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

துணைப் படைகளென்று சில அமைப்புகளின் பெயரைக் குறிப்பிட்டு, அரச படைகளின் உதவியுடன் இவை வடக்கு - கிழக்கில் அப்பாவி மக்களைக் கொன்றனவென்று தனது முதல் நாள் உரையில் குற்றஞ் சாட்டினார். அன்ரன் பாலசிங்கம். அதே உரையின் இறுதியில், யுத்தநிறுத்த ஒப்பந்த மீறல்கள் பற்றி வாதப் பிரதிவாதங்களில் ஈடுபடுவதில் அர்த்த

விடயம். இலங்கை அரசும் புலிகளும் விடுத்த எட்டு பந்திகளைக் கொண்ட கூட்டறிக்கையில், நான்காவது பந்தி கூறுவதாவது :- மிரட்டல்கள், வன்செயல் நடவடிக்கைகள், ஆட்கடத்தல்கள், படுகொலைகள் ஆகியவை இல்லாத ஒரு சூழ்நிலையை ஏற்படுத்துவதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ள இலங்கை அரசும் புலிகள் இயக்கமும் இணக்கம் கண்டுள்ளன.

அத்துடன், "வடக்கு - கிழக்குச் சிறுவர் களைப் போராளி களாகச் சேர்ப்பது உட்பட, அப்பகுதிச் சிறுவர்களின் நலன் சார்ந்த விடயங்கள் குறித்து இரு தரப்பும் கலந்துரையாடின"

## ஊரிலிருந்து....



வலிகாமம் பகுதியில இப்ப விவசாய அறுவடை அமோகமா நடக்குது. மலைநாட்டு காய்கறிகளான உருளைக்கிழங்கையும், லீக்சையும், கோவாவையும் பொன் விளையிற செம்மண் பூமி விளைவிச்சு தள்ளிக் கொண்டிருக்குது. மறுபுறம் எண்டுமில்லாதமாதிரி சின்ன வெங்காயமும் அமோக விளைச்சல் நடக்குது.

அந்தப்பகுதியில கமக்காரர் அறுவடை செய்த மரக்கறிகளை ஒரு கோஷ்டி இரவோட இரவாய்க் களவெடுத்துக் கொண்டிருக்குது. குடா நாட்டில இருந்து வாற பத்திரிகைகளும் சின்னதாய் ஒரு பெட்டிச் செய்தி போட்டதோட சரி. மற்றப்படி பொலிஸில ஒருத்தரும் முறைப்பாடு கூடச் செய்யவில்லையாம். சரி, அப்ப களவு போற மரக்கறிகளுக்கு என்ன நடக்குது? ஒழுங்காய் வன்னிக்குப் போகுதாம். தாம் இடை நிறுத்தியிருக்கிற வரி வசூலிப்பை பொருளாய் எடுத்து சரிக்கட்டினமாம்.

பாடின வாயும் ஆடின காலும் சும்மா இருக்காது எண்டது உண்மைதான்.

அர்த்தபுஷ்டியுடன் அமுல்படுத்துவதற்காகவே பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால், பேச்சுவார்த்தையில் பேசப்பட்ட விடயங்கள் நம்பிக்கை தருவதாக இல்லை.

# ஜெனீவா பேச்சு; ஓர் நேர் வெட்டுமுகம்

**நரன்**



**சுவிற்சர்லாந்தில் சட்டவிரோத நிதி சேகரிப்பு நடவடிக்கைகளில் சூத்திரதாரியெனக் கருதப்படும் அன்ரன் பொன்ராஜா, அன்ரன் பாலசிங்கத்தின் மனைவி அடேல் பின்புறம் காணப்படுகிறார்.**

மில்லையென்றும் ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டுமென்றும் பாலசிங்கம் கூறினார். பாலசிங்கம் தனது உரையில் யாழ்.குடாநாட்டுப் பிரச்சினைகள் பற்றியே குறிப்பிட்டுப் பேசினார். உயர் பாதுகாப்பு வலயம், விவசாயம், மீன்பிடி, மக்களின் வீடுகளிலிருந்து இராணுவம் வெளியேறுதல், புலிகளின் உறுப்பினர்கள் அரசியல் வேலைகளுக்கென அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வருதல் போன்றவை பற்றியும் பாலசிங்கம் தொட்டுச் சென்றார்.

அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, வடக்கு - கிழக்கில் சட்டத்தையும், ஒழுங்கையும் புலிகள் சீர்குலைத்தனரென்றும் மாற்றுக் கருத்துக் கொண்டவர்கள் மற்றும் படையினர் மீது தாக்குதல்களை நடத்தி, அழித்தொழிப்பதாகவும் மனித உரிமை மீறல்களில் ஈடுபடுகின்றார்களென்றும் சுட்டிக் காட்டினார். அரசாங்கத்தினால் அனுப்பி வைக்கப்பட்ட பொருட்களுக்கும் வடக்கு - கிழக்கு விவசாய உற்பத்திகளுக்கும் புலிகள் வரிகள் அறவிடுவதால் மக்கள் படும் திண்டாட்டங்கள் பற்றியும் சுட்டிக் காட்டினர்.

இந்த நிலையில், இப் பேச்சுகளின் மூலம் பெரிதாக எதையும் எதிர்பார்க்க வேண்டாமென்றும் யதார்த்த நிலையைக் கணக்கிலெடுக்குமாறும் முதல் நாள் உரையில் கூறிய எரிக் சொல்ஹெய்ம், இரண்டாம் நாள் பேச்சுகளின் முடிவில் எதிர்பார்த்ததைவிடக் கூடிய பலன் கிட்டியதாகக் குறிப்பிட்டார். இந்தப் பின்புலத்தில்தான் ஜெனீவா பேச்சைப் பார்க்க வேண்டியுள்ளது. கடந்த டிசம்பர், ஜனவரி மாதங்களில் வடக்கிலும் கிழக்கிலும் உச்சம் பெற்றிருந்த படுகொலை வேகம், புலிகள் ஜெனீவாப் பேச்சுக்கு வர இணக்கம் தெரிவித்ததையடுத்து இது குறைந்தது வரவேற்கத்தக்கது. தாங்கள் படுகொலைகளைச் செய்யவில்லை யென்றும் பொங்கு தமிழ் படையும் மக்கள் படையுமே இக் கொலைகளைச் செய்ததாகவும் கூறிய புலிகள், இனிமேலும் அப்படுகொலைகள் இடம்பெறாவண்ணம் மேற்படி குழுக்களைக் கட்டுப்படுத்தத் தங்களால் முடியுமென்றும் ஜெனீவாவில் தெரிவித்துள்ளனர். ஆக, இப் படுகொலைகளின் சூத்திரதாரிகள், பின்னணியில் செயற்பட்டவர்கள் யாரென்பதை இங்கு விளங்கப்படுத்த வேண்டிய தேவையில்லை. அத்துடன் படுகொலைகள், ஆட்கடத்தல்கள், சிறுவர்களைப் படையணிகளில் சேர்த்தல் போன்ற மக்கள் விரோத நடவடிக்கைகளைக் கைவிடப் புலிகள் இணக்கம் தெரிவித்திருந்தமையும் வரவேற்கத்தக்கது. புலிகள் இவற்றைக் கைவிடுவார்களா? இல்லையா? என்பதைக் காலம்தான் தீர்மானிக்க வேண்டும். ஆனாலும் வடக்கு - கிழக்கில் தற்காலிகமாகவாவது அமைதி நிலவச் செய்தமைக்காக இலங்கை அரசையும் சர்வதேச சமூகத்தையும் பாராட்டத்தான் வேண்டும். அத்துடன் மஹிந்த ராஜபக்ஷ அதிகாரத்துக்கு வந்தால் யுத்தம் வெடிக்குமென்று பிரசாரம் செய்தவர்களுக்குத் தீனிபோட்ட புலிகள், மஹிந்த பதவிக்கு வந்து மூன்று மாதங்களுக்குள்ளேயே வன் செயல்கள் இடைநிறுத்தியுள்ளனர். அதுவும் வரவேற்கத்தக்கது.

நாளை என்ன நடக்குமென்பது வேறு விடயம். ஆனால் வன்செயல்கள் இன்று நிறுத்தப்பட்டுள்ளமை வரவேற்புக்குரிய

என்று ஆறாவது பந்தி கூறுகிறது. அதாவது, மனித உரிமை மீறல்களில் ஈடுபடுவதில்லையென்று புலிகள் உறுதியளித்துள்ள னரென்றே கூறவேண்டும். இப் பேச்சுவார்த்தை களுக்குப் பின்னர் ஊடகங் களுக்குப் பேட்டியளித்த அன்ரன் பாலசிங்கம், தமது படையணிகளிலுள்ள 18 வயதுக்குக் கீழ்ப்பட்ட சிறுவர், சிறுமிகள் விடுவிக்கப்படுவார்களென்றும் தமது கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளுக்கு யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவினர் செல்ல அனுமதிக்கப்படு வார்களென்றும் தெரிவித்துள்ளார். பாலசிங்கம் மேலே கூறியவற்றைப் புலிகள் செய்வார்களென்றால், அதனையும் ஜெனீவா பேச்சுவார்த்தை ஈட்டித்தந்த வெற்றிகளென மனந் திறந்து பாராட்ட முடியும்.

புலிகளின் கருணா தரப்பு, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப். (வரதர் அணி), ஈ.பி.டி.பி., ஜிஹாத் என்ற முஸ்லிம் அமைப்பு ஆகிய ஐந்தும் அரச படைகளுடன் இணைந்து வடக்கு - கிழக்கில் நூற்றுக்கு மேற்பட்ட அப்பாவி தமிழர்களைக் கொன்றனரென்று குற்றம்சாட்டிய பாலசிங்கத்துக்கு இலங்கை அரசு முகத்திலறைந்தது போலப் பதிலளித்திருக்கிறது. அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இயங்கும் சகல ஆயுதக் குழுக்களும் தனிநபர்களும் நிராயுத பாணிகளாக்கப்படுவார்களென்று கூறப்பட்டிருப்பது, இலங்கை அரசுக்குக் கிடைத்த பாரிய வெற்றியாகும். படுகொலைகளையும் அடாவடித்தனங் களையும் புரிந்து விட்டு மாற்றுத்தரப்புகள் மீது பழிபோடும் புலிகளுக்கு இது பலத்த அடியாகும். பிரபாகரனுடன் முரண்பட்ட பின்னர், தனது படையணிகளைக் கலைத்து விட்டு, ஜனநாயக அரசியலில் ஈடுபட விரும்பிய கருணா தரப்பினரைத் துரத்தித் துரத்தித் தாக்கிக் கொன்றவர்கள் பிரபா அணியினரே. தற்காப்புக்காகவே ஆயுதமேந்தி யிருக்கிறோமென்று கருணா தரப்புக் கூறுகிறது. பிரபா அணியின் ஆயுதங்கள் களையப்பட்டால் மட்டுமே நாம் ஆயுதங்களைக் கையளிப்போ மென்று கருணா தரப்புக் கூறுவது நியாயமானதுதான். கருணா தரப்பைச் சீண்டாமல், ஆகக் குறைந்தது அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளிலாவது ஜனநாயக அரசியலில் ஈடுபட புலிகள் அனுமதிப்பார்களேயானால் இப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டிருக்கமுடியும். புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப். (வரதர் அணி), ஈ.பி.டி.பி. ஆகிய இந்த மூன்று தமிழ் இயக்கங்களுமே ஜனநாயக அரசியலில் ஈடுபடும் அமைப்புகள். கடந்த நான்கு வருட யுத்த நிறுத்த காலத்தில் இந்த மூன்று அமைப்புகளையும் சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் கொல்லப் பட்டிருக்கிறார்கள். இவர்களைச் சுட்டுக் கொன்றவர் புலிகளே. இந்த இயக்கங்கள் எதுவுமே புலிகளின் பகுதிகளுக்குச் செல்ல முடியாது. அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அரசியல் அலுவலகங்களை வைத்திருக்கும் இந்த அமைப்புகள், புலிகளுக்கு அஞ்சி பொலிஸாரின் பாதுகாப்பைப் பெற்றிருக்கின்றன. 'ஜிஹாத்' என்ற முஸ்லிம் தீவிரவாத அமைப்பு இயங்குவதாகத் தெரியவில்லை. அக்கரைப்பற்றுப் பள்ளிவாசலுக்குக் குண்டு வீசி, நான்கு முஸ்லிம்களைக் கொன்றவர்கள் புலிகளே. நவம்பர் 16ஆம் திகதியிலிருந்து ஜனவரி பத்தாம் திகதி வரை வடக்கு - கிழக்கில் 24 முஸ்லிம்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இவர்களைக் கொன்றவர்கள் யார்? 'ஜிஹாத்' அமைப்பா?

"நடந்தவை எல்லாம் நன்றாகவே நடந்து முடிந்தன. நடந்து கொண்டிருப்பவையும் நன்றாகவே நடந்து கொண்டிருக்கின்றன. நடக்கப் போகின்றவையும் நன்றாகவே நடக்கும்" என்று பகவத்கீதை போதிக்கிறது. லௌகீக விடயங்களில் சிக்கி, அலைக்கழிந்து, மனந்தளர்ந்து போயிருக்கும் ஆன்மாக்களுக்கு நம்பிக்கையூட்டுவதற்காக போதிக்கப்பட்ட அறநெறி இது. காரசாரமான வாதப்பிரதிவாதங்கள், கண்துடைப்பு வார்த்தைப் பிரயோகங்கள், வெளிநடப்புச் செய்யப் போவதாக அன்ரன் பாலசிங்கம் விடுத்த அச்சுறுத்தல் மற்றும் பல முரண்பாட்டு அம்சங்களோடு நடந்து முடிந்த இரு நாள் ஜெனீவா, சந்திப்பின் பின்னர் சகல தரப்புகளும் தெரிவித்த கருத்துக்களைப் பார்க்கையில் பகவத்கீதையின் போதனைதான் ஞாபகத்துக்கு வருகிறது.

நடந்தவை நன்கு நடைபெறாததால்தான் அரசுக்கும் புலிகளுக்கிடையிலான ஜெனீவா சந்திப்பு ஏற்படுத்தப்பட்டது. கடந்த டிசம்பர், ஜனவரி மாதங்களில் யுத்தநிறுத்த மீறல்கள் எல்லை தாண்டிப் போனதாலேயே, யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை

"வடக்கு - கிழக்கில் நிழல் யுத்தம் அல்லது சதிநாசகார யுத்தம் நடைபெறுவதாக அன்ரன் பாலசிங்கம் தனது முதல்நாள் உரையில் குறிப்பிட்டிருந்தார். வடக்கு - கிழக்கில் தமிழ் குடிமக்கள் வேண்டுமென்றே கொல்லப்பட்டனர், கடத்தப் பட்டனர், காணாமல் போனார்கள். துணைப்படைகளின் துணை யுடனேயே அரச படைகள் இதனை மேற்கொண்டன. 109 தமிழ் மக்கள் படையினரால் கொல்லப்பட்டுள்ளனர். 48 பேர் படையினரால் கைது செய்யப்பட்ட பின்னர் காணாமல் போய் விட்டனர்" என்று அன்ரன் பாலசிங்கம் கூறினார்.

வடக்கு - கிழக்கில் படுகொலைகள், ஆட்கடத்தல்கள், மிரட்டிப் பணம் பறித்தல், சிறுவர்களை வலுக்கட்டாயமாகப் படையணிகளில் சேர்த்தல் போன்ற ஜனநாயக விரோதச் செயல்களிலும் புலிகளே ஈடுபட்டு வருகின்றனரென்று அரச தரப்புத் தூதுகோஷ்டியின் தலைவர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா சுட்டிக் காட்டினார். புலிகள், படையினர் மீதும் மாற்றுக் கருத்துக்கொண்ட மக்கள் மீதும் தாக்குதல் நடத்தி வருகின்றனரென்றும் அவர் சுட்டிக்காட்டினர். ஐரோப்பிய ஒன்றியம், சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு உட்படச் சர்வதேச சமூகம் புலிகளே அதிகம் அத்துமீறல்களில் ஈடுபட்டதாகக் கண்டனம் தெரிவித்துள்ளன. யுத்த நிறுத்த மீறல்களில் 96 சதவீதமானவை புலிகளாலேயே மேற்கொள்ளப்பட்டனவென்று யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. சுருங்கச் சொன்னால் "சாத்தான் வேதமோதிய கதை" தான் இது.

எல்லாவற்றுக்கும் மேலாக முதல்நாள் அங்குரார்ப்பண உரையைத் தானே மேற்கொள்ள வேண்டுமென்று அன்ரன் பாலசிங்கம் அடம் பிடித்ததாகவும், இறைமையுள்ள இலங்கை அரசுக்கே அந்த உரிமை உண்டென்று அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா வலியுறுத்தியதாகவும் தகவல்கள் வெளிவந்தன. பின்னர் நோர்வேயின் தலையீட்டையடுத்து, அரச தரப்புத் தூதுகோஷ்டியின் தலைவரான அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா ஒரு நிமிடம் பேசிய பின்னர், அன்ரன் பாலசிங்கத்தைப் பேச அழைப்பதென உடன்பாடு காணப்பட்டது.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் பல குறைபாடுகள் இருப்பதால், அது மீளாய்வு செய்யப்பட வேண்டுமென்று அரசாங்க தரப்புக் கோரியபோது, வெளிநடப்புச் செய்யப் போவதாகத் தான் மிரட்டியதாகவும் அதனையடுத்து அரசு அடிபணிந்ததாகவும் பிரெஞ்சு செய்தி நிறுவனமான ஏ.எப்.பி.க்கு அளித்த பேட்டியில் பாலசிங்கம் கூறியுள்ளார்.

ஆக, சொல்வதைச் செய்யும் பழக்கமோ செய்வதைச் சொல்லும் நேர்மையோ புலிகளின் வரலாற்றிலேயே இல்லையென்பதால், வெறும் வார்த்தைகளை மட்டும் வைத்து எதனையும் எடை போட முடியாது. இருந்தாலும் முதல் சுற்று ஜெனீவாப் பயணம் புலிகளுக்கே வாய்ப்பாக அமைந்து விட்டதென்பதையும் நாம் மறுக்க முடியாது. இரு நாள் பேச்சுவார்த்தைக்காக ஜெனீவா சென்றவர்கள், இரு வாரங்களைக் கழித்திருக்கிறார்கள். 17ஆம் திகதி முதல் 27ஆம் திகதிவரை சுவிற்சர்லாந்தில் தங்கியிருந்து தமது நிதி சேகரிப்பு மற்றும் விடயங்கள் பற்றி சம்பந்தப்பட்ட தமது தரப்புகளிடம் கலந்துரையாடியுள்ளனர். 28ஆம் திகதி ஒஸ்லோ சென்றுள்ள அவர்கள் நான்காம் திகதியே நாடு திரும்புகின்றனர். ஐரோப்பிய ஒன்றியத்தின் பயணத் தடை, பிரிட்டனில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துக்கு விதிக்கப்பட்ட தடை, கனடாவிலும் அவுஸ்திரேலியாவிலும் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் கெடுபிடிகள், இவற்றுக்கு மத்தியில் ஜெனீவாப் பயணம் புலிகளை நிம்மதிப் பெருமூச்சு விட வைத்திருக்கிறது.

ஜெனீவா பிரஸ் கிளப்பில் சர்வதேசப் பத்திரிகையாளர்களுடன் அளவளாவிக் கொண்டிருந்த போது பி.பி.சி.யின் முன்னாள் செய்தியாளர் கோர்டன் மார்ட்டின் கூறிய வார்த்தைகளே எப்போதும் எனக்குள் ரீங்காரமிடுகின்றன. "தான் சார்ந்த மக்களின் விடிவுக்காக நேர்மையாகவும் அர்ப்பண சிந்தனையுடனும் செயற்படாத எந்த அமைப்புமே அந்த மக்களின் அழிவுக்கே வழிகோலும்" பேச்சுவார்த்தையென்று வந்தால், தீர்வுக்காக நேர்மையை வெளிப்படுத்த வேண்டும் களம் பல கண்ட அந்தச் செய்தியாளர் புலிகளுக்குக் கொடுத்த வரைவிலக்கணம் இதுதான். ■

# தொண்டர் ஆசிரியர்களின் விவகாரம்: நடந்தது என்ன?

அலசுவது

- மதியூகி -

**தொண்டர்** ஆசிரியர்களாகப் பணியாற்றி வந்தவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டதில் முறைகேடுகளும் அநீதிகளும் இடம் பெற்றிருப்பதாகத் தெரியவருகிறது.


இவ்வாறான முறைப்பாடுகளுக்கான பொறுப்பை, பொறுப்புள்ள அரசாங்கம் என்ற வகையில் அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டும். அத்தோடு பாதிக்கப்பட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கு நியாயம் கிடைக்கவும் வழி செய்ய வேண்டும்.

தமக்கு நியாயம் கிடைக்கவேண்டுமென பாதிக்கப்பட்ட தொண்டர் ஆசிரியர்கள், மறியல் போராட்டங்களையும், சத்தியாக்கிரகப் போராட்டங்களையும் நடத்திக் கொண்டிருக்கின்றனர். இந்த சாத்வீகமான போராட்டங்களை பத்தோடு பதினொன்றாக எண்ணிவிட முடியாது. இதனால் மாணவர்களின் கல்வியே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. தவிரவும், சில தொண்டர் ஆசிரியர்கள் தமக்கு அநீதி இழைக்கப்பட்டிருப்பது காரணமாக, உளவியல் ரீதியாகவும் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விவகாரம் நாடு பூராகவும் இடம்பெற்றிருக்கிறது. இதில் குறிப்பாக வடக்கு, கிழக்கில் தொண்டர் ஆசிரியர்கள் பாதிக்கப்படுவதற்கு, நிரந்தர நியமனம் வழங்குவதில் தேவையற்ற அரசியல் தலையீடே பிரதான காரணமாக அமைந்துள்ளதைக் காணக் கூடியதாகவுள்ளது. பல வருடங்களாகத் தொண்டர் ஆசிரியர்களாகப் பணியாற்றி வந்தவர்களைவிடவும், அரசியல் செல்வாக்குள்ளவர்களுக்கே இந்நியமனங்கள் வழங்கப்பட்டிருப்பது தெரியவருகிறது.

அதிலும் வடக்கு, கிழக்கிலிருந்து தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களின் கைவண்ணம் எவ்வளவு மோசமாக இடம் பெற்றுள்ளது என்பதை நிரூபிக்க இரண்டு சம்பவங்கள் போதுமானவையாகும்.

மட்டக்களப்பில் வருடக்கணக்காக தொண்டர் ஆசிரியர்களாகப் பணியாற்றி வரும் எத்தனையோ சேவையுள்ளம் படைத்தவர்கள் இருக்கின்றபோதும், புலிகளின் கல்வித் துறைப்பொறுப்பாளர் தூயவனுக்கும், மகளிர் கல்வித்துறைப் பொறுப்பாளர் - மலர்விழிக்கும் தெரிந்தவர்களுக்கு நிரந்தர ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதேபோல் சித்தாண்டியிலுள்ள புலிகளின் மகளிர் பொறுப்பாளர் - வசந்தியின் தங்கைக்கும் ஆசிரியர் நியமனம் கிடைத்துள்ளது. இதேபோல் நெடுந்தீவில் டயர் எரிப்புக் குழுவுக்கு ஒத்தாசை புரிந்துகொண்டு திரிந்த ஜெயராசா என்பவருக்கும் ஆசிரியர் நியமனம் கிடைத்துள்ளது என்றால் அரசியல் எவ்வளவு தூரம் தனது செல்வாக்கைப் பிரயோகித்துள்ளது என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.



மட்டக்களப்பு - வவுனியா மாவட்ட தொண்டர் ஆசிரியர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களைச் சந்தித்தனர். அந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட ஒரு பகுதியினர்

இவ்வாறான கூட்டமைப்பு மீதான குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொள்ளும் விதமாகவோ அல்லது நிரூபிக்கும் விதமாகவோ, இதுவரையும் பாதிக்கப்பட்ட தொண்டர் ஆசிரியர்களுக்காக -, அவர்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்பதற்காக - எவ்வித முன்முயற்சிகளையும் எடுக்கவில்லை.


மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவது குறித்தோ, தொண்டர் ஆசிரியர்கள் பாதிக்கப்படுவது குறித்தோ, வாய் திறக்க முடியாதவர்களாகக் கூட்டமைப்பினர் பரிகாரம் செய்ய முற்படாமல் இருக்கின்றனர். ஒருவேளை தங்களின் பிழையான சிபாரிசுகளும், அதனால் நியமனம் கிடைத்தவர்களினதும் விவரங்கள் வெளியில் தெரியாமல் இருந்திருக்குமானால் இந்தத் தொண்டர் ஆசிரியர்களின் விவகாரத்தைக் கையிலெடுத்துக்கொண்டு தேசியமென்றும், உணர்ச்சியென்றும் வானத்துக்கும் பூமிக்கும் குதித்திருப்பார்கள். இப்போது குற்ற உணர்வு உறுத்துவதால் மௌனித்துப் போயிருக்கிறார்கள்.

ஆனால் பாதிக்கப்பட்ட தொண்டர் ஆசிரியர்கள், தமக்கு நியாயம் கிடைக்க வேண்டுமென்ற கோரிக்கையை வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்குள்ள பிரச்சினைகளைக் கையாள இருக்கும் தமிழ் அமைச்சரான டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர். யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலிருந்து நூற்றுக்கணக்கான தொண்டர் ஆசிரியர்கள் நாளுக்கு நாள் தமது முறைப்பாடுகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்துக்குத் தெரிவித்து வந்ததைத் தொடர்ந்து அமைச்சர் உடனடியாக ஜனாதிபதியினதும், கல்வி அமைச்சரினதும் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தார். அத்தோடு நின்று விடாமல் இம்மாதம் 6ஆம் திகதி இந்தத் தொண்டர் ஆசிரியர்களின் நியமனம் தொடர்பான விவகாரத்தை அலசி ஆராய்வதற்காகவும், நியாயமான நியமனத்துக்கான அழுத்தத்தை வழங்கி, சரியானவர்களுக்கு நிரந்தர நியமனம் கிடைக்கவும் முடிவு எடுக்கப்பட ஏற்பாடு செய்யப்பட்ட இந்த உயர்மட்ட மாநாட்டில் கல்வியமைச்சு சார்ந்த உயர் அதிகாரிகளும், வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில் கலந்து கொள்வதுடன் இந்த உயர்மட்ட மாநாட்டுக்கு வடக்கு, கிழக்கின் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும், பாதிக்கப்பட்ட தொண்டர் ஆசிரியர்களைப் பிரதிநிதித்துவம் செய்யக்கூடியவர்களான தலா ஐவர் அழைக்கப்பட்டுமிருந்தனர்.

இந்த மாநாடு பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு தொண்டர் ஆசிரியர்களின் விவகாரத்துக்கு நல்ல பரிகாரத்தை ஏற்படுத்தும் விதமாக அமைந்திருந்ததோடு இந்த விடயத்தில் முன்னர் இடம்பெற்ற பிழையான அணுகுமுறைகள் தொடர்பாக விசாரணைகள் இடம்பெறும் அதேவேளை, எதிர் காலத்தில் சரியாக இப்பிரச்சினை அணுகப்படும் என்ற உத்தரவாதமும் வழங்கப்பட்டது. இந்த முடிவானது பாதிக்கப்பட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கு மன ஆறுதலையும், நம்பிக்கையையும் கொடுத்துள்ளது எனலாம்.

இனிமேலாவது நியாயமாகக் கிடைக்கவேண்டிய எந்தவொரு துறையினுடைய நியமனங்கள் தொடர்பிலும் தேவையற்ற அரசியல் தலையீடுகள் இடம் பெறாத வண்ணம் அரசு பார்த்துக்கொள்ள வேண்டும். இல்லையாயின் இவ்வாறான துர்ப்பாக்கியமான சம்பவங்கள் இடம்பெறுவதையும், அதற்கான பொறுப்பை அரசு ஏற்கவேண்டியதையும் தவிர்க்கமுடியாமல் போகும். தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று கூறிக்கொண்டு திரிபவர்களின் அரசியல் பணி, இவ்வாறு பல வழிகளிலும் தமிழ் மக்களின் அடிமடியில் தீ வைப்பதாகவே அமைந்துள்ளது என்பதை மக்கள் இனியாவது புரிந்துகொள்ள வேண்டும் என்பதோடு பாதிக்கப்பட்ட தொண்டர் ஆசிரியர்களின் கண்ணீர் வாக்கு மூலங்களுக்கு நியாயம் கிடைக்க நாமும் போராடுவோம். ◎

## அதிரடி அய்யாத்துரை



**ஜெனீவாவில** பேச்சு நடத்தினவை தங்களுக்குத்தான் வெற்றியெண்டு அவை அவைக்கு தோதான வார்த்தைப் பிரயோகங்களில பறையடிச்சுக் கொண்டிருக்கினம். ஆலோசகர் மதுபாலா என்னடாவெண்டால் தங்களுக்கு ராஜதந்திர வெற்றியெண்டுறார், அதிகாரத் தரப்பின்ர அமைச்சர் சில்வா தங்களுக்குத்தான் வெற்றியெண்டு சொல்லுறார். எனக்கெண்டால் உவை ரெண்டு பேருக்குமே உது வெற்றியில்லையெண்டுதான் தோணுது. ஏன் சொல்லுங்கோ, ஜெனீவாவில ரெண்டில ஒண்டு பார்க்கிறன் எண்டு போன ரெண்டெழுத்தாரும், ஒப்பந்தத்தை திருத்திறதெண்டுபோன அதிகாரத் தரப்பாரும், தங்கட தங்கட லைனில இருந்து சைட் சிக்னலில சைட் எடுத்து இன்னொரு தவணைக்கான திகதியையும் அறிவிச்சிருக்கினம். உதில இருந்து என்ன தெரியுது, யுத்தம் வரப்போகுதெண்டும்,சனம் துன்பப்படப் போகினம் எண்டும் விரட்டிக் கொண்டிருந்தவையின்ர மூக்கு உடைபட்டதும், யுத்தம், அல்லது நெருக்கடி எண்ட நிலைமை தள்ளிப்போடப்பட்டதும், அல்லது ஒத்திவைக்கப்பட்டிருப்பதுமானது அமைதிச் சூழலை விரும்பும் இலங்கை மக்களுக்குக் கிடைத்த பெருவெற்றியுங்கோ. எப்பதான் மக்களின்ர வெற்றிய மதிச்சு நடந்திருக்காங்கள்.

**தொண்டர்** ஆசிரியர்களின்ர நிரந்தர நியமன விவகாரத்தில வடக்கில யார் மோசடி பண்ணியிருக்கார் தெரியுமோ. கூத்தமைப்பு எம்.பி.குதிரைக் கஜேந்திரன் தானுங்கோ. உண்மையா திறமையான தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் கிடைக்காம, தனக்கு 'ஜிங் ஜக்' வாசிச்சவைக்கு உவர் சிபாரிசு பண்ணியிருக்கார் எண்டது அம்பலத்துக்கு வந்துட்டுது. உவர் உப்பிடிச் செய்தது அவருக்குப் பெரிய தவறாத் தெரியாதுங்கோ. ஏன் தெரியுமோ அவர் கலாசாலைக்கு வந்ததும், பார்ளிமெண்டுக்கு வந்ததும் குதிரையோடி எண்டதாலை அவர் சில பேருக்கு குதிரையோடி வர உதவி இருக்காருங்கோ எண்டு தொண்டர் ஆசிரியை ஒருவர் சொல்லி அழுததைக் கேட்டு சிரிக்கிறதோ, அழுறதோ எண்டு புரியாமப் போட்டுதுங்கோ. வடக்கில உப்பிடியெண்டால் கிழக்கில அரியமான இந்திரன் தன்ர பொலிரிக்ஸ் பவரைக் காட்டிறதுக்காக நேரடியா ரெண்டெழுத்தாருக்கே நியமனம் எடுத்துக் கொடுத்திருக்காருங்கோ. சிங்கள தேசத்தின்ர பதவியையும், சம்பளத்தையும் அனுபவிக்கிறதில ஆசை யாரை விட்டுச்சுதுங்கோ. எம்.பி.யாப் போனது எதுக்கு எண்டு இப்ப சனத்துக்குப் புரிஞ்சு போட்டுதுங்கோ.

**ஜெனீவாவில** பேச்சு நடக்கேக்க செய்தி சேகரிக்கப் போன ஊடகவியலாளர்களில் ஒரு தனியார் ஊடகத்தின்ர செய்தியாளர், தான் திரும்பி நாட்டுக்கு வரமாட்டன் எண்டு அடம்பிடிச்சிருக்காருங்கோ. ஏன் எண்டு கேட்டதுக்கு தனக்கு நாட்டில பிரச்சினையெண்டும்தான் பிரபலமான செய்தியாளர் எண்டதாலை தனக்குக் கொலை அச்சுறுத்தல் இருக்குதாமெண்டும் சொல்லி, சுவிஸ் அரசாங்கத்தின்ர அசைலம் கேக்கப்போறன் எண்டு பிடிவாதம் பண்ணியிருக்காருங்கோ. பேச்சுவார்த்தையின்ர சாட்டில வீசா எடுத்துக் கொண்டு, கம்பனியின்ர பணத்தில செலவு பண்ணி அனுப்பி வச்சதுக்கு உப்பிடியொரு அவமானத்தையும் தேடித்தரப் போறியோ எண்டு காலில விழாத குறையாகத்தானாம் அந்தக் கம்பனி ஆளை திருப்பி நாட்டுக்கு இறக்கிச்சுதாம். பாத்தியளோ, தன்னைப் பெரிய பிரபலமான ஊடகவியலாளனாக ஊர் உலகம் பார்க்க வேணுமெண்டதுக்காகவே தான் பக்க சார்பு எடுத்திருக்கிறனோ இல்லையோ எண்டதையே தெரிஞ்சுகொள்ளாம தன்ர இஷ்டத்துக்கு ஊடகப் பணி செய்து போட்டு அதையே அசைலம் கேக்கிறதுக்கு ஆயுதமா பாவிக்கப் பாத்திருக்கிறார். சும்மா சொல்லக்கூடாது. சூப்பர் திட்டந்தானுங்கோ. என்ன செய்யிறது, தமிழ் தேசியம் ஒரு உணர்ச்சி மிகுந்த ஊடகவியலாளனை இழக்கப் பார்த்து பிழைச்சுப் போட்டுது. இனியாகிலும் இன்வெஸ் மெண்ட் பண்ணுறவை அலர்ட்டா இருங்கோ புரியுதோ...

**சுனாமி** அடிச்ச நேரம் செத்துப் போனவையின்ர சடலத்தை மீன் சாப்பிட்டிருக்குமெண்ட அச்சத்தில கடலுணவை சனம் வெறுத்தது. பிறகு நாளுக்கு நாள் பழைய நிலைமை திரும்பினதில வீழ்ச்சியடைந்திருந்த மீன் வகைகளின்ர விலை இப்ப பழைய படி டொப்பில ஏறிட்டுது. அது மாதிரி இப்ப பறவைக் காச்சல் பீதி நாளுக்கு நாள் அதிகரிக்க, அதிகரிக்க கோழி இறைச்சியையும் முட்டையையும் சனம் அச்சத்தோடை பார்க்கினம். அது மட்டுமில்லாமல், உந்த வைரஸ் அவிச்சாலும், பொரிச்சாலும் சாகாதெண்டும் சொல்லினம். முன்னம் மீன் வியாபாரிகள் பாதிக்கப்பட்டது போலை இப்ப கோழிப் பண்ணையாளர்களுக்கு சோதனைக் காலம் ஆரம்பிச்சிருக்குது. எதுக்கும் சனம் கூடுதலான விழிப்பா இருங்கோ. அதே நேரம் உதாலை பாதிக்கப்படுகிறவைக்கு ஏதாவது நல்ல பரிகாரமும் காணப்பட வேணும். மனிசனை தன்ர இஷ்டத்துக்கு விட்டால் தலை, கால் தெரியாமல் திரியிறான் எண்டிட்டு உந்த இயற்கைதான் எத்தினை வகையான டெஸ்ட்டுகளை வைக்குது, பாத்தியளோ! என்ன, இயற்கையின்ர உந்த மாதிரியான விளையாட்டுக்கு ஒட்டுமொத்தப் பேருமெல்லோ பாதிக்கப்படுகினமெண்டது தானுங்கோ கவலையாக் கிடக்கு.

**போன** வாரம் யாழ்ப்பாணத்தில நூறுக்கும் மேற்பட்ட மாணவிகள் மானிப்பாய் பெண்கள் கல்லூரியில மயங்கி விழுந்திச்சினமெண்டும் அது பறவக் காச்சலா இருக்குமோ எண்டும் கதை பரபரவெண்டு பரவிச்சுது. எடப் பாடசாலையில இருந்த பிள்ளையள்தான் உந்த வருத்தத்துக்கு ஆளாகியிருக்கினம் எண்டு பார்த்தால் லீவுல வீட்டில இருந்த பிள்ளைகளுக்கும் உந்த விசித்திரமான வருத்தம் வந்திட்டுது. உந்தப் பதற்றத்தில யாழ்ப்பாணமே ஆட்டம் கண்டு நிக்கேக்ககூட ஒருத்தரும் மூச்சுக் காட்டாம இருந்திட்டினம். ஒரு மாணவி எக்ஸிடண்டில செத்ததுக்கு பொலிரிக்ஸ் பண்ணினவை உந்த விஷயத்தில மௌனமா இருந்திட்டினம். கடைசியில, சுகவீனமான பிள்ளைகளுக்கு ரெத்தம் வேணுமெண்டால் கேளுங்கோ, நாங்கள் தாறம் எண்டு பாதுகாப்புப் படையின்ர உயர் அதிகாரி ஒருவர் மருத்துவமனைக்கு சொன்னவராம். உதில பொலிரிக்ஸ் பண்ண வாய்ப்பில்லாமப் போட்டுதோ எண்ட கவலையில கொஞ்சப் பேர் திரிஞ்சு இருக்கினம். இண்டை வரைக்கும் உந்தக் காச்சல் வந்ததுக்கு என்ன காரணம் எண்டதை கண்டுபிடிக்கயில்லையாம். கொழும்பில இருந்து அறிக்கை வரும் வரைக்கும் சனம் பொறுமையா இருக்குதுகளாம்.

**வாழ்ந்தாலும்** பேசும், தாழ்ந்தாலும் பேசும் பொல்லாத உலகமெண்டு என்ன அனுபவத்தில எழுதிவச்சிச்சினமோ தெரியாது. எங்கட சனத்தின்ர வாழ்க்கையும் அப்படியாகிட்டுது. முன்னம் வட பகுதியைக் கைவிட்டுப்போட்டு ரெண்டெழுத்தார் ஓடினாப் பிறகு, மிச்சமா இருந்த சனம் படாது பாடுபட்டு பொழைப்பு நடத்திக் கொண்டு இருந்திச்சினம். பிறகு படைத்தரப்பு வந்ததும் தலைநகரில இருந்து சமான்கள் வரத் தொடங்கினது. பிறகு எங்கட சனங்கள் தோட்டங்கள் செய்திச்சினம். விளையிறதுகளை படைத்தரப்புக்கு வித்திச்சினம். உப்பிடி சீவியம் ஓடிச்சுது. பிறகு உந்த ஒப்பந்தத்தோடை ஊருக்குள்ள வந்த ரெண்டெழுத்தார், வரி தந்து போட்டு நீங்கள் என்ன வேணுமெண்டாலும் செய்யுங்கோ எண்ட கணக்கில இருந்திச்சினம். இப்ப என்ன நினைச்சினமோ தெரியுதில்லை. படைத்தரப்புக்கு எதையும் விக்கக் கூடாது. அப்புடி விக்கிறவை தேசத்துரோகிகள் எண்டு சொல்லி பொழைப்புல மண் அள்ளிப்போடுகினமாம். பாவம் பாருங்கோ சனம், கருவாடு வித்த காசு மணக்காது எண்டுவினம். அதுபோலை யாருக்கு வித்தாலும் சனம் சீவியம் நடத்திறதை நிறுத்துங்கோ; இல்லாட்டில் நீங்கள் துரோகி எண்டிறது நியாயமில்லையுங்கோ. விடுதலையை நீங்க வேண்டித்தார போது அனுபவிக்கிறம். இப்ப எங்கட பாட்டில வாழ விடுங்கோ, பிளீஸ் எண்டு சனம் புலம்புதுகளாம். யாரிட்டைச் சொல்லிறது?




## வாசகர்களின் கவனத்திற்கு...

இலங்கையில் இருந்து வெளிவரும் தமிழ் மொழி மூல இலத்திரனியல், அச்சு ஊடகங்களில் ஒலி, ஒளிபரப்பாகும், பிரசுரிக்கப்படும் சமகால செய்திகள், விடயதானங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் தொடர்பான விமர்சனங்கள் வாசகர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன. விமர்சனங்கள் இறுக்கமாகவும் சுருக்கமாகவும், ஆக்கபூர்வமானவையாகவும் இருக்கவேண்டும். பயன்மிக்கது என ஆசிரிய பீடத்தினால் கருதப்படும் விமர்சனங்களுக்கு முரசு இடமளிக்கும்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**
**முரசு விமர்சனம்**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ. இல - 1772**
**கொழும்பு.**

## ஊடகங்கள் பின்பற்றலாமே

**தமிழ்** தேசிய தினசரிப் பத்திரிகைகளில் ஒன்று தினமும் தனது பதிப்பில் 'வாசகர்களின் கவனத்திற்கு' என ஒரு விசேட தொலைபேசி இலக்கத்தினை வழங்கி குறைகளையும் தனது பத்திரிகை குறித்தான விமர்சனங்களையும் நேரடியாகவே தெரிவித்துக்கொள்ளலாம் என அறிவித்து வருகின்றது. குறிப்பிட்ட அறிவித்தல் வெளியிட்டதுடன் மட்டும் நின்றுவிடாமல் நாம் தொலை பேசியூடாக ஒரு குறிப்பிட்ட விடயம் தொடர்பாக உரையாடிய போது உடனடியாகவே பதில் அறிந்தது. மட்டுமல்லாமல் மிகவும் பண்பாகவும், நிதானமாகவும் உரையாடி, சம்பந்தப்பட்ட விடயத்தை உரியவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்வதாகவும் தெரியப்படுத்தினார்கள். இது மிகவும் வரவேற்கத்தக்க விடயமாகும். ஒரு துறையினரைப் பார்த்து அதையே பின்பற்றுவதாக கருதி விடாமல் ஏனைய ஊடகங்களும் (தனியார் வானொலிகள் உட்பட) வாசகர்களின் நேயர்களின் குறைகள், கருத்துக்கள், விமர்சனங்களுக்காக ஒரு தொலைபேசி இணைப்பை ஏற்படுத்தினால் அது ஆரோக்கியமான ஓர் நடவடிக்கையாக இருக்கும் என்பது என் கருத்தாகும்.

எனவே மற்றைய ஊடகங்களும் வீரமான இந்த நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என வேண்டி நிற்கின்றேன்.

*–சாம்பசிவ பவித்திர ஐயர், மாமாங்கேணி.*

## கோவணாண்டிகளுக்கு 'ரை' கட்ட வேண்டாம்

**ஜெனீவாவில்** இலங்கை அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தை தொடர்பாகச் செய்திகளைச் சேகரிப்பதற்கெனக் கொழும்பிலிருந்து செயற்படும் இலத்திரனியல் ஊடகமொன்றினால் அனுப்பப்பட்ட செய்தியாளரொருவர் தனது நேரடிச் செய்தி வழங்கலின் போது அடிக்கடி ஆங்கிலச் சொற்பதங்களைப் பிரயோகித்தால் தொலைக்காட்சியிலும் சரி வானொலியிலும் சரி PARA MILIT ARY, HUMAN RIGHTS, MORNING SESSION, AFTERNOON SESSION இப்படிப் பற்பல ஆங்கில வார்த்தைகளை அவர் பிரயோகித்தார். ஞாயிற்றுக்கிழமைகளில் இவர் நடத்தும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் சுத்த தமிழையே பேசும் இவர், ஜெனீவா சென்றதும் ஏன் திடீரென ஆங்கிலப் பதங்களைப் பாவித்தார் என்பது அவருக்கே வெளிச்சம். ஊரில் வாழும் சாதாரண விவசாயிக்கோ அல்லது நடுத்தர குடும்பப் பெண்களுக்கோ இவரது ஆங்கிலப் பதங்கள் புரிந்திருக்குமோ எனத் தெரியவில்லை.

சாதாரண மக்களின் பயன்பாட்டு மொழியில், அவர்கள் விளங்கக் கூடிய பதப் பிரயோகங்களைப் பாவிக்க வேண்டுமென்பது ஊடக தர்மத்தின் அடிப்படை அம்சங்களிலொன்று என்பதை இவரால் புரிந்து கொள்ளமுடியாமல் போனது ஏனோ? கர்நாடக சங்கீத சாலையில் ரங்கீலா பாட்டு கேட்பது போலவே சாதாரண தமிழ் பேசும் மக்களுக்கு ஜெனீவாவில் இருந்து இவர் வழங்கிய செய்திகள் இருந்தது. கோவணாண்டிகளாக வாழும் அப்பாவித் தமிழ் மக்களுக்கு 'ரை' கட்ட வேண்டாமென்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

*–ஐ.சங்கரலிங்கம், மூளாய், யாழ்ப்பாணம்.*

## ஒலி வாசம் வீசும் லோஷன்

**தனது** மிக இளம் வயதிலேயே ஒலிபரப்புத் துறைக்குள் காலடி எடுத்து வைத்துள்ள ஏ.ஆர்.வி. லோஷன் இன்று ஒரு தேர்ச்சி பெற்ற ஒலிபரப்பாளராக விளங்குகின்றார். ஒலிபரப்பு பாரம்பரியத்தில் வாழ்ந்தவர் என்றும் வேறொரு மூத்த அறிவிப்பாளரின் பாணியை அப்படியே பின்பற்றுகின்றார் எனவும் ஆரம்பத்தில் அவரைப் பற்றிய விமர்சனங்கள் மேற்கொள்ளப்பட்டாலும், அவற்றை எல்லாம் தகர்த்தெரிந்து விட்டு இன்று தனக்கென ஒரு தனியிடத்தினை அவர் பெற்றுள்ளார். ஒரு ஒலிபரப்பாளருக்கு மிக அவசியமானது குரல் வளம். ஆனால் குரல் வளம் மட்டும் ஓர் அறிவிப்பாளனை உருவாக்கி விடுவதில்லை. உலக அறிவு, பன்முகத்தன்மை, தெளிவான உச்சரிப்பு, சமகால தேவைகள் அனைத்தையும் ஒருங்கே கொண்டமைந்த ஓர் வல்லவராகவே லோஷன் விளங்குகின்றார்.

விளையாட்டுத்துறை தொடர்பாக அவரது பரந்த அறிவும், உலக, நாட்டு நடப்புக்கள் குறித்த தெளிவான அறிவும் கொண்ட அவர் நேயர்களுடன் உரையாடும் போது கூட ஓர் ஒலிபரப்பாளரின் பண்பான பாணியை அறிமுகப்படுத்தியுள்ளார். ஏ.ஆர்.வி. எனப்படும் லோஷன் சிகரம் எட்ட வேண்டும், பல்லாண்டு காலம் அவரது ஒலிபரப்புப்பணி பிரகாசிக்க வேண்டும் என வாழ்த்துகின்றோம்.

*–ஆர்.அபர்ணா, மவுண்ட்லவினியா.*

## மலைநாட்டு நாடோடிப்பாடல்கள்

இலக்கிய கட்டுரைகள், கவிதைகள், விமர்சனங்கள் இவற்றிற்கெல்லாம் இல்லாத ஏதோ ஒரு அழகு, ஏதோ ஒரு இன்பம், ஏதோ ஒரு கவர்ச்சி, ஏதோ ஒரு விசேடத்தன்மையொன்று நாட்டார்பாடல்களுக்குள் மிளிர்கிறதே எப்படி? கற்பனைக்கு அப்பாற்பட்டு அனுபவங்களை அடிக்கல்லாக கொண்டு அமைக்கப்பட்டிருப்பதால்தானோ! அதனால்தான் அவை வாய்மொழி இலக்கியம், பாமரர் பாடல்கள் நாடோடிப் பாடல்கள், நாட்டிலக்கியம் என்றெல்லாம் அழைக்கப்படுகின்றன. அந்த நாடோடிப் பாடல்களுக்குள் எப்பொழுதும் ஒரு நிஜத்தன்மை உயிரோடிக் கொண்டிருப்பதென்னவோ உண்மைதான். சமூகத்தின் அடித்தள மக்களின் வேதனை விரக்தி, தோல்வி, எதிர்பார்ப்பு, காதல், அன்பு, இன்பம், போட்டி, பொறாமை, போன்ற எல்லாவகையான உணர்வுகளையும் இப்பாடல்களினூடு வெளிக்கொணரப்பட்டிருப்பது இங்கே நோக்கத்தக்கது. அந்த வகையில் பேணிப்பாதுகாக்க வேண்டிய மலைநாட்டு நாடோடிப் பாடல்களை நமக்குத் தொகுத்து தருகின்றார் ***ஹாலி எல ஊவா வட்டவளையில் இருந்து பிரமிளா செல்வராஜா.***

### காதல் பாட்டு

**அவள் :** ஒரு காதுல ஓல
தோத்தாண்டா
ஏ மாமா மதியா ஒன்னால நானும்
கெட்டேன்.

**அவன் :** கெட்டதெல்லாம்
கெட்டுப்போச்சிடி
பவுனால செயின் போல செஞ்சி
போடுறேன்.

**அவள் :** ரெண்டு காதுல ஓல
தோத்தாண்டா
ஏ மாமா மதியா ஒன்னால நானும்
கெட்டேன்

**அவன் :** கெட்டதெல்லாம்
கெட்டுப்போச்சிடி
பவுனால செயின் போல செஞ்சி
போடுறேன்.

இப்படி பத்து எண்ணிக்ரக வரை
பாடல் போகிறது இன்னொரு
பாடலில்

**அவள் :** அவர் இருப்பார் மேட்டு
லயம்
நான் இருப்பேன் பனிய லயம்
யாரைவிட்டு கூப்பிடுவேன் என்
கண்ணான ராசா

**அவன் :** ஆளும் அனுப்ப
வேணாம்
பதிலால தூது வேணாம்
நான் மட்டும் ஒரு தடவ வந்து
முத்தம் தாரேண்டி.

(தொடர்ந்து வரும்)

## சிறுகதை கவிதை எழுத்தாளர்களுக்கு....

முரசுக்காக சிறுகதைகளை எழுதிவரும் அன்பு எழுத் தாளர்களே! எதிர்காலத்தில் எழுத்துப் பணியில் ஈடுபட இருப்பவர்களே! முரசுக்காக சிறுகதைகள் எழுதுகின்றபோது கையெழுத்துப் பிரதியாக இருந்தால் மூன்று பக்கங்களும், தட்டச்சு செய்திருந்தால் ஒன்றரைப் பக்கம் வரக்கூடிய விதத்திலும் எழுதி அனுப்பி வையுங்கள்.

கவிதை எழுதுபவர்கள் தொடர் சங்கிலியாக எழுதாமல் எடுத்துக்கொள்ளும் விடயத்தை சிறியதாகவும் சுவையாகவும் எழுதுமாறு கேட்டுக்கொள்கிறோம். முரசு எழுத்தாளர்களாக இருப்பவர்களைக் கௌரவிக்கும் அதேவேளை, புதிய புதிய எழுத்தாளர்களுக்குக் களம் அமைத்துக் கொடுக்கவும் வாசகர்கள் ஒத்துழைப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

நன்றி. **- ஆசிரியர்**

## தினமுரசு சந்தா விபரம்

**சந்தாக் கட்டண அதிகரிப்பு விபரம்**

இலங்கையில் தபால் கட்டண அதிகரிப்பு காரணமாக சந்தாக் கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது. அது சம்பந்தமான விபரம் பின்வருமாறு:

| நாடுகள் | ஒருவருடம் | 6 மாதம் | 3 மாதம் |
|---|---|---|---|
| ஐரோப்பிய நாடுகள் | ரூ. 4,300 | ரூ.2,150 | ரூ.1,100 |
| அமெரிக்கா, கனடா | ரூ. 4,900 | ரூ.2,450 | ரூ.1,250 |
| மத்திய கிழக்கு நாடுகள் | ரூ. 3,800 | ரூ.1,900 | ரூ. 950 |
| உள்ளூர் | ரூ. 1,500 | ரூ.750 | ரூ. 375 |

சந்தா செலுத்தி தபாலில் தினமுரசு வாரமலரைப் பெற விரும்புவோர் **D.D. Enterprises** என்ற பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளைகளை முகாமையாளர், தினமுரசு **16A, Nelson Place, Wellawatta, Colombo-06. Srilanka** என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த முகவரிக்கு வந்து நேரில் பணம் செலுத்தவும் முடியும்.

உள்ளூரில் சந்தா பெற விரும்புவோர் சந்தாத் தொகையை காசுக் கட்டளையாக வெள்ளவத்தை தபாற்கந்தோரில் மாற்றும் வண்ணம் **"Manager, Thinamurasu Varamalar 16A, Nelson Place, Wellawatta, Colombo-06.** என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

ஈ.மெயில் :- **(E-mail):– murasu@sltnet.lk**


**தெய்வீக மருத்துவம்**

சர்வதேச சமூக மாந்திரீக மருத்துவ தெய்வீக சேவை
Goverment Approved Charity Regd No - HA/4/BT/219

டாக்டர் பாலுசோதிடர் S.A.M.P.J.P.(SL)

கிரக தோஷம், காலப்பகையால் பிரிந்த காதலர்கள், கணவன் – மனைவி ஒன்று சேர, வெறுத்த உறவினர்கள், வேண்டியவர்கள் அன்பாக இருக்க, காதல் திருமணம் எல்லோருடைய சம்மதத்துடன் நிறைவேற மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் தீராத மனநோய், தாழ்வு மனப்பான்மை, கல்வி, தொழில், விவாகம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித் தடை, குடும்ப வாழ்க்கையில் சந்தோஷமின்மை, வெளியில் சொல்ல வெட்கமான பிரச்சினைகள், தீய பழக்கம், மனிதத் தீமை, மருந்தீடு போன்ற தீமைகளில் இருந்து விடுபட்டு சந்தோஷமாக வாழ, பிரச்சினைகளுக்குரிய காரணத்தை காண்டம் இறைசக்தியால் கண்டறிந்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ புனித புராதன தீங்கற்ற மஹா மாந்திரீக தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தி அளிக்கப்படுகிறது.

நேரில் வரமுடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சினையை எழுதினால் அல்லது தொலைபேசி, ஃபக்ஸ் மூலம் தொடர்பு கொண்டு, உடன் பயன் தரும் தெய்வீக மருத்துவப் பொருட்களை விசேட தபால் மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக்கொள்கிறார்கள். (இரகசியம் பாதுகாக்கப்படும்.)


Theiveegam Srilanka
Head Office
Batticaloa

தெய்வீகம் ஸ்ரீலங்கா
தலைமையகம்
மட்டக்களப்பு

Tele/Fax : 065-2224825, +94777032844. Balu Sothidar @ hotmail.com.

*"வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்"*
"DISPEL DARKNESS LIFE AND LET LIGHT SHINE"




**மலையாள மாந்திரீகம்**

மலையாள மாந்திரீக சக்தியால் பிரிந்தவர்கள் ஒன்று சேர, கணவன் - மனைவி பிணக்கு தீர்ந்து, ஒற்றுமையாக இருக்க, திருமணம் கை கூட, மனங்கவர்ந்த காதலன் காதலி ஒன்று சேர, கல்வி ஞான கவசம் பெற, குபேர வாழ்வு கிட்ட, வெளிநாட்டு பிரயாணத்தடை நீங்க, சகல தோஷங்களும் நிவர்த்தி செய்து கொள்ள அனைத்து விடயங்களுக்கும் நேரில் வருகை தரவும்.

அத்துடன் அருள் ஞானத்துடன் கூறப்படும் ஜாதகங்கள் என்றுமே பிழைத்தது இல்லை. நடந்தது, நடக்க இருப்பது, எண்ணியது எண்ணியவாறு நடக்க இருப்பது, எண்ணியது எண்ணியவாறு எத்தனையாம் திகதி எத்தனை மணிக்கு நிறைவேறும் என்பதை திட்டவட்டமாகத் தெரிந்து கொள்ளவும், மற்றும் கைரேகை பார்த்து தெரிந்து கொள்ள பிறந்த திகதி தேவையில்லை.

வாங்கும் பணத்திற்கு உத்தரவாதம் கொடுப்பதென்றால் அது நான் மட்டுமே! வெளிநாட்டவர்களுக்கு விசேட சலுகையும் 24 மணித்தியால தொலைபேசி சேவையும் உண்டு.

Prof.Dr P .K. Samy (J.D.G.N) JP
Malayala Manthirika Uchchatta Peedam
Sri Durkadevi Aalayam ,162, Kotahena Street,
May field Road, Colombo - 13, Srilanka

T/NO 2342463/2342464
2470615
Fax :- 0094 -1 1 - 2344831
web- www.drpksamy .com

## இன்னொருவர் பார்வையில்

**பல்லின - பல் கலாசாரத் தன்மை கொண்ட இலங்கையில், எரியும் பிரச்சினையாக உருவெடுத்து நிற்கும் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண ஆயுத முனையிலும் அரசியல் முனையிலும் எடுத்த முயற்சிகள் தோல்வியையே தழுவி வந்திருக்கின்றன. சம்பந்தப்பட்ட தரப்புகளிடையே பரஸ்பர நம்பிக்கை, நெகிழ்வுப் போக்கு ஆகியவை இல்லாமையே இவற்றுக்கு அடிப்படைக் காரணமென ஆய்வாளர்கள் கூறுகின்றனர். தேசம், தேசியம், பாரம்பரிய தாயகம், சுய நிர்ணய உரிமை என்றெல்லாம் பல்வேறு விடயங்கள் இனப் பிரச்சினைச் சிக்கலுக்குள் சிக்கி நிற்கின்றன. இன்றைய பேச்சுவார்த்தை முயற்சிகளையும் இலங்கையின் யதார்த்த நிலைமைகளையும் கணக்கிலெடுத்து, 'கதிக ஆய்வு வட்டம்' என்ற புத்திஜீவிகள் அமைப்பு, சம்பந்தப்பட்ட தரப்புகளின் கவனத்துக்கு விடுத்திருக்கும் அறிக்கையின் தொடர்ச்சியை இங்கே தருகிறோம்.**

# சிங்கள “தேசிய உணர்வும்” தமிழ்

*(சென்ற வாரத் தொடர்ச்சி)*

### மொழியும் கலாசாரமும் : சிங்கள, தமிழ், முஸ்லிம் உறவுகள்.

**ஏகாதிபத்திய**, காலனித்துவ சக்திகளின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்த சிங்களவர்கள், பல நூற்றாண்டுகளாகத் தமக்கென சொந்தக் குரலே இல்லாமல் இருந்து வந்துள்ளனர். சுதந்திரத்திற்குப் பின் இவர்கள் தமது மொழிக்கும் கலாசாரத்திற்கும் புத்துயிர் அளிப்பதற்கும் தமது பொருளாதாரத்தை மீளமைத்துப் பாதுகாக்கவும் முயற்சிகளை மேற் கொண்டு வந்துள்ளனர். காலனித்துவ காலம் வரை தாம் அனுபவித்து வந்த மேலாண்மையான இடம், சிங்கள மக்கள் மத்தியில் எழுந்த "தேசிய உணர்வு" களினால் தமக்கு மறுக்கப்பட்டு விட்டதாகத் தமிழ் மக்களில் ஒரு பிரிவினர் நம்பிக்கை கொண்டுள்ளனர். இந்த நம்பிக்கைக்குள் தமிழ் "தேசிய உணர்வின்" வித்துக்கள் முளைவிடுமானால் சிங்கள, "தேசிய உணர்வின்" வளர்ச்சி மட்டம், தமிழ் மொழியையும் பேணிப் பாதுகாத்து செழுமைப்படுத்தி பாதுகாக்க வேண்டுமென்ற நிலை அச்சுறுத்தப்படலாம் என்ற உணர்வு தமிழர்களிடம் ஏற்படலாம். இவ்வாறானதொரு நம்பிக்கை

தமிழ் மக்கள் மத்தியில் பரவலாக ஏற்படும். இல்லையென்றால், தமிழ் " தேசிய உணர்வு" குறிப்பிட்ட காலம் வரை அரசியல்வாதிகளினால் தமிழ் மக்கள் உள்ளங்களில் விதைக்கப்பட்ட கொடூர உணர்வின் உற்பத்தியே என்று எம்மால் சொல்ல முடியுமா?

இவ்வாறான போலியான "தேசிய உணர்வு" எவ்வளவு காலத்திற்கு அரசியல் இயக்கமொன்றின் அடிப்படையாக நின்று நிலைக்கப் போகின்றது? இலங்கையின் காலனித்துவ எதிர்ப்புப் போராட்டத்தின் போதும் சுதந்திரத்திற்குப் பிந்திய காலத்திலும் தமிழ் சமூகத்தவர் மத்தியில் கலாசார மறுமலர்ச்சி ஏற்பட்டதையும் நாமறிவோம்.

இலங்கைத் தமிழர்களுக்கு பொதுவான மொழி ஒன்றுண்டு. அந்த மொழியிலிருந்தே அவர்களுக்கு தமிழர்களென்ற பெயர் ஏற்பட்டது. அவர்களுடைய கலாசாரம் சிங்களவர்களுடையதோ, முஸ்லிம்களுடையதோ அல்ல. சந்தேகத்திற்கிடமின்றி இந்துக் கலாசாரங்கள் அனைத்துமே தமக்கிடையே பரஸ்பர செல்வாக்கிற்கு உட்பட்டபோதும் ஒவ்வொன் றிற்குமே அடிப்படையான தனித்துவ குணாம்சங்கள் உள்ளன. சிங்களவர்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களில் வாழும் தமிழர்களோ அல்லது முஸ்லிம்களோ ஏதாவதொரு வகையில் அவர்களோடு நெருங்கிச் செயற்படும் பட்சத்தில், சிங்கள பௌத்த கலாசாரங்களின் செல்வாக்கிற்கு மேலும் உட்படுத்தப்படுவர். இது அவர்களின் பழக்கவழக்கங்கள் மற்றும் குணாம்சங்களை உருவாக்குவதில் பங்களிக்கக் கூடும். வடக்கு கிழக்கைச் சேர்ந்த தமிழ் மக்கள் மத்தியில் வாழும், தமிழர்கள் சிங்கள பௌத்த கலாசாரத்தின் செல்வாக்கிற்கு பெருமளவு உட்படுத்தப்பட மாட்டார்கள். வடக்கு, கிழக்கில் வாழும் தமிழர்களின் கலாசாரம், இதுவரை சிங்கள கலாசாரத்துடன் நெருங்கிச் செயற் படாததால் அதற்கே உரித்தான தனித்துவ குணாம் சங்களைப் பேணி வளர்ச்சி பெற்றுள்ளதென்று கூறலாம். அது சிங்கள கலாசாரத்திலிருந்து தன்னை விலக்கி வைத்துக் கொண்டது.

இலங்கைத் தமிழர்கள் தமக்கெனத் தனித்துவமான கலாசாரத்தை அபிவிருத்தி செய்துகொண்டார் களென்றால், தமது சொந்த " தேசிய உணர்வினால்" உந்தப்பெற்ற சிங்களவர்கள், தமது கலாசாரம் அச்சுறுத்தப்பட்டதாக நம்பும் தமிழர்கள் மத்தியில் தமது கலாசாரத்தைப் பேணிப் பாதுகாத்து, செழு மைப்படுத்துவதற்கான தேசபக்தி தமிழர்கள் மத்தியில் எழக்கூடிய சாத்தியத்தைப் புரிந்து கொள்வது கஷ்டமாக இருக்காது. மொழியைப் பேசி வாழும் மனிதர்களென்ற வகையில் அந்த மனிதர்களினால் பூரணமாகக் கிரகித்துக் கொள்ளக்கூடிய மொழியில் தமது வாழ்க்கைக்கு முக்கியத்துமிக்க விடயங் களை மேற்கொள்ள முடியாவிட்டால் பிரிந்து நிற்கும் வலுவான மனோபாவ மொன்றினை அது ஏற்படுத்தும்.

இலங்கை முஸ்லிம்களின் நாளாந்த மொழி தமிழ். ஆனால் அவர்களின் கலாசாரம் தமிழர்களுடையது அல்ல. இதைப் போன்றே இலங்கையிலுள்ள மலாய் மற்றும் பறங்கிச் சமூகங்கள் கூட அவர்கள் பெரும்பாலும் சிங்கள சமூகத்தவர்கள் மத்தியி லேயே வாழ்கின்றார்கள் என்ற போதிலும் அவர்களுக்கே தனித்துவமான கலாசார குணாம் சங்களும் பழக்கவழக்கங்களும் உண்மையென்று மதிப்பிட முடியும்.

### தமிழ் கலாசாரம் ஒரே வகையினதா?

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் மலையகப் பிரதேசங்களிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் வாழும் தமிழர்களினதும் முஸ்லிம்களினதும் பொது மொழி தமிழாகும். தமிழ் பேசும் இந்த மக்கள் சமூகத்தில், முஸ்லிம்களைத் தவிர பொதுவாகத் தமிழர்கள், பொதுவான கலாசாரமொன்றினை பகிர்ந்து கொண்டுள்ளனரென்று கூறலாம். எனினும் அக் கலாசாரம் முற்றுமுழுதான ஒரே வகையான கலாசாரமல்ல.

முதலாவதாக, வடக்கு - கிழக்கு மாகாண தமிழர்களுக்கிடையிலும் மலைநாட்டுப் பிரதேச தமிழர்களுக்கு மத்தியிலும் கலாசார வேறுபாடுகள் உள்ளன. வடக்கு - கிழக்கு தமிழர்களின் பிரிக்க முடியாத பகுதியாக மலையகத் தமிழர்களும் தம்மை கருதிக் கொள்வதில்லை. கிழக்கு மாகாணத் தமிழர்கள் தம்மை வடக்குக் கிழக்கு மாகாணத் தமிழர்களின் பிரிக்க முடியாத பகுதியென ஏற்றுக் கொள்ளார்.

**தமிழ் மக்களோ அல்லது முஸ்லிம் மக்களோ அவரவர்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களில் தத்தமது மொழியினையும் கலாசாரத்தையும் பேணிப் பாதுகாத்துச் செழுமைப்படுத்தும் உரிமையினைக் கொண்டுள்ளனர் என்பது இங்கே பிரச்சினைக்குரிய விடயமல்ல. குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தில் மட்டுமல்ல, நாட்டின் எந்தப் பிரதேசமென்றாலும் மற்றைய சமூகங்களைப் புறந்தள்ளாமல் தனியொரு சமூகத்தின் உரிமையினை எப்படி அமுல்படுத்துவது என்பதிலேயே மோதல் எழுகின்றது. இது தவிர்க்கப்படும் பட்சத்தில் மட்டுமே இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்வதை ஏனைய சமூகங்கள் அனுமதியளிக்க முடியும்.**

இரண்டாவதாக வடக்கு கிழக்கு என்ற இந்த இரண்டு மாகாணங்களிலும் வாழும் மக்கள் மத்தியிலும் வேறுபாடுகள் உண்டு. வடக்கில் வாழும் பெருந்தொகை யான மக்கள் தமிழர்களே. அதே நேரம் கிழக்கில் வாழும் பெருந்தொகையான மக்களும் தமிழர்கள்தான். ஆனால் வடக்குத் தமிழர்களின் அரசியல் ஆதிக்கத்தின் கீழ் வருவதற்கு கிழக்குத் தமிழர்கள் விரும்பவில்லை என்பது ஒன்றும் இரகசியமான விடயமல்ல. கிழக்கி லுள்ள முஸ்லிம்களைப் பொறுத்தவரை தமிழர்களின் ஆதிக்கத்தின் கீழ் வருவதை அவர்கள் வலுவாக எதிர்க்கின்றனர். கிழக்கு மாகாணத் தமிழர்களின் ஆதிக்கத்தின் கீழ் வரவும் அவர்கள் தயாராக இல்லை. எனவே ஒருவரின் மொழியையும் கலா சாரத்தையும் பேணி வாழ்வதற்கான உரிமை, ஒருவரின் சுதந்திரத்தையும் அடையாளத்தையும் பாதுகாக்கும் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும். இந்த உரிமை கிழக்கில் வாழும் தமிழர்களுக்கு மட்டுமல்ல, அங்கு வாழும் முஸ்லிம்களுக்கும் சிங்களவர்களுக்கும் கூட உண்டு.

ஒரே பொது மொழியினைப் பேசும் தமிழ், முஸ் லிம் மக்களிடையிலும் ஒரே பொதுவான கலா சாரத்தைக் கொண்டிருப்பவர்களைப்போலத் தோன்றும் வடக்கு – கிழக்கு மாகாண தமிழர்கள் மத்தியிலும் தமது மொழியையும் கலாசாரங்களையும் பேண எடுக்கப்பட வேண்டிய அரசியல் நடவடிக்கைகள் தொடர்பாக வலுவான வேறுபாடுகள் காணப்படு கின்றன.

தமிழ் மக்களோ அல்லது முஸ்லிம் மக்களோ அவரவர்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங் களில் தத்தமது மொழியினையும் கலாசாரத்தையும் பேணிப் பாதுகாத்துச் செழுமைப்படுத்தும் உரிமையினைக் கொண்டுள்ளனர் என்பது இங்கே பிரச்சினைக்குரிய விடயமல்ல. குறிப்பிட்ட ஒரு பிரதேசத் தில் மட்டுமல்ல, நாட்டின் எந்தப் பிரதேசமென்றாலும் மற்றைய சமூகங்களைப் புறந்தள்ளாமல் தனியொரு சமூகத்தின் உரிமையினை எப்படி அமுல்படுத்துவது என்பதிலேயே மோதல் எழுகின்றது. இது தவிர்க்கப்படும் பட்சத்தில் மட்டுமே இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்வதை ஏனைய சமூகங்கள் அனுமதியளிக்க முடியும்.

### தமிழ் மற்றும் சிங்கள “தேசிய உணர்வுகள்” பரஸ்பரம் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

மேலும் இவ்வாறான அரசியல் நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்குத் தேவையான விடயங்களை மேற்கொள்ளும்போது தமது சொந்த வலுவான “தேசிய உணர்வு”களுடன் எழுச்சி பெற்றுள்ள சிங்கள சமூகத்தின் கருத்துக்களும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். அதாவது தமிழ் சமூகங்கள் தொடர்பான நடவடிக்கைகளை எடுக்கும்போது தமது சொந்த மொழியையும் கலாசாரத்தையும் பேணிச் செழுமைப் படுத்துவது எவ்வாறு தம்மைப் பாதிக்குமென்று கொண் டிருக்கும் கருத்துக்களும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும். மறுமுனையில் ஏற்படக்கூடிய தமிழ் “தேசிய உணர்வுகளையும்” அதேபோல் சிங்கள “தேசிய உணர்வுகள்” புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

எனவே இந்த மீளமைப்பு நீண்ட நோக்கில் பயன்மிக்கதாக இருக்க வேண்டுமானால் சம்பந்தப்பட்ட சகல சமூகங்களினதும் கூட்டான இணக்கத்தையும் முழு இலங்கை மக்களின் அங்கீகாரத்தையும் பெற வேண்டும்.

தமிழ் மக்களின் தனித்துவக் கலாசார அடையா ளங்களை அங்கீகரித்து அவர்கள் தம்மைச் செழுமைப் படுத்தும் நடவடிக்கைகளை எடுக்கக்கூடிய அரசியல் வரையறையானது உருவாக்கப்பட்டால் முழு நாட்டினதும் ஒருமைப்பாட்டினைப் பேணுவதற்கு அது எதிராக அமைந்துவிடுமென்ற வலுவான அச்சம் சிங்களவர் மத்தியில் எழுந்துள்ளது. அவ்வாறு அமை யும் பட்சத்தில் தமது சொந்த மொழியினையும் கலா சாரத்தையும் பேணிப் பாதுகாக்கக்கூடிய தமது உரிமை பறிபோய்விடுமென்று சிங்களவர்கள் பயப்படு கின்றார்கள். எல்.ரீ.ரீ.ஈ.யினரின் செயற்பாடுகளினால் இலங்கையின் அரசியல் தீர்வு முயற்சிகளில் வெளி நாட்டு அரசாங்கங்களும் சர்வதேச முகவராண்மை நிறுவனங்களும் நேரடியாகத் தலையிடுவதால் தமது அச்சம் நியாயமானதென்று சிங்களவர்கள் நம்புகின்றனர்.

எனவே இந்தச் சிறிய நாட்டிற்குள் தனி நாடொன் றினை உருவாக்கும் நடைமுறைச்சாத்தியம் தொடர்ச்சியான எல்லைப்புற யுத்தத்தினால் மட்டும் ஏற்படுத்தப்படுவதில் தங்கியிருக்கவில்லை. பிராந்திய மற்றும் சர்வதேச அதிகாரப் போராட்டங்களுக்கான யுத்தகளமாக முழு நாட்டையே தனிநாடு திறந்து விட்டு விடும். வடக்கில் ஏற்படுகின்ற அரசியல் அமைப்பு முறை தெற்கில் பெரும் செல்வாக்கினை செலுத்தக்கூடும். எமது அண்மைய வரலாறு இதற்குச் சான்று பகர்கின்றது. அதாவது தாராள ஜனநாயகம், சந்தைப் பொருளாதாரம் அல்லது சோசலிஸம் அல்லது சிங்கள “தேசிய உணர்வு” என்று எந்தப் போர்வைக்குள் வந்தாலும் தெற்கிலுள்ள மக்கள் உடனடியாகவோ அல்லது காலந் தாழ்த்தியோ அவ்வாறான சர்வாதிகாரப் போக்குகளை நிராகரித்துள்ளனர்.

### “தேசிய அரசா?” அல்லது “குடியரசா?”

எனவே தமது மொழியையும் கலாசாரத்தையும் பேணிப் பாதுகாப்பதற்கு தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் எடுக்கும் அரசியல் நடவடிக்கைகள் இலங்கைச் சமூகத்தில் தற்போது பேணப்பட்டு வரும் ஜனநாயக அம்சங்களை ஆகக் குறைந்தது அதே அளவில் பேணக்கூடியதாக எடுக்கப்படவேண்டுமென்று “தேசிய உணர்வுகளால்” உந்தப்பட்ட சிங்களவர்கள் நம்புகின்றார்கள் என்று சொல்லலாம். அதாவது, வெளிநாட்டுச் சக்திகள் இலங்கையினைத் தமது அரசியல் அதிகாரப் போராட்டங்களுக்கு பாவிக்க அனுமதிக்கக் கூடாது. இந்தச் சிறிய நாட்டிலுள்ள வளங்கள், சகல சமூகங்களும் சமத்துவமாக அனுப விக்கக் கூடியதாக கிடைக்க வேண்டும். இலங்கை யிலுள்ள இன சமூகங்கள் எதிரிகளாக மாறக் கூடா தென்பதோடு இறுதிவரை அவர்கள் ஒருவருக்கொருவர் யுத்தம் புரிந்து கொண்டிருக்கவும் கூடாது.

எனவே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்ப தற்கான முயற்சிகள் அரசியல் கலந்துரை யாடல்களுக்கூடாக மேற்கொள்ளப்பட வேண்டும். அதாவது சம்பந்தப்பட்ட தரப்புக்கள் மத்தியில் நம்பிக்கை யைக் கட்டியெழுப்பக் கூடிய விதத்தில் வெளிப் படையாகவும் நட்புறவுடனும் நடாத்தப்பட வேண்டும். சம்பந்தப்பட்ட எந்தத் தரப்பினதும் இராணுவ பலத்தி னூடாகவோ அல்லது முன்கூட்டியே தெரிவிக்கப்படும் தத்துவங்கள் மற்றும் சூத்திரங்கள் மூலமாகவோ தீர்வு காண முடியாது என்பதே அவையாகும்.

மனிதர்களுக்கிடையில் பரஸ்பர இணக்கத்துடனும் அரசியல் அங்கீகாரத்துடனும் அமுல்படுத்தப்படும் உரிமைகளே செயல் வடிவம் பெறும். இயற்கையான உரிமைகளென்று உலகளாவிய அடிப்படையில் வகுக்கப்பட்டு கருதப்படுபவை செயல்படுத்தப்பட முடியாதவை.

எம்முடையதைப் போன்ற பல்கலாசார சமூக அமைப்பொன்றில் தத்தமது சொந்தக் கலாசாரங் களுக்குள் சகல சமூகங்களும் வாழும் உரிமையினை நாம் எவ்வாறு உறுதிப்படுத்தப் போகின்றோம் என்பது நாம் கையாள வேண்டிய பிரச்சினையாகும். முழு சமூகத்தினதும் ஐக்கியத்தையும் சமாதானத்தையும் பேணத் தேவையான பொதுத் தன்மையினை நாம் எவ்வாறு கட்டியெழுப்பப் போகின்றோம்? எமது “அரசு” வெறுமனே பெயரளவில் இல்லாத உண்மையான “குடியரசு” ஆக எவ்வாறு மாற்றப்படலாம்? இதனைக் கவனத்திற் கொள்ளுவதிலேயே இப்பிரச்சினைத் தீர்வுகளின் மார்க்கம் தங்கியுள்ளது. எமது ஆலோசனை இதுவே.


*(முற்றும்)*

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

**இன்னொரு** நாடகம் - 'சிரிப்புத்தான் வருகுதய்யா' - இதை என் அருமை நண்பரும். என்னுடைய God father ம் ஆன, திரு.ஏ.கோபாலகிருஷ்ணன் நடத்தினார்.

உண்மையைச் சொல்லப் போனால், திரு. கோபிதான், இந்த சென்னையில் என் நாடக முயற்சிக்கு வித்திட்டவர். இந்த நாடகம் மேடையில் மிகப் பெரிய வெற்றியைக் கண்டு,



தொலைக்காட்சியில் இரு முறை ஒளிபரப்பப்பட்டது.

ஒரு திரைப்படப் பாடலாசிரியனாகவும், ஒரு திரைப்பட வசனகர்த்தாவாகவும் நான் கோடம்பாக்கத்தில் கொலு விருப்பதற்கு, திரு. கோபிதான் பிள்ளையார் சுழி போட்டவர்.

இன்னமும் கோபி அவர்கள் நாடகத்திற்கு மக்களிடையே ஓர் ஈர்ப்பு ஏற்பட, அரும்பாடுபட்டு வருகிறார் என்பது அனைவரும் அறிந்த சேதியாகும்.

ஏறத்தாழ, திரைப்பட உலகில் 45 ஆண்டுகளாக பல்வேறு படங்களில் பல்வேறு பாத்திரங்களை ஏற்று முழுநேர திரைப்பட நடிகராக இருந்த கோபி தாய் வீடான நாடகத்தின்பால் மாளாக் காதல் கொண்டு அல்லும் பகலும் அதற்கனவே பாடுபடுவது குறித்து ஏனைய திரையுலக நட்சத்திரங்கள் சிந்திப்பது நல்லது. முத்தமிழில் ஒன்றான நாடகம், மீண்டும் தென்புலத்தில் தலைதூக்கும்.

'சம்பூர்ண ராமாயணம்' என்றொரு நாடகத்தை நான் சொந்தமாக நடத்தினேன். இதை என் நண்பரும், இயக்குநர் சிகரமுமான திரு. பாலசந்தர் படமெடுக்க விரும்பி, உரிமையை வாங்கினார். பல்வேறு காரணங்களால் அது படமாகுவது தள்ளிப் போயிற்று.

ஆயினும் 'சம்பூர்ண ராமாயண'த்தில் நடித்த, அனுந்துவை, 'அனமந்து' என்று நாமகரணமிட்டு - 'நிழல் நிஜமாகிறது' படத்தின் நாயகனாக்கினார் பாலச்சந்தர். இதே போலவே அந்த நாடகத்தில் பங்கு பற்றிய ராஜப்பாவை 'நினைத்தாலே இனிக்கும்' படத்திலும், ராமசாமியை 'பட்டணப் பிரவேசம்' படத்திலும் பெரிய வேஷங்கள் கொடுத்து வெளிச்சத்திற்கு கொண்டு வந்தார் பாலச்சந்தர்.

இவர்களுடைய முன்னேற்றத்திற்கு என் நாடகம் காரணமாக இருந்தது குறித்து நான் பெரிதும் மகிழ்வுற்றேன். இந்தக் காலகட்டத்தில் 'இந்தியாடுடே' என்றொரு நாடகத்தை என் நண்பர் கலாகேந்திரா கிருஷ்ணனுக்காக எழுதிக் கொடுத்தேன்.

இதில் படவுலகினரால் பாசத்தோடு 'ஆச்சி' என அழைக்கப்படும் திருமதி மனோரமா கதாநாயகியாக நடித்து ஒரு கலக்கு கலக்கினார். மனோரமாவை எனக்கு 35 ஆண்டுகளுக்கு மேலாகத் தெரியுமாதலால், என் உரையாடல்களின் பாணியை இம்மியளவு பிசகாமல் 'இந்தியா டுடே' நாடகத்தில் பின்பற்றி, எனக்கும் என் எழுத்திற்கும் பெரும் புகழ் சேர்த்தார்.

'இந்தியா டுடே' நாடகம் இலங்கையில் கூட நடந்தது.


இந்த நாடகத்தை மியூசிக் அகடமியில் பார்த்து விட்டுத்தான் - என் நாடகத்தில் நடிக்க வேண்டும் என்று தன் ஆசையைத் தொலைபேசி மூலம் எனக்குத் தெரியப்படுத்தினார், திரு. ரஜினிகாந்த். இது பற்றி முந்தைய அத்தியாயத்தில் எழுதியிருக்கிறேன்.சமீபத்தில் என்னுடைய நாடகமான 'ஸ்ரீ ராமநவமி'யில் நண்பர் சார்லி நடித்து, அனைவரையும் வியக்க வைத்தார். இந்த நாடகத்தின் மூலம் திரு. சார்லி, புதிய சிகரத்தை எட்டுவார் என்று நம்பியிருந்த போதும், சென்னையில் நாடகங்களுக்குத் தற்போது ஏற்பட்டுள்ள தேக்க நிலை காரணமாக என் எண்ணம் பலிக்காது போயிற்று.

இருப்பினும் நண்பர் சார்லி ஓர் அற்புதமான நடிகர் என்பதையும், அவர் மீண்டும் என்னுடைய எழுத்துக்களைப் பேசி ஒரு வியத்தகு சாதனையின் மூலம் நாடக ரசிகர்களைக் கவருவார் என்பதையும் அது திரைப்படமாக வெளியாகி திரு. சார்லியின் முழு ஆற்றலும் தமிழ் கூறும் நல்லுலகம் காணக்கூடும் என்பதையும் இன்னமும் சாத்தியமான விஷயமாகவே நம்பிக் கொண்டிருக்கிறேன்.

(தொடரும்.......)




## உளவு பார்த்தலால் ஏற்படும் நன்மை, தீமைகள் பற்றிக் கூறும் அநுபவக் கட்டுரைத் தொடர்....




அமெரிக்காவில் பிடிபட்ட ரஷ்ய உளவாளியின் காரில் நவீன எலக்ட்ரானிக் கருவிகளும் புகைப்படக் கருவிகளும் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

அந்த உளவாளி காது மந்தமானவன் போல நடித்து Hearing aid ஒன்றையும் காதில் பொருத்திபிருந்தான் அது Hearing aid அல்ல. மிக நுண்மையான ரேடியோ ரிஸீவர் கருவி. அமெரிக்க உளவுத் துறையினர் அனுப்புகின்ற ரேடியோ தகவல்களைக் கேட்பதற்காக அவன் பயன்படுத்திய கருவி. அந்த ரஷ்ய ஒற்றனிடமிருந்து இன்னும் பல்வேறு நுண்மையான சாதனங்கள் கைப்பற்றப்பட்டன.


அமெரிக்காவும் ரஷ்யாவும் போட்டி போட்டுக் கொண்டு ஒரு நாடு அனுப்புகின்ற தகவல்களை இன்னொரு நாடு ஒட்டுக் கேட்பதற்கு பல வகையான கருவிகளையும் பயன்படுத்துகின்றன. அமெரிக்காவில் செயல்படும் National Security Agency பிரமிக்கத்தக்க விஞ்ஞான சாதனங்களை உளவு பார்க்கும் வேலைக்குப் பயன்படுத்துகிறது. அமெரிக்காவிலிருந்து வெளியே செல்லும் டெலிபோன், டெலக்ஸ் தகவல்கள் அனைத்தையும் பதிவு செய்யக் கூடிய மிகப் பெரிய சாதனத்தை வாஷிங்டனில் உள்ள தங்களின் தலைமை நிலையத்தில் இவர்கள் வைத்திருக்கிறார்கள். இவர்கள் கண்காணிக்க விரும்புகின்ற டெலிபோன், டெலக்ஸ் ஆகியவற்றுக்கு எண்கள் கொடுத்திருக்கிறார்கள். அந்த எண்ணுக்குரிய கருவிகளில் வெளியில் செல்லும் அனைத்துத் தகவல்களையும் இவர்களால் பதிவு செய்ய முடியும். இதற்கென்று அமைக்கப்பட்டுள்ள விண்வெளிக் கலம் இந்த தகவல்களை பிரதிபலித்து தலைமை நிலையத்தில் அமைந்துள்ள கருவிகளில் பதிவாக அனுப்பி வைக்கிறது.

இதற்கு மட்டும் பல கோடி டாலர்களை இவர்கள் செலவிடுகிறார்கள். CIA, FBI ஆகிய இரண்டையும் விட இவர்கள் செலவு செய்கின்ற தொகை அதிகம் என்று சொல்லப்படுகின்றது.

NSA என்று அழைக்கப்படுகின்ற இந்த அமைப்பு விஞ்ஞான சாதனங்களை மட்டுமே நம்பி அமெரிக்காவில் செயல்படுகின்ற மிகப் பெரிய ஒற்றர் நிறுவனமாகும். அமெரிக்காவிலிருந்து வெளிநாடுகளுக்குச் செல்லுகின்ற செய்திகளையும், வெளிநாடுகளிலிருந்து அமெரிக்காவுக்கு வருகின்ற செய்திகளையும் பதிவு செய்வதற்கென்றே இவர்களிடம் ஏராளமான சாதனங்கள் இருக்கின்றன. உலகெங்கும் பரவியுள்ள தங்களின் உளவு நிறுவனங்களோடும் தனிப்பட்ட உளவாளிகளோடும் இவர்கள் உடனுக்குடன் தொடர்பு கொண்டு விடுகிறார்கள். இதற்கென்றே விசேஷமான உபகரணங்களை ஆஸ்திரேலியா, டீகோகார்ஷியா போன்ற பல்வேறு இடங்களிலும் இவர்கள் வைத்திருக்கிறார்கள்.

(தொடரும்.......)

(நன்றி : நர்மதா)



## திரும்பிப் பார்த்தல்

**டெனியல்** சிக்காரெல்லி எனும் இவர், பிரஸிலில் புகழ்பெற்ற கால்பந்தாட்ட வீரர் ரொனால்ட்டோவின் காதலியாக இருந்து உலகப் புகழ்பெற்றவர்.

பின்னர் இவரும் ஒரு கால் பந்தைப் போல் ரொனால்ட்டோவினால் உதைத்து ஓரமாக்கப்பட்டார்.

இதனால் இவர் தனது தைரியத்தை இழந்து விடவில்லை. டொமல் உலகில் நீண்டதொரு பயணத்தை மேற்கொள்ளும் நோக்கத்துடன் காலடி எடுத்து வைத்தார்.

இப்போது ஒரு மொடல் அழகி என்ற ரீதியில் முழு உலகுமே தன்னை பார்த்துக் கொண்டிருக்கிறது என்பதை இவர் அறிவார்.

அதனால் தனது பழைய வாழ்க்கையைப் பற்றி தனக்குத் திரும்பி பார்க்க நேரமில்லை எனக் கூறுகிறார்.



## அசைவ விஷயம்!

**ஆடைகள்** எவ்வளவோ இருக்க இவள் அணிந்து வருவதோ ஒரு சில சலாது இலைகளை! இதுவும் ஒரு மொடல் என்று நினைத்து விடாதீர்கள்... அல்லது கோடை கால ஆடையும் அல்ல!

சலாது இலைகளால் ஆன உடையில் தனது மர்மப் பகுதிகளை மாத்திரம் மறைந்துக் கொண்டு லண்டன் நகரில் இந்த யுவதி ஒரு நகர்வலம் வந்தார்...

அதாவது மருத்துவ பரிசோதனைகளுக்காக மிருகங்களை உபயோகப்படுத்த வேண்டாம் என்பதும், அசைவ உணவுகளை உட் கொள்வதற்கு மக்களைப் பழக்கப்படுத்த வேண்டும் என்பதும் தான் இவரது இந்தக் கோலத்தின் கோரிக்கை! அசைவத்திலும் விஷயம் இருக்கிறது! மிருகங்கள் வாழ்க!

## மெஜிக் கனவு



**மெஜிக்** பெட்டகமொன்றின் ஊடாக கனவு லகிற்குச் செல்லக்கூடிய திரைப்படமொன்று The Lion, the witch and the wardrobe என்ற பெயரில் அண்மையில் லண்டன் ரோயல் எல்பர்ட் மண்டபத்தில் திரையிடப்பட்டது. நார்னியா என்றழைக்கப்படும் இப்பெண்மணியும் இத்திரைப்படத்தின் ஒரு பங்காளியாவார்.

தன்னோடு கனவுலகிக்குச் சென்று மந்திரவாதிப் பெண்களையும் சிங்கங்களையும் சந்திக்கலாம் வாருங்கள் என இவர் அழைப்பு விடுக்கின்றார்.

இத்திரைப்படம் திரையிட்ட போது அவ்வைபவத்தில் இளவரசர் சார்ள்ஸும் கலந்து கொண்டிருந்தார்.

நல்லவேளை, அதிஷ்டவசமாக இப் பெண் இளவரசர் சார்ள்ஸை மெஜிக் காட்டுவதற்கு அழைக்கவில்லை.



## மனிதம் பாதி மிருகம் பாதி

**தாய்ப்பாசம்** என்பது வரையறைக்கு உட்பட்டதல்ல! அது யாருக்கும் பொதுவானது. மிருகங்களாகட்டும், மனிதர்களாகட்டும்!


இங்கே ஒரு மார்பில் தனது குழந்தைக்கும் இன்னொரு மார்பில் புலிக்குட்டிக்கும் பால் வார்க்கும் தாய்லாந்து நாட்டுத் தாயின் பாசத்தைக் காண்கின்றீர்கள்....


## விலையில்லாத காதல்

**ஹொலிவூட்** நடிகையான பெரிஸ் ஹில்டன் சில மாதங்களுக்கு முன்னர் கோடீஸ்வர கப்பல் போக்குவரத்து உரிமையாளர் ஒருவரைத் திருமண ஒப்பந்தம் செய்து கொண்டார்.

அன்றைய தினம் இவர்கள் இருவரும் திருமண ஒப்பந்தம் செய்து கொண்டதை அறிவிக்கும் முகமாக ஒரு வைபவம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கப்பல் உரிமையாளர் 24 கரட் வைர மோதிரம் ஒன்றை ஹில்டனுக்கு அணிவித்தார். இதன் பெறுமதி 35 இலட்சத்துக்கும் அதிகமானதாகும். பெறுமதிமிக்க இந்த மோதிரத்தை ஹில்டன் இப்போதும் அணிந்த நிலையிலேயே காணப்படுகின்றார்.

ஆனால், தனக்கு அந்த கோடீஸ்வர நபர் பொருத்தமற்றவர் என அவர் கூறி வருகிறார். காதலுக்கு விலை கிடையாது என்பது இது தானோ?





## 40க்கு முன்...

**மொடல்** அழகியான லிஸ்ஹர்லி தற்போது 40 வயதில் உலாவிவருகின்றார். எனினும் தான் திருமணம் செய்து கொள்ள வேண்டும். என பல வருட காலமாக தவமாய் தவமிருந்து வரும் இவர், 40 வயதுக்கு முன் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்றொரு தீர்மானத்தை அண்மைக்காலத்தில் எடுத்திருந்தும் இறுதி நேரத்தில் அதுவும் கைகூடாமல் போய் விட்டது.

எனினும் தனது திருமண முயற்சியைத் தளராது மேற்கொண்டு வரும் ஹர்லி 40 க்குள் திருமணம் முடித்து விடுவேன் எனக் கூறுகிறார்....

40 இல் ஆவது திருமணம் வருமா எனப் பார்ப்போம்.




# அதிரும் கொலையாளி ஆட்டோ சங்கர்

## 1,100 பக்க குற்றப் பத்திரிகை

6 பேர்கள் படுகொலை செய்யப்பட்டது தொடர்பாக, ஆட்டோ சங்கர் உட்பட 10 பேர் மீது சைதாப்பேட்டை 2 ஆவது ஜுடிசியல் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் 26.12.1988 அன்று குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

இந்த குற்றப்பத்திரிகை 1,100 பக்கம் கொண்டதாக இருந்தது. ஆட்டோ சங்கர் உள்பட 10 பேர் மீதும் இ.பி.கோ. 320 பி (சதி செய்தல்), 147 (கூட்டமாக சேர்ந்து கலவரம் செய்தல்), 148 (பயங்கர ஆயுதங்களுடன் கலவரம் செய்தல்), 364 (கொலை செய்வதற்கு ஆட்களை கடத்தல்), 302 (கொலை), 201 (கொலைக்களுக்கான சாட்சியங்களை மறைத்தல்) ஆகிய 6 பிரிவுகளின் கீழ் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.



மீண்டும் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட பின்னர் ஆட்டோ சங்கர்.

28.10.1987 அன்று சுடலையும், 8.1.1988 அன்று லலிதாவையும் 15.3.1988 அன்று ரவியும். 29.5.1988 அன்று சம்பத், மோகன், கோவிந்தராஜ் ஆகியோரும் கொலை செய்யப்பட்டதாக அதில் தெரிவிக்கப்பட்டு இருந்தது.

## 134 பேர் சாட்சியம்

பின்னர் இந்த வழக்கு செங்கல்பட்டு சென்ஸ் கோர்ட்டுக்கு மாற்றப்பட்டது. நீதிபதி மோகன்தாஸ் வழக்கை விசாரித்தார். முதலாவதாக அப்ரூவர் பாபு சாட்சியம் அளித்தார். அதைத் தொடர்ந்து 9 மாஜிஸ்திரேட்கள், 5 பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் உட்பட மொத்தம் 134 பேர் சாட்சியம் அளித்தனர்.

அனிமா, நடிகை பவனா, மற்றும் விபச்சார அழகிகளான அனிதா, கவிதா ஆகியோரும் இந்த வழக்கில் சாட்சியம் அளித்தனர். அரசு தரப்பில் வக்கீல்கள் கம்பம் சுப்பிரமணியம், எஸ். கோபாலகிருஷ்ணன், பால்ராஜ் ஆகியோர் வாதாடினார்கள். ஆட்டோ சங்கர் தரப்பில் வக்கீல் நடராஜா, அவருக்கு உதவியாக கணேஷ், மனோகர் ஆகியோர் ஆஜர் ஆனார்கள்.

## தூக்குத் தண்டனை

இந்த வழக்கில் 31.05.1991 அன்று தீர்ப்பு கூறப்பட்டது. குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட போது ஆட்டோ சங்கரின் தம்பி மோகன், செல்வராஜ் ஆகியோர் தலைமறைவாக இருந்ததால் அவர்கள் மீதான வழக்கு விசாரணை தனியாகப் பிரித்து நடைபெற்றது.

எனவே, ஆட்டோ சங்கர் உட்பட 8 பேரும் கை விலங்கு மாட்டி கோர்ட்டுக்கு அழைத்து வரப்பட்டு ஆஜர்படுத்தப்பட்டனர்.

தீர்ப்பு கூறும் முன் அவர்களிடம் நீதிபதி. "உங்கள் மீது குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டு இருக்கின்றன. நீங்கள் எதுவும் சொல்ல விரும்புகிறீர்களா?". என்று கேட்டார். அதற்கு ஆட்டோ சங்கர், "நாங்கள் குற்றவாளிகள் அல்ல" என்று பதில் அளித்தான். மற்றவர்களும் அதையே கூறினார்கள்..

அதைத் தொடர்ந்து ஆட்டோ சங்கர் உட்பட 8 பேரிடமும் "நாங்கள் குற்றவாளிகள் அல்ல" என்று எழுதப்பட்டிருந்த ஒரு வெள்ளை காகிதத்தில் கையெழுத்து வாங்கப்பட்டது.

10.49 மணிக்கு நீதிபதி எழுந்து அவரது அறைக்கு சென்று விட்டார். அந்த சமயத்தில் குற்றவாளிகளின் அங்க அடையாளங்களை கோர்ட் ஊழியர்கள் சரி பார்த்து குறித்துக் கொண்டனர்.


பகல் 11.45 மணிக்கு நீதிபதி மீண்டும் தனது இருக்கைக்கு வந்து அமர்ந்தார். ஒரே நிமிடத்தில் அதாவது 11.46 மணிக்கு தனது தீர்ப்பை கூறி விட்டு உடனடியாக அவரது அறைக்கு சென்றுவிட்டார்.

"ஜெயவேலு? ராஜாராமன், ரவி, பரமசிவன் ஆகியோருக்கு ஆயுள் தண்டனை விதிக்கிறேன். சங்கர், எல்டின், சிவாஜி ஆகியோருக்கு தூக்கு தண்டனை அளிக்கிறேன். இவர்களை அழைத்துக் கொண்டு போகலாம்" என்று மட்டும் நீதிபதி கூறினார்.


அதைத் தொடர்ந்து ஆட்டோ சங்கர் உட்பட 8 பேரும் கைகளில் விலங்கு மாட்டப்பட்ட நிலையில் பொலிசாரால் அழைத்துச் செல்லப்பட்டனர்.




லலிதா




ரவி



சம்பத்



மோகன்



கோவிந்தராஜ்



சுடலை

## சிரித்தமுகத்துடன்

ஆட்டோ சங்கர் கோர்ட்டுக்கு வரும்போது சிரித்தபடியே வந்தான். பத்திரிகை நிருபர்களைப் பார்த்து கையசைத்து வணக்கம் தெரிவித்து கொண்டான். போட்டோ கிராப்பர்களுக்கு சிரித்தபடியே போஸ் கொடுத்தான்.


கோர்ட்டில் தீர்ப்பு கூறப்பட்டபின் ஆட்டோ சங்கர் தனது கூட்டாளிகளைப் பார்த்து சிரித்துக் கொண்டான். அவனது முகத்தில் எந்தவித கவலையும் தெரியவில்லை.

ஆட்டோ சங்கரின் தாய் ஜெயலட்சுமி கோர்ட்டுக்கு வந்திருந்தார். நீலநிற தோல் பையை தோளில் தொங்கவிட்டிருந்த அவள் ஆட்டோ சங்கரைப் பார்த்து கண்ணீர் விட்டார். வேனில் ஏறி ஜெயிலுக்கு அழைத்துச் செல்லப்பட்ட போது, ஆட்டோ சங்கர் தனது தாயைப் பார்த்து கை அசைத்தபடியே சென்றான்.

(கொலைகள் தொடரும்....)

# 2ஆம் உலகப் போர்

**முதல்** உலகப் போரின் போது ஜெர்மனியிடம் தோற்றுப் போன ரஷ்யா அதனுடன் சமாதான ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தது. ஆனால் நம்பிக்கை துரோகம் செய்து விட்டு 1941 ஜுன் 22ஆம் திகதி ரஷ்யா மீது படையெடுத்தார் ஹிட்லர். இரண்டாம் உலகப்போரில் ரஷ்யா மீது படையெடுத்தது முக்கியமான கட்டமாகும்.




ஹிட்லர்

ரஷ்யாவுக்கு ஹிட்லரால் பெரும் உயிர்சேதத்தையும், பொருள் சேதத்தையும் ஏற்படுத்த முடிந்ததே தவிர, வெற்றி பெற முடியவில்லை. 'இரும்பு மனிதர்' ஸ்டாலின் தலைமையில் ரஷ்ய மக்கள் விஸ்வரூபம் எடுத்து ஹிட்லருக்கு சரியான பதிலடி கொடுத்தனர். அது போரின் போக்கையே மாற்றியது. உலகின் பல்வேறு நாடுகளிலும் போர் பரவிக் கொண்டிருந்த அதே நேரத்தில் ஜெர்மனிக்கும். ரஷ்யாவுக்கும் இடையேயான போர் 1941 ஜுன் மாதம் தொடங்கி, 1943 ஜனவரி வரை நடந்தது. 1941 ஜுன் 22ஆம் திகதி அதிகாலை நேரம் ஜெர்மனி விமானங்கள் சாரி சாரியாகப் பறந்து ரஷ்ய நகரங்கள் மீது குண்டுகள் வீசின. அதேசமயம், 1.000 மைல் நீள எல்லையைத் தாண்டி, ரஷ்யாவுக்குள் ஜெர்மனி இராணுவம் புகுந்தது. என்றைக்காவது ஒரு நாள் ரஷ்யா மீது ஜெர்மனி படையெடுக்க கூடும் என்று ஸ்டாலின் ஏற்கனவே எதிர்பார்த்தார். ரகசிய ஒற்றர்கள் மூலம் அவருக்கு இது பற்றிய தகவல்கள் வந்து கொண்டிருந்தன. ஆனால் அவ்வளவு பெரிய அளவில் ஹிட்லர் தாக்குதல் நடத்துவார் என்று அவர் எதிர்பார்க்கவில்லை தரைப்படை, கடற்படை, விமானப்படை ஆகிய மூன்றிலும் ஜெர்மனியை விட ரஷ்யாவின் கையே ஓங்கியிருந்தது. எனினும் ரஷ்ய விமானங்கள் மிகப் பழையவை. ஆயுதங்களும் பெரும்பாலும் உபயோகமற்றவை. எனவே நவீன விமானங்களைக் கொண்டு ஜெர்மனி நடத்திய தாக்குதலை சமாளிக்க முடியாமல், ரஷ்யா திணற வேண்டியிருந்தது.




ரஷ்யாவின் போக்குவரத்து பாதைகளை ஜெர்மனி இராணுவம் தூண்டித்துவிட்டு முன்னேறியது. ஆகஸ்ட் மாத இறுதிக்குள் ரஷ்யா இழந்த விமானங்கள் எண்ணிக்கை சுமார் 5,000. நாள் ஒன்றுக்கு 50 மைல் வீதம் ஜெர்மனி படைகள் முன்னேறிக் கொண்டிருந்தன. ரஷ்யா பதிலடி கொடுத்த போதிலும், போரில் ரஷ்ய வீரர்கள் ஏராளமாக பலியாகிக் கொண்டிருந்தனர். 1941 செப்டம்பர் 8 ஆம் திகதி ரஷ்யாவின் முக்கிய நகரமான லெனின்கிராடை ஜெர்மனி படைகள் முற்றுகையிட்டன.




ஜெர்மனியின் மற்றொரு படை மொஸ்கோவுக்கு 250 மைல் தூரத்தில் இருந்தது. ஏறத்தாழ, ரஷ்யாவின் பாதிப் பகுதியை ஹிட்லர் படைகள் கைப்பற்றிக் கொண்டு விட்டன. எனினும் ரஷ்ய எல்லை 1,000 மைல்களுக்கு மேலாக விரிந்து பரந்து இருந்த காரணத்தால், கைப்பற்றிய பகுதிகளில் ஜெர்மனி படைகள் வேரூன்ற முடியவில்லை. ரஷ்யப் புரட்சி நாளான நவம்பர் 7ஆந் திகதிக்குள் மொஸ்கோவை கைப்பற்றி விட வேண்டும் என்பது ஹிட்லரின் திட்டம். ஒக்டோபர் 14 ஆம் திகதி மொஸ்கோவை ஜெர்மனி படைகள் நெருங்கி விட்டன.




ஸ்டாலின்

இன்னும் 50 மைல் தூரம் தான் மீதமாக இருந்தது. விரைவில் மொஸ்கோவும் வீழ்ந்து விடும் என்றே எல்லோரும் நினைத்தனர். மொஸ்கோவில் இருந்த மக்கள் கூட்டம் கூட்டமாக வெளியேறினார்கள். நகரமே காலியாகிக் கொண்டிருந்தது. ஊரை விட்டு பத்திரமான இடங்களுக்கு செல்லுமாறு மந்திரிகளுக்கு ஸ்டாலின் கட்டளையிட்டார். ஆனால் அவர் மட்டும் ஊரை விட்டு வெளியேறாமல் தன் மாளிகையிலேயே தங்கியிருந்தார். இந்தச் சமயத்தில் ஸ்டாலினுக்கு இயற்கை கை கொடுத்தது.


(தொடரும்...)





# சங்கீதமே....

> தவத்தினை எளிதாப் புரிந்தனள். யோகத்
> தனிநிலை ஒளியெனப் புரிந்தாள்;
> சிவத்தினை இனிதாப் புரிந்தனள், மூடச்
> சித்தமும் தெளிவுறச் செய்தாள்.
>
> - சுப்பிரமணிய பாரதியார்



கிழட்டுக் கழுதையொன்று ஒரு விவசாயிடம் இருந்தது. ஒரு நாள் தன் மனைவியிடம், "இந்தக் கிழட்டுக் கழுதையால் இனி நமக்குப் பிரயோஜனமில்லை. இதற்கு இனி தீனி வைப்பது நமக்கு நஷ்டம்....நாளை இதைத் தொலைத்துவிட வேண்டும்" என்று கூறிக் கொண்டிருந்தான்.

மனிதனின் நன்றி கெட்ட தன்மையை நினைத்து கழுதை மிகவும் வேதனைப்பட்டது. அவன் நம்மைத் தொலைப்பதற்கு முன் நாம் தொலைந்துவிட வேண்டுமென்று நினைத்தது. இனி எங்கு செல்லலாம் என்று சிந்தித்தது.

பாடுபவர்களைப் பார்த்து சிலர், உன் குரல் கழுதை போல் இருக்கிறதென்று உவமை கூறுவார்களே, அவ்வளவு அருமையான குரலை வைத்துக் கொண்டு நாம் ஏன் சும்மா இருக்க வேண்டும்? நம்முடைய சங்கீதத் திறமையை நாடறியச் செய்தால் என்ன என்று நினைத்தது.

வழியில் அது ஒரு நாயைப் பார்த்தது.

நண்பா! ஏன் சோகமாக இருக்கிறாய்?

என் விதியை என்னவென்று சொல்வது? வேட்டையாடும் வலிமை உள்ளவரை என்னைத் தன்னிடம் வைத்திருந்த என் எஜமான், இப்போது நான் வீடு காக்கவும் லாயக்கில்லை என்று கருதி வீட்டை விட்டுத் துரத்திவிட்டான்... என்றது நாய்.

இந்த மனிதர்களே இப்படித்தான். மிகவும் நன்றிகெட்ட ஜென்மங்கள். அதை விடு நண்பா...இப்போது என்னுடன் வா...நான் உன்னைப் பெரிய சங்கீத வித்வான் ஆக்கி காட்டுகிறேன், என்றது கழுதை.

நாய் தன் பற்களெல்லாம் தெரிய இளித்தது.

ஏன் சிரிக்கிறாய்?

நான் பாடினால் யார் கேட்பார்கள்?

என்ன அப்படிச் சொல்லிவிட்டாய்? உன்னை விட நன்றாகப் பாடுபவர்கள் இந்த உலகத்தில் யார் இருக்கிறார்கள்? நீ வாய் திறந்து குரைத்தால் எட்டுத் திக்கும் மணியோரை போல் கேட்குமே. வா, என்னுடன் சேர்ந்து கொள். உனக்கு இனிய எதிர்காலம் காத்திருக்கிறது என்றது.

நாயும் கழுதையும் சேர்ந்து கொண்டது.

வழியில் ஒரு கிழட்டுப் பூனையைச் சந்தித்தன.

நண்பா! ஏன் இவ்வளவு சோகமாக இருக்கிறாய்? என்று கேட்டது கழுதை.

என்னை அன்பாக இது நாள் வரை வளர்த்த சீமாட்டி, நான் கிழடு ஆகிவிட்டேன் என்று என்னை அடித்து விரட்டி விட்டாள்!

இந்த மனிதர்களே இப்படித்தான். நன்றி கெட்ட ஜென்மங்கள். நமக்கு சக்தி இருக்கும் வரை பயன்படுத்திக் கொண்டு, பின் சக்கையானதும் தூக்கி எறிந்துவிடுவர். கவலைப்படாதே நண்பா! எங்களுடன் நீயும் சேர்ந்து கொள். உனக்கு எதிர்காலம் இருக்கிறது.

எங்கு செல்கிறீர்கள்?

சங்கீத வித்வான் ஆகப் போகிறோம். நீயும் வர்றியா? என்றன.

நானா?

ஏன் இந்த அவநம்பிக்கை உனக்கு? உன் வசீகரக் குரல் வானத்துத் தேவதைகளையும் உன் வசமாக்கிவிடுமே! வா, எங்களுடன். நாம் சங்கீத மழை பொழிந்து மக்களைத் திக்குமுக்காடச் செய்வோம்.

பூனையும் அவற்றுடன் சேர்ந்து கொண்டது.

மறுநாள் ஒரு வீட்டின் கூரையில் சேவல் ஒன்று இருந்தது.

நண்பா! ஏன் எட்டாத உயரத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கிறாய்?

என் எஜமானி என்னைக் கொன்று குழம்பு வைக்க நினைத்தாள். பறந்து வந்து இங்கு உட்கார்ந்திருக்கிறேன்.

பலே, பலே! எங்களுடன் வா? சங்கீதவித்வானாக உன்னை ஆக்கிக் காண்பிக்கிறேன்.

நன்று வருகிறேன்.

## பாப்பா முரசு சிறுகதை

இந்த நான்கு பிராணிகளும் ஒரு காட்டிற்கு வந்தன. அப்போது இரவு நேரம். சேவல் மரத்தில் ஏறிப் பார்த்தது. தூரத்தில் வெளிச்சம் தெரிகிறது....என்று சொன்னது. அவை அங்கு சென்றன.

அது ஒரு காட்டுப் பங்களா.....

அங்கு நான்கு திருடர்கள் குடித்துவிட்டுக் கும்மாளமடித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் முன் சுவையான வகைவகையான உணவுகள், கொள்ளையடித்தப் பொருட்கள், அவற்றில் சில இசைக்கருவிகள்.

இந்த நான்கும் அந்தத் திருடர்களை எப்படி விரட்டுவது என ஆலோசனை செய்தன. பின் ஜன்னல் அருகே கழுதை நின்றது. அதன் முதுகில் நாய் ஏறிக் கொண்டது. நாயின் முதுகில் பூனை, பூனையின் மேல் சேவல், நான்கும் ஒரே நேரத்தில் பலமாகக் குரல் எழுப்பின.

கழுதையின் கத்தலும், நாயின்குரைப்பும், பூனையின் சப்தமும், சேவலின் கூவலும் ஒன்று சேர்ந்து அங்கே ஒரு கலப்படமான விநோத ஓசையை எழுப்பியது. அது மிகவும் பயங்கரமான ஒலியாக இருந்தது. மிரண்டு போன திருடர்கள் குடிப்பதையும், உண்பதையும் அப்படி அப்படியே விட்டுவிட்டு, "துண்டைக் காணோம், துணியைக் காணோம் என்று விழுந்தடித்துக் கொண்டு ஓடினர். அவை நான்கும் அந்த சுவையான உணவுகளை வயிறார உண்டன. பின் விளக்கை அணைத்துவிட்டுப் படுத்துக் கொண்டன.

ஓடிய திருடர்களின் தலைவன், வீட்டில் என்ன நடக்கிறது என்று பார்த்து வருகிறேன், என்று கிளம்பினான்.

கும்மிருட்டாக இருந்ததால் அவனுக்கு ஒன்றும் தெரியவில்லை. மேசை மேல் வைத்திருந்த மெழுகுவர்த்தியை தடவி எடுத்தான். பூனையின் கண்களை அடுப்பில் இருக்கும் நெருப்பு என்று நினைத்துக் கொண்டு அதில் மெழுகு வர்த்தியைப் பற்றவைக்க முயன்றான். பூனை தன் கூரிய நகங்களால் அவனைக் கீறிக் கடித்தது. விட்டால் போதும் என்று வெளியே ஓடிவந்த அவன் மேல் நாய் தாவி அவன் காலைக் கடித்துக் குதறியது.

தப்பித்தோம், பிழைத்தோம் என்று உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு தோட்டத்திற்கு ஓடிய அவனை, கழுதை தன் பின்னங்கால்களால் பலம் கொண்ட மட்டும் உதைத்தது.

ஐயோ செத்தேன், செத்தேன், என்று கத்திக் கொண்டு ஓடிய அவன் காதுகளில் கூரையின் உச்சியிலிருந்து சேவல் கூவும் ஓசையும் விநோதமாகக் கேட்டது. மூச்சிரைக்க ஓடி, தன் நண்பர்கள் முன் போய் விழுந்தான்.

என்ன ஆனது, என்ன ஆனது? நண்பர்கள் கேட்டனர்.

நான் உயிரோடு வந்ததே ஒரு பெரிய அதிசயம். அடுப்பின் நெருப்பு என்று நினைத்து சூனியக்காரியின் கண்களைத் தொட்டுவிட்டேன். அவள் என்னைத் தன் கூரிய நகங்களால் பிறாண்டிக் கடித்தும் விட்டாள். ஓடி வந்த என்னை வாசலில் இருந்த முரடன் ஒருவன் காலில் கத்தியால் குத்திக் கிழித்துவிட்டான். தோட்டத்தில் புகுந்த என்னை அரக்கன் ஒருவன் எலும்புகள் முறிய உலக்கையால் அடித்து நொறுக்கிவிட்டான்.

போதாக்குறைக்கு, கூரைமேல் இருந்த ஒருவன், "விடாதே பிடி, விடாதே பிடி" எனக்குரல் எழுப்பினான். நான் ஓட்டமாக ஓடி வந்துவிட்டேன். அவன் சொன்னது தான் தாமதம், அவர்கள் காட்டை விட்டு வெகுவேகமாய் ஓடிவிட்டனர். பின்னர் அவர்கள் அந்தப் பக்கம் தலைவைத்தும் படுக்கவில்லை.

அந்த நான்கு நண்பர்களும் தங்களைப் பெரிய சங்கீத வித்வான்களாக நினைத்துக் கொண்டு அந்த பங்களாவில் இருந்த இசைக் கருவிகளை வாசித்து விநோதமான ஸ்ருதியில் பாடி காட்டையே கலங்கடித்துக் கொண்டிருந்தனர்.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 08.03.2006

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 634**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
**கொழும்பு**

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 632

**பரிசுக்குரியவர்:**
என். மாலதி,
275, மாரியம்மன் கோயிலடி, மன்னார் வீதி, புத்தளம்.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| ரி. ஜெசிக்கா, 21, புனித பத்திரிசியார் வீதி, யாழ்ப்பாணம். | எம். விக்னேஷ்வர், தரம் 7C, கொ/விவேகானந்தா கல்லூரி, கொழும்பு. |
| ரி. சிவநர்சினி, தரம் 7, 114, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். | வினோ, ரி.வி.கே. மில் வீதி, செங்கலடி. |
| முர்சித்தா பேகம், 63/1, சியம்பலபிட்டிய. கேகாலை. | எம். உஷா. வி.சி. வீதி, வந்தாறுமூலை, செங்கலடி. |
| யோகராசா சிவரஜினி, சரசாலை தெற்கு, சாவகச்சேரி. | பா. அபிலாஷி, தரம் 2, 18, வெலிங்டன் கடை வீதி, திருகோணமலை. |
| சகானுஜா தியகேசன், 55, மேல்மாடி வீதி, மட்டக்களப்பு. | ர. டிவின்சன், 82, புதுச்செட்டித்தெரு, கொழும்பு - 13. |

# ஆத்திசூடி


## நூல் பல கல்

நீ அறநெறிக்கான நூல்களையும் அறிவு வளர்ச்சிக்கான நூல்களைத் தேடித் தெரிந்து அதிகமாகப் படித்து உன் அறிவை விருத்தி செய்.

-ஔவையார்

*எஸ் நிரஞ்சலா, கண்டி.*

# குரங்குப்பிள்ளை வந்தாராம்




குரங்குப் பிள்ளை வந்தாராம்
குரும்பைத் தேங்காய் கண்டாராம்
விருப்பம் மிகவும் கொண்டாராம்
விட்டாராம் கை துளையுள்ளே.

பொத்திப் பிடித்துத் தேங்காயைச்
சக்தி கூட்டி இழுத்தாராம்
முட்டிக் கையை எடுத்திடவே
முடியாமல் மிகத் தவித்தாராம்.

தோட்டக் காரன் கண்டானாம்
துரத்திப் பிடித்து அடித்தானாம்
மோட்டுத் தனமாய்
முயன்றவர்கள்
முடிவில் துன்பம்
அடைவாரே.

# அதிசய உலகம்

## ஆ.... கரப்பான்பூச்சி!



கரப்பான் பூச்சிகளைக் கண்டாலே எல்லோரும் வெறுக்கிறோம். இந்த கரப்பான் பூச்சி, நோய் தீர்க்கும் அரிய மருந்தாகவும் விளங்குகிறது என்றால் நம்புவீர்களா? ஆம்! 'பிராங்கியல் ஆஸ்துமா' நோயாளிக்கு குறிப்பாக மூச்சுத் திணறல் இடைவிடாமல் மேல், கீழ் மூச்சு இவற்றால் அவதியுறும் போதும், இன்னல்களை உடனே அகற்றும் நண்பனாக உதவி செய்கிறது கரப்பான் பூச்சி.

1896ஆம் ஆண்டு, ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த ஆங்கில மருத்துவத்தில் எம்.டி.பட்டம் பெற்ற டாக்டர் சாமுவேல் கிருஸ்டியன் பிரட்ரிக் ஹானிமென் அவர்களால் உலகுக்கு அறிமுகம் செய்யப்பட்ட 'சிம்லியா சிமிலிபுஸ் க்யூரென்டர்' அதாவது ஒத்தவைகள் ஒத்தவைகளால் குணமடையும் என்ற தத்துவத்தை மையமாகக் கொண்டு பயன்படுத்தப்பட்டுவரும் ஓமியோபதி மருத்துவ முறையில் கரப்பான், பிராங்கியல் ஆஸ்துமாவின் மருந்தான பயன்படுத்தப்பட்டு வருகிறது.

'பிளாட்டா ஓரியன்டாலிஸ்' என்பது கரப்பானிலிருந்து தயாரிக்கப்படும் ஓமியோபதி மருந்து. ஆஸ்துமா சம்பந்தமான உபாதைகள் அதிகரித்து நோயாளி பரிதாபமாக மூச்சுத் திணறலில் சிக்கலுற்று திக்கு முக்காடும் போது பிளாட்டா ஓரியன்டாலிஸ் திரவத்தை (15 முதல் 20 சொட்டுகள்) நான்கு தேக்கரண்டி வெந்நீரில் கலந்து கொடுக்கும் போது, ஆங்கில மருத்துவத்தில் ஊசி போட்டுத்தான் தணிக்க முடியும் என்ற நிலையிலுள்ள மூச்சுத் திணறலைக் கூட ஊசி இன்றி ஹோமியோபதியில் கரப்பான் பூச்சின் மூலம் எளிதில் தணிக்கலாம்.


# உங்கள் பொது அறிவு எப்படி?

## பலதும் பத்தும்

| | |
|---|---|
| 1. ஜாத்ரா என்பது யாது? | வங்காளியரின் தெருக்கூத்து |
| 2. காஞ்சி ? | கின லிபி எழுத்து. |
| 3. நண்டி? | பிஜித் தீவின் தலைநகரான ஸுவாவிலுள்ள விமானத் தளம். |
| 4. காபரே? | லெபனானில் பேருட்டில் நடக்கும் நீச்சல் நடனம். |
| 5. பங்கரா? | இந்திய நடனம். |
| 6. பிராமி? | அசேக அட்சரங்களில் காணப்படும் எழுத்து. |
| 7. ஓஹேர்? | சிக்காசோ நகர் விமானத்தளம். |
| 8. குர்பா? | குஜராத்திய நடனம். |
| 9. ஹயிரோகிளிபிக்ஸ்? | புராதன எகிப்தியரின் வரைபட எழுத்துமுறை. |
| 10. கொராட்? | வடகிழக்கு தாய்வான் தளம். |

# தகவல் பெட்டி

## குளிருது குளிருது



**துருக்கி** நாட்டில் கடும் பனி பொழிகிறது. இஸ்தான்புல் நகரில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. பனி படர்ந்த ஒரு படகில் அமர்ந்து கடல் பறவைகள் ஓய்வெடுக்கின்றன.

## சிற்பக் கூடம்

**சிற்பக்** கலைஞர்களுக்கு சரியான ஒரு அங்கீகாரம் கிடைத்தால், அவர்கள் பெரும் புகழின் உச்சத்திற்கு வரலாம் என்பதைப் புரிந்து கொண்டுள்ளது சீனா. சீனாவின் ஷாங்காய் நகரில் சமகால கலைகளுக்கான அருங்காட்சியகம் சமீபத்தில் திறக்கப்பட்டது. இதில் உள்ள கரடி சிற்பத்தை இருவர் பார்வையிடுகின்றனர்.




## புதிய அறிமுகம்




**எல்.ஜி.நிறுவனம்** சியோலில் அறிமுகப்படுத்தியுள்ள பிளாட் ஸ்கிரின் டி.வி. இது இதில் வீடியோ ரிக்கார்டர் இணைந்துள்ளது. இதன் மூலம் நிகழ்ச்சியைக் காணும் போதே பதிவு செய்யலாம்.

## காத்திருப்பு

**பிரான்ஸ்** தலைநகர் பாரீஸிலும் உள்ள ஆர்லி விமான நிலையத்தில் விமானப் போக்குவரத்து கட்டுப்பாட்டு அதிகாரிகள் நேற்று திடீர் ஸ்டிரைக் நடத்தினர். இதனால் எல்லா விமானங்களும் தாமதமாகச் சென்றன. விமான நிலையத்தில் புத்தகம் படித்து நேரத்தைச் கடத்துகிறார் ஒரு பெண்.



## வெள்ளை மாளிகையில் ஆட்டம்

**அமெரிக்காவின்** வெள்ளை மாளிகையில் உள்ள 'ஹார்லெம்' நடன அரங்கில் இசையுடன் கூடிய நடன நிகழ்ச்சி நடந்தது. இதில் ஒரு பெண்ணுடன் உற்சாகமாக நடனமாடுகிறார் அதிபர் ஜோர்ஜ் புஷ்.




சிம்பு - ஜோதிகா
சரவணா

## சோனியா - செல்வா டும்...டும்!

**அவ்வப்போது** சண்டை, மீண்டும் கைகோர்ப்பது, மீண்டும் பிரிவு என்று ஒரிஜினல் ஊடல்களுடன் போய்க் கொண்டிருக்கும் சோனியா - செல்வராகவனின் காதல் ஒரு வழியாய் கல்யாணத்தில் முடியப்போகிறது.

கடந்த ஆண்டு போட்ட திட்டத்தின்படி இந்த ஆண்டு ஜனவரியில் இருவரும் திருமணம் செய்திருக்க வேண்டும். ஆனால், செல்வராகவனின் 'புதுப்பேட்டை' படத்தில் நடித்தபோது ஸ்னேகாவுக்கு அதிக முக்கியத்துவம் தருவதாக உருவான சண்டை மிகவும் பெரிதாகிவிட்டது. (இதில் ஸ்னேகா, சோனியா இருவருக்குமே விலைமாது வேடம்)

இதையடுத்து சோனியா அகர்வால், செல்வராகவனுடன் பேச்சுவார்த்தையைக் கட் செய்துவிட, வீட்டில் வேறு பெண்ணைப் பார்க்கச் சொல்லும் அளவுக்குப் போய்விட்டார் செல்வராகவன்.

இதனால் சோனியாவும் செல்வராகவனை டென்சனாக்குவதற்காகப் புதிதாக படங்களை ஒப்புக்கொண்டதோடு, மகா கிளுகிளுப்பாகவும் நடிக்க ஆரம்பித்தார். (கல்யாணத்தைக் காரணம் காட்டி புதிய படங்களை ஏற்காமல் இருந்தார் சோனியா என்பது குறிப்பிடத்தக்கது.)




இப்போது 'திருட்டுப் பயலே' என்ற படத்தில் காக்க காக்க... வில்லன் ஜீவனுக்கு ஜோடியாக நடித்துக் கொண்டிருக்கிறார். அதில் மாளவிகாவும் இருப்பதால் போட்டியை வைத்துவிட்டார் இயக்குநர்.

மாளவிகாதான் சொன்னதைச் செய்பவராச்சே, கிளாமரில் இருவருக்கும் கிளு கிளு அவர் ரணகளம் செய்ய, செல்வராகவனுடனான காதல் முடிந்த வேதனையோ, சந்தோஷமோ.. சோனியாவும் சும்மா புகுந்து விளையாடி வந்தார். இதைக் கேள்விப்பட்ட செல்வராகவன் சோனியாவை போனில் கூப்பிட்டு காட்டுக் கத்துக் கத்தினாராம்.

அந்தச் சண்டையின் முடிவில் மீண்டும் இருவரின் அன்பும் வெளிப்பட்டுவிட, மீண்டும் நேரில் சந்தித்து, கண்ணீருடன் கட்டிப் பிடித்து ஊடலை வீசிவிட்டு ஒன்று சேர்ந்துவிட்டார்களாம். இப்படியே காலம் கடத்திக் கொண்டிருக்காமல் படக்கென திருமணம் செய்துகொள்ளவும் முடிவு செய்துவிட்டார்களாம்.

இதையடுத்து இயக்குநர் ஜீவாவின் படத்தில் நடிக்க இருந்த திட்டத்தை சோனியா கைவிட்டுவிட்டார். இந்தப் படத்தில் நடிக்க போட்டோ செஷனில் கூட சோனியா பங்கேற்று இருந்தார். இந் நிலையில் இப்போது சூட்டிங் தொடங்கவிருந்த நிலையில் ஜீவாவைக் கூப்பிட்டு, நான் செல்வராகவனை விரைவில் திருமணம் செய்யப் போகிறேன். இதனால் அந்தப் படத்தில் நடிக்க முடியாது. ஸாரி என்று சொல்லிவிட்டாராம் சோனியா.


திருமணத்துக்குப் பின் சோனியா நடிக்கப் போவதில்லையாம்.

# சினி விசிட்


நமீதா

## 'லெமன்' சாயா!

**'சொல்லி** அடிப்பேன்' எப்போது வெளிவரும் என்று தெரியாததால் களைத்துப் போயிருந்த சாயா சிங், இப்போது லெமன் படத்தில் விறுவிறுப்பாக நடித்து வருகிறார்.


நந்தா - தியா
கோடம்பாக்கம்

விட்ட இடத்தைப் பிடிப்பேன் என்று களமிறங்கியிருக்கும் இந்த மன்மத ராணிக்குப் போட்டியாக இந்தப் படத்தில் ஹரிப்பிரியாவும் இருக்கிறார். தன்னைப் புதுமுகம் என்று புருடா விட்டுக் கொண்டாலும், ஏற்கனவே தமிழில் சில படங்களில் தலைகாட்டியே சேச்சி தான் இந்த ஹரிப்பிரியா.

தமிழில் 'ஐஸ்' படத்தில் அறிமுகமாகி, ஜெயிக்காமல் போனவர் தான் ஹரிப்பிரியா. பொன்வண்ணனுடன் 'கோமதிநாயகம்' என்ற படத்தில் ஈரமாய் நடித்தும் தேறாமல் போனார். இப்போது 'லெமன் படத்திலும் ஏராளமாய் தாராளம் காட்டி நடித்து வருகிறார் ஹரிப்பிரியா.

திரைப்படக் கல்லூரி மாணவரான சாய்மோகன் என்பவர்தான் படத்தை இயக்கி, தயாரிக்கிறார். இதில் இஷாக் ஹுசைனிக்கு ஜோடியாக ஹரிப்பிரியாவும், புதுமுகமான சாய்கிரனுக்கு ஜோடியாக சாயா சிங்கும் நடிக்கின்றனர்.

வில்லனாக பாரதிராஜாவின் மகன் மனோஜ் நடிக்கிறார். ஹீரோ இப்போது வில்லனாகிவிட்டார்.

இதில், லா லா லா மன்மதனா என்ற பாடலுக்கு மன்மதராசா பாணியில் தமுக்காட்டம் போட்டுள்ளாராம் சாயா.

தமிழில் மலையாள நடிகைகளால் போட்டி ஏகமாகிவிட்டதாலும், ஹீரோயின்கள் அமோகமாகிவிட்டதாலும் மன்மத அழகி சாயா, தனது ரேட்டைக் கொஞ்சம் கொஞ்சமாய்க் குறைத்து இப்போது ரூ.2 முதல் ரூ. 3 லட்சத்தில்தான் இருக்கிறார். இவ்வளவு குறைத்தும் கூட கோலிவுட் தன்னைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளாததில் ரொம்பவும் வருத்தப்படுகிறார் சாயா.

இதனால் தமிழ் தவிர, தனது சொந்த ஊரான பெங்களூரில் கன்னடப் படங்களிலும் நடிக்க முயன்று வருகிறார்.

லெமன் படத்தைப் பொறுத்தவரை பாகிஸ்தான் தீவிரவாதத்தைப் பின்னணியாக வைத்து எடுக்கிறார்களாம். திருப்பதி, சிவகாசி படங்களை இயக்கிய பேரரசு தான் இந்தப் படத்துக்கு வசனம் எழுதியிருக்கிறார். கலைராணி, மங்கை, ஹேமா, லதா என இதர நடிகைகளும் உண்டு.


மதுமிதா

## பெருசுகளிடம் பயம் இல்லை! - அசின்

**மூத்த** நடிகர், இளைய நடிகர் என்றெல்லாம் நான் பாரபட்சம் பார்ப்பதில்லை. மூத்த நடிகர்களுடன் நடிக்கவும் நான் தயார்தான். ஆனால் படத்தின் கதை, எனது கேரக்டர் எனக்குப் பிடித்திருக்க வேண்டும் என்கிறார் அசின்.

தமிழ் சினிமாவில் இது இளசுகளின் காலம். ரஜினி, கமல் தவிர மற்ற பெருசு நடிகர்களுடன் நடிக்க இன்றைய ஹீரோயின்கள் ஆர்வம் காட்டுவதில்லை. மாறாகப் பீதியடைந்த ஓடி விடுகிறார்கள். திரிஷா முதல் நயன்தாரா வரை இதுதான் கதை.

ஏன் இப்படி பெருசுகளைப் பார்த்து ஓடுகிறீர்கள்? என்று அசினிடம் கேட்டபோது,

"அப்படியெல்லாம் கிடையாது. நல்ல கதையாகப் பார்த்துத்தான் நான் நடிக்கிறேன். என்னைப் பொறுத்தவரை இளைய நடிகர், மூத்த நடிகர் என்ற பாரபட்சம் எல்லாம் கிடையாது. பெரிய நடிகர்களுடன் நடிக்கவும் நான் தயார்தான். விக்ரம் கூட நான் நடிக்கவில்லையா? நல்ல கதையாக, எனக்குப் பொருத்தமான கேரக்டராக இருந்தால் ஓ.கே.தான்.

14 வயதிலிருந்தே நான் நடிக்க வந்து விட்டேன். ஆரம்பத்தில் விளம்பரங்கள், பின்னர் உள்ளம் கேட்குமே மூலம் தமிழ் சினிமாவில் என்ட்ரி. நான் நடித்த முதல் படம் என்றால் அது மலையாளத்தில் வெளியான நரேந்திரன் மகன்.

தமிழ் சினிமா எனக்கு ரொம்பப் பிடித்துள்ளது. இங்குள்ள ரசிகர்கள் ரசனையானவர்கள். நன்றாக நடித்தால் மனம் திறந்து பாராட்டுவார்கள், வெளிப்படையானவர்கள். அது எனக்கு ரொம்பப் பிடித்துள்ளது.

மஜா, கஜினி எனக்கு நல்ல பெயரைத் தேடிக் கொடுத்தன. இப்போது அஜீத்துடன் நடித்துள்ள ஆழ்வார்.பாதரும் பெயர் வாங்கித் தரும். நல்ல கேரக்டர் இந்தப் படத்தில்.

புதுமுகங்களால் எனக்கு எந்த மிரட்டலும் கிடையாது. அவர்களின் திறமைக்கேற்ப என்னை பட்டை தீட்டிக் கொள்வேன். போட்டிக்கேற்றவாறு நாம் தயாராகி விட்டால் யாராக இருந்தால் என்ன, "தூள் கிளப்பி விடலாம்" என்று படு போடு போடுகிறார் அசின்.

அசினிடம் ஒரு நல்ல பழக்கம் இருக்கிறது. தனது சம்பளத்தில் ஒரு பகுதியை ஆதரவற்றோருக்காக ஒதுக்கி விடுகிறாராம். நல்ல புள்ள தான்!


அஞ்சலி



ரவிகிருஷ்ணா - காம்னா
கேடி

## "ஜோ, நிஜமாலேவ ஸூப்பர்"

**எனது** நடிப்பை விட சந்திரமுகியாக ஜோதிகா மிக நன்றாகவே நடித்துள்ளார் என சந்திரமுகியின் மூலமான 'மணிச்சித்திரத்தாழ்' பட நாயகி ஷோபனா பாராட்டியுள்ளார்.

மலையாளத்தில் வெளியான மணிச்சித்திரத்தாழ் படத்தைத்தான் கேட்காமல் கொள்ளாமல், கன்னடத்தில் ஆப்தமித்ரா என்று எடுத்தார் பி.வாசு.

கன்னடத்தில் சௌந்தர்யா நடித்த அந்தப் படம் வெற்றி பெற்றாலும், கன்னட சினிமாவுக்கே உள்ள மிகச் சிறிய ரீச் காரணமாக பெரிதாகப் பேசப்படவில்லை.

ஆனால், அந்தப் படத்தைப் பார்த்த ரஜினி, வாசுவைத் தொடர்பு கொண்டு, அதை தன்னை வைத்து எடுக்குமாறு கூற, வெகுண்டு எழுந்தார் மணிச்சித்திரத்தாழ் கதையின் மலையாள எழுத்தாளர்.

இதையடுத்து அவரைக் கவனிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர் ரஜினியும் வாசுவும். ஒரு வழியாக படத்தின் கதையை வாங்கி, சிம்ரனை புக் செய்து அவர் கர்ப்பமாக இருக்கவே, அவரைத் தூக்கிவிட்டு ஜோதிகாவை ஹீரோயினாக்கினர்.

முழுக்க முழுக்க ஹீரோயின் சப்ஜெக்டான சந்திரமுகி ஜோதிகாவின் நடிப்புக்காகவே ஓடியது.

மணிச்சித்திரத்தாழ் படத்தில் ரஜினி வேடத்தில் மோகன்லாலும், பிரபு வேடத்தில் சுரேஷ் கோபியும், ஜோதிகா வேடத்தில் ஷோபனாவும் நடித்திருந்தனர்.

மலையாள ஒரிஜினலில் தமிழ்ப் பெண்ணின் ஆவி, ஷோபனாவின் உடலுக்குள் புகுந்து ஆட்டிப் படைப்பதாக கதையை அமைத்திருந்தனர்.



தமிழில் சந்திரமுகி என்ற தெலுங்குப் பெண்ணின் ஆவி, ஜோதிகாவின் உடலுக்குள் புகுவதாக மாற்றினர்.

சந்திரமுகியில் ரா ரா என்று தெலுங்குப் பாடல் இடம் பெற்றது போல, மணிச்சித்திரத்தாழில் தமிழ்ப் பாடல் இடம்பெற்றது.

இந்த மூன்று மொழிப் படங்களிலும் மணிச்சித்திரத்தாழ் சற்று விசேஷமானது. அதில் ஆவி புகுந்த பெண்ணாக நடித்த ஷோபனாவுக்கு தேசிய அளவில் சிறந்த நடிகை விருது கிடைத்தது.

இத்தனை காலத்திற்குப் பிறகு தான் நடித்த கேரக்டர் மீண்டும் சந்திரமுகி மூலம் பெரிய அளவில் பேசப் பட்டது ஷோபனாவுக்கு சந்தோஷத்தைக் கொடுத் துள்ளதாம்.




அர்ஜுன் - கஜாலா
மதராஸி

## அஜீத்தின் சவால்!

**தேவைப்பட்ட** நேரத்தில் ஆணித்தரமான வெற்றி கிடைத்துள்ளதால் 'பைக் பார்ட்டி' அஜீத் படு சந்தோஷமாகியுள்ளார்.

காதல் கோட்டை, வாலி ஆகியவை கொடுத்த மிகப் பெரிய வெற்றியால் உச்சத்திற்குப் போனார் அஜீத். அப்போது விஜய்க்கு நேரம் சரியில்லாமல் இருந்தது. தேறி வர அவர் தடுமாறிக் கொண்டிருந்த நிலையில் அஜீத் அட்டகாசம் செய்து வந்தார்.

அந்த நேரம் பார்த்து குஷி மூலம் மீண்டும் விஜய்க்கு பிரேக் கிடைத்தது. ஆனால் 'சிட்டிசன்' அஜீத்தை வாரி விட்டது.

சிட்டிசன் கொடுத்த அடியால் துவண்டு போன அஜீத், விடாப்பிடியாக, தனக்கு ஒத்துவராத படங்களைத் தொடர்ந்து செய்து படு பாதாளத்திற்குப் போய்விட்டார்.

மறுபக்கம் விஜய் விஸ்வரூபம் எடுத்து, ரஜினியின் அடுத்த வாரிசு என்ற அந்தஸ்துக்குப் போய் விட்டார். ஆனால் அஜீத்தால் எழுந்திருக்கவே முடியாமல் போய்விட்டது.

அவர் சுதாகரிப்பதற்குள் விக்ரம், சூர்யா என ஏகப்பட்ட பேர் வரிந்து கட்டிக் கொண்டு வளர்ந்து விட்டனர். இது போதாதென்று, விஜய் வேறு தனது படங்களில் எல்லாம் அஜீத்தை நேரடியாகவும், மறைமுகமாகவும் குத்திக் குடைந்து வசனம் வைத்ததால், சோர்ந்து போனார் அஜீத்.




ஜீவன் - சோனியா அகர்வால்
திருட்டுப் பயலே

கடுப்பாகிப் போய், மோட்டார் பந்தயங்களில் கலந்து கொள்ள ஆரம்பித்தார்.

இப்படியே போய்க் கொண்டிருந்தால் விட்ட இடத்தைப் பிடிக்க முடியாது. மீண்டும் தீவிரமாகக் கவனம் செலுத்துங்கள், பேச்சைக் குறையுங்கள், உங்களை விட உங்களது படங்கள்தான் அதிகம் பேச வேண்டும் என்று மனைவி உள்ளிட்ட நெருக்கமானவர்கள் கொடுத்த அட்வைஸால் மீண்டும் கோலிவுட்டில் தீவிர கவனம் செலுத்தினார் அஜீத்.

முன்பை விடப் பக்குவப்பட்ட மனதுடன், ஸ்லிம் ஆன உடம்புடன், உத்வேகத்துடன் மீண்டும் நடிக்க ஆரம்பித்துள்ளார் அஜீத். பரமசிவன், அஜீத்துக்குப் பெரிய பிரேக்கைக் கொடுத்துள்ளது.

அவ்வளவுதான் எனக் கணிக்கப்பட்ட அவதாரம் அப் ஆகி என்று அஜீத் மீண்டும் புது எடுத்துள்ளார்.

ஆரம்பத்தில் சுமாராகவே போன பரமசிவன், பின்னர் பிக்-பொங்கலுக்கு வெளியான படங்களிலேயே பரமசிவன்தான் பெரிய வெற்றி இண்டஸ்ட்ரியில் சந்தோஷமாகக் கூறுகிறார்கள்.

அதேசமயம், யாரும் எதிர்பாராத வகையில் ஆதிக்கு பெரிய அடி கிடைத்துள்ளது. பரமசிவன் வெற்றியால் சந்தோஷமடைந்துள்ள அஜீத், அதுகுறித்து வெளிப்படையாக எதையும் கூற மறுத்து வருகிறார். மீறிக் கேட்டால், 'இனி மேல் நான் பேசமாட்டேன், எனது படங்கள் தான் பேசும்' என்று டயலாக் விடுகிறார். இப்போது அஜீத் கைவசம் நிறையப் படங்கள். ஏவி.எம்.மின் திருப்பதி, கே.எஸ். ரவிக்குமாரின் காட்'.பாதர், பாலாவின் நான் கடவுள் என ஆள் இப்போ படு பிசி.

இத்தோடு மேலும் ஒரு படத்திலும் புக் ஆகியுள்ளார். 'அறிந்தும் அறியாமலும்' பட இயக்குநர் விஷ்ணுவர்த்தன் இயக்கப்போகும் அப் படத்திற்கு 'சவால்' என்று பெயர் வைத்துள்ளனர்.

இந்த சவால் விஜய்க்கா என்பது தெரியவில்லை (இருவரும் கொஞ்ச காலம் முன் சமாதானமாகி விட்டது நினைவுறத் தக்கது).

## சீதா, மீரா, டி.வி.

**ஓரிரண்டு** படங்களில் நடித்தும், எடுபடாமல் வெறுத்துப் போய் கல்யாணம் செய்து கொண்டு செட்டிலாகி விட்ட முன்னாள் மாடலான மீரா வாசுதேவன் மீண்டும் நடிக்க வந்துள்ளார். ஆனால் சினிமாவில் அல்ல. டி.வி.யில்.

விளம்பரங்களில் வந்து போய்க் கொண்டிருந்த மீரா வாசுதேவனை எஸ்.பி.பாலசுப்பிரமணியத்தின் மகன் சரண், தான் சொந்தமாகத் தயாரித்த 'உன்னைச் சரணடைந்தேன்' படத்தின் மூலம் சினிமாவுக்கு இழுத்து வந்தார். படம் ஓரளவு பேசப்பட்டது. மீராவும் கவனிக்கப்பட்டார்.

ஆனால் முரளி போன்றவர்களுடன் நடிக்கவே வாய்ப்பு வந்தது. அவையும் கூட கிளாமர் காட்டும் ரோல்கள். வருவது வரட்டும் என்று துணிந்து கிளாமருக்கு பச்சைக் கொடி காட்டினார் மீரா.

அறிவுமணி படத்தில் கவர்ச்சியில் எல்லையைக் கூடத் தாண்டினார். கூட நடித்த முரளியே வியர்த்துப் போகும் அளவுக்கு விளையாடியிருந்தார். என்ன புண்ணியம்? படம் படுத்துக் கொண்டது. மீராவும் வெறுத்துப் போனார்.

இந்நிலையில், கேமராமேன் அசோக்குமாரின் மகன் விஷாலுக்கும், மீராவுக்கும் காதல் வைரஸ் தாக்கியது. காதல் ஜுரத்தின் வேகம் தாங்காமல் இருவரும் சீக்கிரத்திலேயே கல்யாணம் செய்து கொள்ளும் முடிவுக்கு வந்தனர்.

இரு வீட்டாரும் சேர்ந்து பேசி திருமணம் நடந்தது. திருமணம் செய்து கொண்டாலும் கூட தான் ஒப்புக் கொண்ட சில படங்களைத் தட்டாமல் முடித்துத் தந்தார் மீரா. அதில் குறிப்பிடத்தக்க படம் ஜெர்ரி. விசேஷம் என்னவென்றால் இப்படத்தில் மீரா படு கிளாமராக நடித்துள்ளதுதான்.

தொடர்ந்து நடிக்கும் ஆசை மீராவிடம் இருந்தும் சரியான படங்கள் கிடைக்கவில்லை. இதனால் டி.வி.பக்கம் போக முடிவெடுத்துவிட்டார் மீரா. பெரிய திரை கைவிட்ட நடிகைகளுக்கெல்லாம் இப்போது சின்னத்திரைதான் சொர்க்கம்.

நளினி, சீதா, தேவயாணி, ராதிகா, கௌசல்யா, குஷ்பு என ஏகப்பட்ட நடிகைகள் சின்னத்திரையில் கலக்கிக் கொண்டிருக்கிறார்கள். அந்த வரிசையில் மீராவும் சேர்ந்து விட்டார்.

மீராவும், சீதாவும் சேர்ந்து நடித்துள்ள ஒரு மெகா தொடர் விரைவில் சன் டி.வியில் வரவிருக்கிறது. 'பெண்' என்று பெயரிடப்பட்டுள்ள இத்தொடரில், சீதாவின் நிறுவனத்தில் வேலை பார்ப்பவராக நடிக்கிறாராம் மீரா வாசுதேவன்.

சித்தி, அண்ணாமலை, மனைவி எனப் பிரபலமான தொடர்களை இயக்கிய சி.ஜே.பாஸ்கர் இத்தொடரை இயக்கவுள்ளார். திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை தினசரி இரவு 10.00 மணிக்கு இத்தொடர் ஒளிபரப்பாகிறதாம்.

மீரா, சீதாவைப் பார்த்து அழத் தயாராகுங்கள்...




ஸ்ரீகாந்த் - மீரா ஜாஸ்மின்
மெர்குரி பூக்கள்




# அழகான அவஸ்தைகள்

செத்துவிடலாம்போல
தோன்றும் - உன்
கண்ணக் குழி
காணும்போது....

உன்னைப்போலவே
உன் நினைவுக்கும்
கொழுப்பதிகம் - என்
இதயம் இரத்த
அழுத்தத்தால்
அவதிப்படுகிறது.

நீ நல்ல
நாட்டியக்காரி
உன்
பாவங்களிலெல்லாம்
என் மீதான
வெறுப்பைத்தான்
வெளிப்படுத்துகிறாய்

நீ மெதுவாக
புன்னகை - உன்
இதழ் பிரிந்தாலும்
எனக்கு வலிக்கும்...

– சிஹ்னாஸ் தௌபீக்,
ஹுஸைனியாபுரம்.

## உனக்குப் பிடித்த கவிதை....!

காலங்கள்
கடத்தப்பட்டு
ஏக்கங்கள்
நரைத்துவிட
தென்றலின் சினேகத்துடன்
என்
தெருவோரத்து பயணம்...!



சுடிதார் நிலவே
உயிர் பிதுங்கும்
சதையெல்லாம்
காயங்கள்...!

கொஞ்ச நாட்களாய்
பரினின் நரம்புக்குள்
என்
சுவாசச் சுற்றோட்டம்...!

நீ - என்
ஆறாவது புலன்,
எட்டாவது அதிசயம்,
என் உடலுக்குள்
இன்னொரு உயிர்...!



உன்
ஒற்றைப் பார்வை
வீசி விடு
இன்றைய
மரணத்திலிருந்து நான்
தப்பித்துக் கொள்ள....!

–புத்தளம் நஸீம்ரூமி.

## முதல் முத்தம்!

என்னைத் தழுவுவதற்கு
இந்த மேகம்
இறங்கி வருமென்று
நான்
எதிர்பார்க்கவே இல்லை!

ஒற்றை நட்சத்திரமாய்
ஒவ்வொரு நாளும்
கண் சிமிட்டிய
அந்தக் காதல் கிளி
என் கையில்
அமருமென்று
நான்
கனவு கூடக்
கண்டதில்லை!

இது வரையில்
ஜன்னலுக்குள்
மட்டுமே
ஜாடை காட்டிய
அந்தப் பெண் நிலா
என் பின்னால்
வருமென்று
நான் பேச்சில் கூடச்
சொன்னதில்லை!

இன்று மட்டும்
இந்த
வண்ணக்கிளிக்கு
என்ன வந்து விட்டது...?

எதற்காக
இந்தப்
பனிக்குயில்
என் கவிக் கடலில்
குளிக்க வேண்டும்...?

ஓ...!
புரிந்து விட்டது
முதல் முத்தம்
பெருகின்ற
மோகத்தில்தான்
அந்த
மூங்கில் மேனி
என் முகத்தருகே
வந்ததோ.....!

அடடா...!
எத்தனை காலம்
இதற்காகத் தவம்
கிடந்தேன்...?
இப்போதுதான்
நான்
மனம் குளிர்ந்தேன்!

–ஜாபீர் முகம்மட்,
அட்டாளைச்சேனை.

# சத்தியன் சத்தியம்....!

காதல்
பள்ளத்தாக்கில்
விழுந்துவிட்ட என்னில்
உன் நினைவுகள்
மண் வெட்டியோடு
வலை விரித்து அழைகிறது

அமர நினைக்கும்
இடங்களில்
அங்குலக் குழிகள்...
உன்
கன்னக் குழிகளைவிட
ஒன்றும் ஆழமில்லை....

உன்
இச்சைப்பாத்திரத்தில்
மொய்க்கும்
இளையான்களுக்கு
அசைவம் அவசியமெனில்...

ஆடை அழுகி
ஒழுகும்
நிர்வாண சீழ்களில்
மொய்க்கும்
பார்வை இளையான்களை
விரட்டி...
முதலில், காயத்திற்கு
ஆடை கட்டு....

சம்பிரதாயங்களின்
வியர்வை கசிய கசிய...
மேடையேறி
முழங்குவோம்
நீயும், நானும்...
கெட்டிமேளம் கெட்டிமேளம்...!

–பெரியசாமி விக்னேஸ்வரன், ஹட்டன்.

## இது நியாயமல்ல!

மீண்டும் அந்த ஞாபக
வருடல்கள்
என் இதயச் சுவர்களைத்
தொட்டுச் சென்றதால்
நிதானம் இழந்து நானும்
நிஜங்களைப்
புரட்டுகிறேன்.

எங்கோ ஒரு மூலையில்
நான்
சிக்கிக் கிடக்கும்போது
மீண்டும் அந்த ஞாபகங்கள்
என்னைத் தூண்ட நினைப்பது
நியாயமல்ல!

–எஸ்.சரோஜினி,
கோட்டைக்கல்லாறு.

# புன்னகை செய்!

உண்மையின்
சந்நிதி
பெண்மையின்
சங்கதி!

பூவிழிகளில்
பூரண நட்சத்திரம்
புதுவிழிகளில்
பூநாகமா...?

பேதமை
போதுமே!
சாதனை
சாந்தமே!

வேதனை
விண்மதி....
வெறுப்பிலே
மறைந்தது
போதுமே
பகைத்தது
புன்னகை செய்திடு!

–நா.ஜெயபாலன், பிபிலை.

## என்னைப் பிடித்திருந்தும்...

வாவென்று கூவியழைத்த
வசந்த காலங்கள்...
வாழ்ந்துதான்
பார்ப்போமே என்ற
வைராக்கியங்கள்...
என்னிதயத்திற்கும் ஒரு
சொந்தம் வந்தபோது
கண்ணெதிரில் காட்சி
தந்த சொர்க்கங்கள்...

இவையெல்லாம்
தோற்கடிக்கப்பட்டு
தொலைந்து போனதால்
எழுத்துக்களையிழந்த
காகிதமாக

ரகசிய
ரணங்கள்
ரம்மியமாய்
ரீங்காரம் செய்தது...
ரதியின் மனதில்.

ஈரத் துளிகள்
பார நெஞ்சிலிருந்து
பனித்துளி போல்
படர்ந்தது
பாவையின்
கண்ணில்...

செந்தமிழ்
வார்த்தையொன்று
செவ்விய தாடைகளுக்குள்
சிக்குண்டு
சிதறுண்டு
நாவினால் தள்ளப்பட்டது
நடுக்கத்துடன்
உன்னை எனக்குப்
பிடிக்கவில்லையென...

–எம்.ரி.எம்.சிதாஸ், காத்தான்குடி.

## கொடூரம்

மீன் -
முட்களை
ஒடித்தப் பிறகும்,

கழுத்தைத்
துண்டாக
அறுத்தப் பிறகும்,

கண்டம்
துண்டமாய்
வெட்டியப் பிறகும்

வானலியில் -
வாசனையாகவே
இருந்தது!!

–வித்யாசாகர்,
சென்னை – 51.

## காதல் ஹைக்கூ

பருவகால
பைத்தியம்
பிடித்துவிட்டது
காதல்!

எச்சில் பறக்க
இச்சை தீர
அவள் பெயரையே
உச்சரிக்கிறேன்!

அவளின்
'ஐ லவ் யூ'வுக்காக
ஒரு தெரு
நாயாகவே
தினமும்
திரிகிறேன்...!

அதனால்
அவள் வீட்டுத்
தெருவை
அளக்கின்ற
ஒரு நில
அளவையாளராக
இன்று நான்....

சாப்பிட வாமனே
என்று
செல்லமாக
அம்மா வந்து
சொல்லும்
போதும்
சீறிப்
பாய்கிறேன்!

சிவராத்திரிகளாய்
இரவுகளை ஆக்கி
விட்டு
அவளின்
நினைவலைகளில்
நீந்தி வருகிறேன்!

தலைமுடியும்
தாடியும்
காடாகக் காட்சி
தர
பைத்தியனாகவே,
பாதையில்
அலைகிறேன்!

ஆம்...
பருவகால
பைத்தியம்
பிடித்து விட்டது...
காதல்!

–வில்லுரான்.

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் — கவிஞரும்

உலக வலம் வரும் இணையங்களை எம்நாட்டு மற்றும் புலம் பெயர்ந்து வாழும் எம்மவர்கள் தமது உள்ளத்திலிருக்கும் உள்ளக் கிடக்கைகளை வெளிப்படுத்துவதற்கான ஊடகமாகப் பயன்படுத்துகிறார்கள் அந்த வகையில் இங்குள்ளவையும் தமது தாயக உறவுகளையும் தாங்கள் பட்ட துன்பங்களையும் மறக்கமுடியாமல் பல இளம் கவிஞர்கள் தங்கள் பங்கிற்கு வடித்த கவிதைகளின் சில துளிகள் இவ்வாரம் சிறப்புக் கவிதைகளுக்காக:

முரசின் கவிதை பயிற்சிக்களம் பகுதியில் புதிய கவிஞர்களின் வெளியீடுகளை அறிமுகப்படுத்த முரசு களம் அமைத்துக் கொடுக்கின்றது. தமது கவிதை வெளியீடுகளை அல்லது வெளியிடப்படவிருப்பவற்றை வெளிக் கொண்டுவர விரும்புவோர் முரசுடன் தொடர்பு கொள்ளலாம்.

### எனக்கொன்றும் பிடிக்கவில்லை

எனக்கொன்றும் பிடிக்கவில்லை
ஆமாம் ஆமாம் எனக்கொன்றும்
பிடிக்கவில்லை

தொட்டதெலாம் தட்டிவிடும்
அறிவின் இந்தத்
தொல்லையொன்றும்
பிடிக்கவில்லை

தடுப்பதெல்லாம் தப்புமில்லை
அறிவு நிதம் சொல்பவற்றுள்
உப்புமில்லை

எனக்கொன்றும் பிடிக்கவில்லை
ஐயகோ இது எனக்கொன்றும்
பிடிக்கவில்லை.

அறிவுமனம் மயங்கிடாமல்
ஈர நாவில் காவியங்கள்
விளைவதுண்டோ
படிப்பறிவை மறந்திடாமல்
புதுமை பொங்கும் ஊற்றுகளும்
எழுவதுண்டோ.

பட்டறிவை உணர்வென்போம்
அதனுள் உண்மை மட்டும்தான்
பிறக்கிறது
குட்டிவைக்கும் பிள்ளைகளின்
புத்தி நாளும் கோணலாகிச்
சிறுக்கிறது

அறிவு வெயில் கொளுத்தாத
சொந்த நிமிடம் ஐந்தெனக்குக்
கிடைத்தாலும்
வாழ்வென்னும் இயற்கைக்குள்
கவலை தாண்டி பொய்யற்று
வாழ்ந்திருப்பேன்

யாராரோ வீழ்ந்த காயம்
கூட்டி வைத்து எனக்குள்ளே
திணிக்கும் இந்த
அறிவு எனக்குப் பிடிக்கவில்லை
அடிமை போல மண்டியிட விருப்பமில்லை

வேண்டாத சிந்தனையால்
வாழ்வில் எல்லாம் தவறென்றே
கூத்தாட
பிறந்தபோது எழுந்து நின்ற
இதயம் இன்று புண்ணாவது
பிடிக்கவில்லை

தினந்தோறும் நெய்யூற்றி
பாழும் இந்த மூளைமரம்
வளர்த்துவிட்ட
மனம்செத்த அறிஞர்களே
நாளும் உம்மை மனதார
சபிக்கின்றேன்.

–கவிஞர் புகாரி.

### ஒரு பாசத்தின் பாடல்

அவன்
ஏமாற்றப்படும்
பொழுதுகளில்
விம்மி அழுதுவிடுகிறான்
காத்திருப்புக்களுக்கு
தோல்வி காணும்
குணங்களில்
நிலை மாறியிருக்கிறான்
அவனுடைய
சுருதி கலைந்த சங்கீதங்கள்
இனிமையை தந்தனவல்ல
இருந்தும்
பாடிக்கொண்டிருக்கிறான்
தனது தனிமைக்காக
அவனுள் ஊடுருவியகத்திகள்
கூர்மையாகின
சுவாசங்கள்
இன்னும்
பிடுங்கப்படவில்லை
மரணித்தும் போகலாம்
அவன் பாடிக்கொண்டே
இருந்தான்
சமூகத் திரையை கிழித்து
அப்போது தான்
எட்டிப்பார்த்தார்கள்
அவன் குற்றுயிராய்....
இல்லை
இறுதி மூச்சாய்
அந்திச் சூரியனாய்
உறங்கிப்போகிறான்
. எனினும்
பாடிக்கொண்டுதான் இருந்தான்
ஒரு பாசத்தின் பாடலை
தன் தேசத்தின் பாடலை.

–சாம்.

### சூரியனின் சித்திரம்


ஒவ்வொரு பூவிடமும்
இருக்கிறது சூரியன்
குறித்த சித்திரம்.

பூக்களைத்தமக்குள்
பதுக்கிக்கிடக்கும்
மொட்டுக்களின்
முதுகுகளில்
எழுதப்படுகிறது
சூரியனின் தோல்வி.

பூக்களின் முகங்களில்
ஒட்டிக்கிடக்கிறது
சூரியனின் புன்னகை.

ஆனாலும்
இரவில்
நிலவுக்குப்பயந்து
அவற்றை
உதிர்த்துக்கொண்டு
தம்மை உரிக்கின்றன
மரங்கள்.


–த.அகிலன்




சோவியத் ரஷ்யாவிடமே மிகப்பெரிய உலங்கு வானூர்தி உள்ளது. 40 மீற்றர் (131 அடி) நீளமுள்ள இந்த ஹெலிகொப்டர் 28.2 தொன் எடையுள்ளது. ஒரே தடவையில் 56 தொன் எடையுள்ள பொருட்களை ஏற்றிச் செல்லக்கூடிய வலிமை இவ்வுலங்கு வானூர்த்திக்கு உண்டு. எட்டு செட்டைகளைக் கொண்ட காற்றாடிகளில் ஒவ்வொரு செட்டையின் நீளமும் 32 மீற்றர் (105 அடி) என்பது குறிப்பிடத்தக்கது.

**உலகில் மிகப்பெரிய ஹெலிகொப்டர்**

**உலகின் மிகப் பெரிய விமானந் தாங்கிக் கப்பல்**




**அமெரிக்க** கடற்படையினரிடமே உலகின் மிகப்பெரிய விமானத்தாங்கிக் கப்பல் உள்ளது. யூ.எஸ்.எஸ். நிமிட்ஸ் எனப் பெயரிடப்பட்ட மேற்படி கப்பலானது 332.9 மீற்றர் (1,092அடி) நீளமும் 98,550 தொன் எடையும் கொண்டது. இக்கப்பலின் மேற்பரப்பு 4.49 ஏக்கர் இடவசதி கொண்டதாகும். அதாவது குட்டித் தீவு ஒன்று கடலில் மிதந்து செல்வது போலிருக்கும்.

**- உலகில் அதிபாரமான குண்டு வீச்சு விமானம்.**



சோவியத் ரஷ்யாவிடமே அதிக எடையுள்ள குண்டு வீச்சு விமானம் உள்ளது. 110 தொன் எடையுள்ள இவ்விமானம் 275 தொன் எடையுள்ள குண்டுகளைச் சுமந்து கொண்டு சென்று வீசக்கூடியது. TU - 160 ரகத்தைச் சேர்ந்த மேற்படி குண்டு வீச்சு விமானத்திற்கு பிளக்ஜக் என பெயர் சூட்டியுள்ளனர் ரஷ்ய இராணுவ உயரதிகாரிகள்.


# உடல் எடையைக் குறையுங்கள்!

**உடல்** எடையைக் குறைப்பது என்பது அவ்வளவு எளிதான காரியமல்ல.

அதிக புரோட்டீன் சத்து கொண்ட அதே நேரத்தில் குறைவான கொழுப்புச் சத்து கொண்ட உணவினை உட்கொண்டாலே போதும் உடல் எடை குறையும். ஆனால் அவற்றைக் கடைபிடிப்பது தான் கடினமான ஒன்றாகும்.

உடலில் இருந்து அதிக கலோரி சக்தி வெளிப்படக்கூடிய வகையில் உடற்பயிற்சி செய்யலாம். அல்லது மொத்த உணவில் உள்ள கலோரியின் அளவைக் குறைக்கலாம். இவை எல்லாமே சொல்வதற்கு மட்டும் தான் எளிது.

ஒருபுறம் டயட்டில் இருக்கிறேன் என்று



கூறிக் கொண்டு கொழுப்பு நிறைந்த உணவுகளை சாப்பிடும் பட்சத்தில் உடல் குண்டுக்கு மேல் குண்டாக அதிகரித்துக் கொண்டே போகும். அமெரிக்காவில் சுமார் 64 சதவீதம் பேர் அதிக எடை கொண்டவர்களாக இருக்கிறார்கள். இவர்களில் 23 சதவீதம் பேர் மிகமிக குண்டான தோற்றம் (Obesity) கொண்டவர்கள் என ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது.

ஆனால் நடைமுறைக்கேற்றவாறு அன்றாடம் உணவுமுறை மற்றும் உடற்பயிற்சியைக் கடைப்பிடித்தால், பாதுகாப்பான முறையிலும், நிரந்தரமாகவும் உடல் எடையைக் குறைக்க முடியும்.

அதற்கான சில டிப்ஸ். படித்து விட்டு பயனுள்ள தகவல் என்று மட்டும் கூறாமல், பயன்படுத்திப் பலன் அடையுங்கள்.

பொதுவாக உடலில் நமக்குத் தேவையான அளவு கலோரியை விட அதிக அளவில் கொழுப்பு சேர்ந்தாலே உடல் குண்டாகத் தோற்றம் அளிக்கிறது. தேவைக்கு அதிகமான கொழுப்பு உடலில் தேங்கியிருப்பதைக் கரைத்தலே எடை குறைப்பாகும்.

இதற்கு நீங்கள் சாப்பிடும் அளவு கலோரி சக்தியை விட உடலில் அதிக கலோரிகள் எரிந்து செயலாற்றச் செய்தல் வேண்டும். சாப்பிடும் அளவைக் காட்டிலும் அதிக அளவு சக்தியை உடல் பயன்படுத்திக் கொள்ளுமானால், உடலில் ஏற்கனவே சேர்ந்திருக்கும் கொழுப்பைக் கரைக்க ஏதுவாகும். குறைவாக சாப்பிடும்போது, உடலுக்குத் தேவையான சக்தியானது கொழுப்பின் மூலம் எரிந்து எடுத்துக் கொள்ளப்படுகிறது. அதே நேரத்தில் நீங்கள் எந்த வகை உணவைச் சாப்பிடுகிறீர்கள் என்பது மிக முக்கியம்.

சாப்பிடும் உணவானது உடல் எடை குறைப்புத் திட்டத்திற்கு மையமாக அமைய வேண்டியது அவசியம். எடுத்துக் கொள்ளும் உணவு வகைகளினால் புற்றுநோய் போன்ற நோய்களில் இருந்து வாழ்நாள் முழுவதும் உங்களைப் பாதுகாக்க வேண்டியதும் அவசியம்.

மாமிசத்தில் அதிக அளவிலான கொழுப்பு உள்ளது. அதேவேளை பழ வகைகளில் குறைந்தளவு கொழுப்பு உள்ளது. என்றாலும் குறுகிய கால உடல் எடை குறைப்புக்கு பழங்களை உணவாக எடுத்துக் கொள்ளலாம்.

அதிக அளவில் மாமிசங்களைச் சாப்பிடுவதால் பல்வேறு வகையான நோய்கள் ஏற்படுகின்றன. அதே நேரத்தில் அதிக பழங்களைச் சாப்பிடுவதால் புற்றுநோயிலிருந்து தப்பிக்கிறீர்கள்.

பழங்கள், காய்கறிகள், முழுவதும் தானியங்களிலான உணவுகள், குறைவான கொழுப்பு கொண்ட பால் உற்பத்திப் பொருட்கள் மற்றும் புரோட்டீன் உணவுகளே ஆரோக்கியமான வாழ்க்கைக்கு உகந்தவை. எடையைக் குறைக்கும் தன்மை கொண்டவை. சில வகை உணவுகள் உங்களின் சக்தி தேவைக்கேற்ப இருப்பதுடன் உடனடியாக அதிக கொழுப்பைத் தருபவையாக அமைந்துவிடலாம்.

கேக், கொழுப்பு நிறைந்த மாமிசம், பால், கிரீம், சோஸ் போன்றவற்றை அதிகமாக சேர்த்தல் உடல் எடையை அதிகரிக்கச் செய்யும்.


உடல் எடையைக் குறைப்பதற்காக சிலர் தடாலடியாக உணவினை குறைத்துக் கொண்டு, மெலிந்து பலவீனமான பின் மீண்டும் ஏற்கனவே இழந்ததற்கு மிச்சமாக அதிக அளவிலான உணவை எடுத்துக் கொள்வார்கள். இது தவறான அணுகுமுறை.

உடற்கூற்று நிபுணர்கள் கருத்தின் படி, உடல் எடையைக் குறைக்க விரும்புவோர் படிப்படியாக எடையைக் குறைக்க முன்வர வேண்டும். பொதுவாக வாரம் ஒன்றுக்கு 450 கிராம் அளவிற்கு எடை குறைய வேண்டும். அப்போதுதான் உடலில் பாதிப்பு ஏற்படாது.

நாளொன்றுக்கு உங்களின் உணவு முறையில் சுமார் 500 கலோரி அளவுக்குக் குறைவாகச் சாப்பிடுங்கள். இதன்மூலம் உடம்பில் ஏற்கனவே சேர்ந்திருக்கும் கொழுப்பில் இருந்து தேவையான கலோரிகள் அன்றாட சக்திக்காக எடுத்துக் கொள்ளப்படும். அல்லது 250 கலோரி குறைவாக சாப்பிடுவீர்களேயானால், 250 கலோரி அளவிற்கு உடற்பயிற்சி செய்தும் குறைக்க முடியும்.

குறைவான கலோரி சாப்பிடுவதுடன் உடற்பயிற்சியும் செய்வதால் குறையும் உடல் எடை நீடித்து நிரந்தரமாக இருக்கும். பாதிப்பும் ஏற்படாது என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

காலை உணவை கண்டிப்பாகச் சாப்பிடுங்கள். வெறும் வயிற்றில் இருந்தால் மதிய உணவின் போது அதிகம் சாப்பிடத் தூண்டும். அதே போல மதிய உணவைத் தவிர்க்காதீர்கள். குறிப்பிட்ட நேரத்தில் குறைந்த அளவாவது



சாப்பிடுதல் வேண்டும். சாப்பிடாமல் இருந்தால் உடல் எடை குறைந்து விடும் என்று நினைப்பது அறியாமை.

உணவில் குறைவான கொழுப்புச் சத்துக்கள் உள்ளனவா என்பதை அறிந்து அவற்றை எடுத்துக் கொள்ளுங்கள். திட உணவின் அளவைக் குறையுங்கள். அதிக அளவில் திரவ உணவுகளை உட்கொள்ளுங்கள். குறிப்பாக தண்ணீர் அதிக அளவில் குடியுங்கள்.

உங்களுக்குப் பிடித்தமான உணவு வீட்டில் சமைத்திருந்தாலும் தேவைக்கு அதிகமாக சாப்பிட முடியவில்லையே என்று ஏமாற்றம் அடையாதீர்கள். உங்களின் உடல் எடை குறைகிறதா என்பதைக் குறிப்பிட்ட இடைவெளியில் பார்த்து தெரிந்து கொள்ளுங்கள்.

சாப்பிடாமல் இருந்து உடல் எடையைக் குறைக்கலாம் என்று கருதுவீர்களானால், அது உடல் பலவீனத்தையும், நோயையும் கொண்டு வந்து சேர்க்கும்.

சிரத்தை எடுத்துக்கொள்ளுங்கள். ஸ்லிம் ஆகுங்கள்!




# லேடிஸ் ஸ்பெஷல்

## அலுவலகம் செல்லும் பெண்களுக்காக..!

**அடுப்பூதும்** பெண்களுக்குப் படிப்பெதற்கு? என்ற நிலை இன்றைய சூழலில் இல்லை என்றே சொல்லலாம். ஒருகாலத்தில் பெண் குழந்தைகள் என்றால், அவர்களுக்கு படிப்பு தேவையில்லை. இன்னொரு வீட்டிற்கு செல்பவள்தானே, படித்து என்ன செய்யப்போகிறாள்? என வீட்டில் உள்ள பெரியவர்கள் அங்கலாய்க்கும் பிரச்சினையெல்லாம் இப்போது கிடையாது. நகர்ப் பகுதிகளிலும், கிராமப் பகுதிகளிலும் கூட குறைந்தபட்சம் மேல்நிலைக் கல்வி வரையாவது பயிலும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவது வரவேற்கத் தக்கதே.

ஆண்களுக்கு நிகராக உயர் கல்வியிலும் சரி மருத்துவம், பொறியியல், கணனி மென்பொருள் போன்ற தொழிற்கல்வியானாலும் சரி, பெண்கள் ஆண்களை விஞ்சி நிற்கிறார்கள் என்றே சொல்ல வேண்டும்.

பெண்கள் அலுவலகங்களில் தங்களுக்கு ஏற்படும் வேலைச் சுமைகளை சமாளிப்பது



எப்படி? அல்லது தாங்கள் எதிர்கொள்ளும் கடினமான சவால்களை எதிர்கொண்டு வெற்றி பெறுவது எப்படி?

காலையில் வீட்டிலிருந்து புறப்படும் முன், 10 நிமிடநேரமாவது அமைதியாக தியானம் மேற்கொள்ளுங்கள். அது கடவுள் வழிபாடாகவோ, பூஜையாகவோ அல்லது எழுந்தவுடன் மேற்கொள்ளும் செயலாகவோ இருக்கலாம்.

உங்கள் அலுவலகம் அமைந்திருக்கும் இடத்திற்கு உங்கள் வீட்டிலிருந்து செல்ல எவ்வளவு நேரம் பிடிக்கும்? நீங்கள் நகரப் பேருந்தில் செல்கிறீர்களா? அல்லது இரு சக்கர வாகனமா - அல்லது காரில் செல்கிறீர்களா? என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள். கார் என்றால் நீங்களே ஓட்டிச்செல்வீர்களா? அல்லது ஓட்டுநர் வந்து அழைத்துச் செல்வாரா? கணவர் உங்களை டிராப் செய்து விட்டுச் செல்வாரா என்பன போன்றவற்றையும் முன்கூட்டியே தீர்மானமாக வைத்திருங்கள்.

குறிப்பிட்ட சில நாட்களில் முன்கூட்டியே அலுவலகம் செல்ல வேண்டுமென்றால், அதற்கு ஏற்ற வகையில் முன்கூட்டிப் புறப்படுங்கள். வழக்கமாக புறப்படும் நேரத்திற்கு புறப்பட்டு வேகமாக வாகனங்களை ஓட்டிச் செல்லுதல் ஆபத்தில் முடியும்.

அலுவலகத்திற்குப் புறப்படத் தயாராகும் காலை நேரத்தில் உங்கள் கணவர், குழந்தைகளுக்கு நீங்கள் செய்ய வேண்டிய ஒருசில கடமைகளைச் செய்யத் தவறாதீர்கள்.



குழந்தை களை நீங்கள் பள்ளிக்குக் கொண்டு சென்று விட வேண்டும் எனில் அதற்கேற்றாற்போல் உங்களின் நேரத்தை மாற்றியமைத்துக் கொள்ளுங்கள்.

கூடியவரை அலுவலகத்திற்குச் செல்லும் நேரத்தில் ஓரளவு நேரந்தவறாமையைக் கடைபிடியுங்கள். அதுவே பாதி வேலையை முடித்த திருப்தியைத் தரும். அதேபோல் அலுவலகத்தில் இருந்து வீட்டிற்குப் புறப்படும் நேரத்திலும் ஏறக்குறைய உறுதியான ஒரு தீர்மானத்தை வகுத்துக் கொள்ளுங்கள். அப்போது தான் உங்களின் பணி திட்டமிடல் உரிய நேரத்தில் நிறைவடையும். குடும்பப் பொறுப்புகளிலும் தேவையில்லாத டென்ஷன் குறையும்.

குறிப்பிட்ட நேரத்தில் அந்த வேலையைச் செய்து முடிப்பதற்கான கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுடன் செயல்படுங்கள். அல்லது உங்களுக்கு கீழ் பணியாற்றுபவரிடம் அந்த வேலையை ஒப்படைத்து, அவர் எந்த அளவு செய்து முடிப்பார் என்பதை கேட்டறிந்து கொள்ளுங்கள். நீங்கள் வேலைகளை ஒப்படைக்கும் நபரின் நம்பகத்தன்மை மிகமிக கவனத்தில் கொள்ள வேண்டியதாகும்.

நீங்கள் ஒப்படைக்கும் நபர் சம்பந்தப்பட்ட வேலைக்குத் தகுதியுடையவரா என்பதை முதலில் ஆய்வு செய்த பின் ஒப்படையுங்கள். இல்லாவிட்டால், நீங்கள் ஒப்படைக்கும் நபரின் சொதப்பலால் ஏற்படும் தவறுக்குத் தேவையின்றி மேலதிகாரிகளிடம் நீங்கள் பொறுப்பேற்க வேண்டியதாகி விடும் என்பதை மறவாதீர்கள்.

ஒருவேளை மாலையில் உங்களின் பணி நிறைவடைய தாமதமாகும் என்றால், அதுபற்றி உடனடியாக கணவருக்கோ அல்லது வீட்டிலிருப்பவர்களுக்கோ தெரியப்படுத்துங்கள். அது வீட்டிலிருப்பவர்களின் டென்ஷனைக் குறைக்கும்.

டென்ஷனால் என்னங்க ஆயிடப்போகுது, கெட்டபெயர் தவிர, வேற ஒண்ணுமில்லீங்க.

சாந்தம் கொள்வோம். சாதிப்போம்!

# வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

## முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

கேள்வி இல்லை! பதில் இல்லை!
பொருட் கொள்வனவு அவசியமில்லை!
வயது, பால் வேறுபாடின்றி வாசகர் பங்கு பெறலாம்!

## முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

12

பெயர் : ..................................................

முகவரி : ..................................................
..................................................
..................................................

தே.அ. அட்டை இல : ..................................................

கையொப்பம் : ..................................................

உண்மை - நேர்மை - வெளிப்படைத்தன்மை

- ஒவ்வொரு வாரமும் அதிர்ஷ்டசாலி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் படுவார்.
- மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் மட்டும் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது).
- ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களை அனுப்பலாம்.

அனுப்பி வைக்க வேண்டிய முகவரி

**வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**
**முரசு பரிசுப் போட்டி - 12**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல - 1772**
**கொழும்பு.**

கூப்பனை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:
07.03.2006

பரிசுப் போட்டி இல - 10
பரிசு பெறும்
அதிர்ஷ்டசாலி

**செல்வி. நூ. பர்ஹானா,**
**2ஆம் வட்டாரம், எருக்கலம்பிட்டி, மன்னார்.**

அதிர்ஷ்டசாலி உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

# சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது -ஷோபா-

## உருளை சவ்வரிசி வடை

**தேவையான பொருட்கள் :-**

| | |
|---|---|
| உருளைக்கிழங்கு | - 3 |
| சவ்வரிசி | - 1/4 கோப்பை |
| வெங்காயம் | - 1 |
| வறுத்த வேர்க்கடலை | - 2 மேசைக்கரண்டி |
| மஞ்சள் தூள் | - 1/4 தேக்கரண்டி |
| சீரகம் | - 1/4 தேக்கரண்டி |
| கொத்தமல்லி | - 1/2 கட்டு (சிறியது) |
| கடலை மா | - 1 மேசைக்கரண்டி |
| பச்சை மிளகாய் | - 3 |
| உப்பு | - தேவையான அளவு |
| நல்லெண்ணெய் | - பொரிக்கத் தேவையான அளவு. |

**செய்முறை :-**

உருளைக்கிழங்கை குக்கரில் வைத்து 10 நிமிடங்கள் வேக வைக்கவும். (கிழங்கில் தண்ணீர் சேர்க்காமல்) வெந்தபின் தோலுரித்து நன்றாக மசித்துக் கொள்ளவும். வெங்காயம், பச்சை மிளகாய், கொத்தமல்லி மூன்றையும் பொடியாக அரியவும், வறுத்த வேர்க்கடலையை (தோலுரித்தது) பொடியாக்கவும். சவ்வரிசியை ஒரு நிமிடம் ஊற வைத்து உடனே வடிகட்டவும். வேக வைத்து மசித்த கிழங்குடன் மற்ற எல்லா குறிப்பிட்ட பொருட்களைச் சேர்ந்து பிசைந்து கொள்ளவும்.

அடுப்பில் வாணலி வைத்து நல்லெண்ணெய் விட்டு சூடாக்கி முதலில் சிறிது புளிபோட்டு கருக பொரித்தெடுக்கவும். பிசைந்து வைத்த மாவில் இருந்து சிறிய உருண்டைகள் செய்து எண்ணெயில் பொரித்தெடுக்கவும்.

**சென்ற வாரம்**

லாராவினால் ஏற்பட்ட விபத்தில் இறந்தவர்களின் தொகை மேலும் அதிகரித்துக் கொண்டு செல்வதை அறிந்த பத்திரிகை நிருபர்கள் பேஜ், தாரென்ஸனிடம் தங்கள் குழந்தைகளைப் படமெடுக்க அனுமதிக்குமாறு கேட்டு திரிகிறார்கள். ஆயினும் அவர்கள் மறுத்து விடுகிறார்கள். ஆலிஸனின் கையில் சிறிய அசைவு தெரிவதை பேஜ் அவதானிக்கிறாள்....

# ஒரு தாய் மகள்

69

எனவே ஒருமுறை நிமிர்ந்து பார்த்துவிட்டு, மீண்டும் தன் குறிப்பு நோட்டைப் பார்த்தவாறு பென்சில் நுனியைக் கடித்துக் கொண்டிருந்தாள். துறைமுக ஓவியத்தில் ஏதோ ஒன்று சேர்க்க வேண்டுமென்று தெரிந்ததேயொழிய அது என்னவென்று பிடிபடவில்லை. ஒரு நிமிடம் ஜன்னலை வெறித்துப் பார்த்தபடி இருந்தாள். மறுபடி ஆலிஸனின் பக்கம் பார்வையைத் திருப்பியபோது......

மீண்டும் ஆலிஸனின் கை அசைவதைக் கண்டாள். இம்முறை அவள் விரல்கள் பெட் ஷீட்டைப் பிடித்திருந்தன. பேஜை நோக்கிக் கையை நீட்டுகிற மாதிரியும் இருந்தது.

இது போல இதற்கு முன் என்றுமே நேர்ந்ததில்லை. இது பிரமையா? பழைய அசைவுதானா? அல்லது, புது விதமான அசைவா?

திகைத்துப் பார்த்தபோது ஆலிஸனின் தலை திரும்புவதும் தெரிந்தது. ஆம்! மிக மிக மெதுவாக, கூர்ந்து கவனித்தாலொழியத் தெரியாத அளவுக்கு, ஆலிஸனின் தலை திரும்பியது, பேஜ் அங்கே உட்காந்திருப்பதைப் புரிந்து கொண்டு திரும்புகிற மாதிரி...

மூச்சு அடைக்கப் பேஜ் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அறையில் யாரோ இருப்பதை ஆலிஸன் கண்டு கொள்வது போல... அவளே எங்கோ வெளியே போய் விட்டு அப்போதுதான் அந்த அறைக்குத் திரும்பியதுபோல...

ஒட்டும் இரண்டு உள்ளத்தின் நிகழ்வை அறிந்த மாதிரி ஆலிஸனைப் பேஜ் அறிந்து கொண்டாள்.

"ஆலி! என்னைத் தெரிகிறதாம்மா? நான் பேசுவது கேட்கிறதா ஆலி" என்று துக்கம் தொண்டையை அடைக்கக் கேட்டாள். முன்னொரு நாள், ஆலிஸன் கிட்டத் தட்ட இறந்து விட்டாள் என்றிருந்தபோது இதுபோல்தான் கேட்டாள். ஆனால் அப்போதைக் காட்டிலும் இப்போது பேஜின் குரலில் நம்பிக்கை அதிகரித்திருந்தது. அப்போதைக் காட்டிலும் இப்போது யதார்த்தம் அதிகரித்திருந்தது. அப்போதைக் காட்டிலும் இப்போது வித்தியாசம் அதிகரித்திருந்தது.

பென்சிலையும் குறிப்பு நோட்டையும் கீழே வைத்தாள். 'ஆலி...' என்று மெதுவே கூப்பிட்டபடி அவள் கையைத் தன் கையோடு கோர்த்துக் கொண்டாள். எப்படியும் இந்தத் தடவை மகளைத் திரும்பக் கொண்டு வந்து விட வேண்டும் என்ற உறுதி அவள் மனதில் பிறந்தது. "ஆலி.... கண்ணைத் திற, பேபி. இதோ பார், நான் இங்கேதான் இருக்கிறேன்... உன் பக்கத்தில் இருக்கிறேன்... பயப்படாதே, கண்ணம்மா, எல்லாம் சரியாகி விட்டது. உன் அம்மா இதோ உட்கார்ந்திருக்கிறேன் பார்.."

வெகு மிருதுவாகப் பேசிக் கொண்டே ஆலிஸனின் கையை வருடினாள். அப்போது, ஆலிஸனின் விரல்கள் தன் விரல்களை அழுத்துவதை - ரொம்ப ரொம்பப் பலவீனமாக அழுத்துவதை - உணர்ந்தாள்.

குபுக்கென்று பேஜுக்குக் கண்ணீர் வழிந்தது. தான் பேசுவது ஆலிஸனுக்குக் கேட்கிறது! யாரும் சொல்லாமலே அவள் உள்ளுணர்வுக்கு அது தெரிகிறது.

"ஆலி.. என் கையை அழுத்தினாய் இல்லையா? அப்படியென்றால் என் பேச்சு உனக்குக் கேட்கிறது! இல்லையா, கண்ணே? இதோ பார்... கண்ணைத் திற..."

ஆலிஸனின் இமைகள் படபடப்பதைப் பார்த்தாள். அதுவே ரொம்பக் கஷ்டமாக இருந்தது போலும். படபடப்பு நின்று விட்டது. பேஜின் கன்னங்களில் கண்ணீர் வழிந்து கொண்டேயிருந்தது. அதைத் துடைக்கத் தோன்றாமல் ஆலிஸனையே பார்த்துக் கொண்டு உட்காந்திருந்தாள். ஒருகால் முன்னைவிட ஆழமான கோமாவில் அவள் மூழ்கி விட்டாளோ என்ற அச்சம் உண்டாயிற்று. உயிர் இருப்பதற்கான எந்த அறிகுறியும் தென்படவில்லை...

திடீரென்று மறுபடியும் அவள் கையை ஆலிஸன் அழுத்தினாள். இந்தத் தடவை, அந்த அழுத்தத்தில் பலவீனம் இருக்கவில்லை. சற்று வலு தெரிந்தது.

குதித்தெழுந்து ஆலிஸனை உலுக்கி எடுக்க வேண்டும் போலிருந்தது பேஜுக்கு. கூச்சலிட்டு யாரையேனும் கூப்பிட வேண்டும் போலிருந்தது. கூப்பிட்டு 'என் பெண் உயிரோடு இருக்கிறாள்! எங்கேயோ ஒரு மூலையில் அவள் உயிர் ஒட்டிக் கொண்டிருக்கிறது! மூச்சு ஓடிக் கொண்டிருக்கிறது! வந்து பாருங்கள்!' என்று கூவ வேண்டும் போலிருந்தது. ஆனால் மந்திரத்துக்குக் கட்டுப்பட்ட மாதிரி அசையாமல் உட்கார்ந்திருந்தாள். மனம் மட்டும், 'விழித்துக் கொள், ஆலி... எழுந்திரு, எழுந்திரு' என்று ஓயாமல் ஜெபித்துக் கொண்டிருந்தது.

இன்னொரு தடவையும் ஆலிஸனின் இமைகள் லேசாகத் துடித்தன. பேஜுக்கு அழுகை வெடித்துக் கொண்டு வந்தது. விதி விளையாட்டுக் காட்டுகிறதோ...? டாக்டர்கள் வந்து பார்த்து, 'இது வெறும் நரம்புகளின் வலிப்பு. அவ்வளவுதான்' என்று மறுபடியும் சொல்லி விட்டுச் சென்று விடுவார்களோ?

"பேபி... ப்ளீஸ்... ப்ளீஸ் கண்ணைத் திறம்மா. நான் உன் மீது உயிரையே வைத்திருக்கிறேன். கண்ணே... ஆலி... ப்ளீஸ்..." விம்மலை அடக்கிக் கொண்டு பெண்ணின்



விரல்களை முத்தமிட்டவாறு கெஞ்சினாள் பேஜ்.

இமைகள் மீண்டும் துடிக்க, வெகு வெகு மெதுவாகக் கண்களைத் திறந்தாள், ஆலிஸன்.

**எழுதியது: டேனியல் ஸ்டீல்**
**தமிழில்: ரா.கி. ரங்கராஜன்**

ஏறத்தாழ நாலு மாதங்களுக்குப் பின் முதன் முறையாக விழி திறந்து தாயைப் பார்த்தாள்.

அவள் பார்வையில் ஒரு குழப்பம் இருந்தது. தான் பார்ப்பது என்னவென்று முதலில் அவளுக்கே புரியவில்லை. பின்னர் தாயின் கண்களை நேருக்கு நேர் பார்த்தாள். "அம்மா..." என்று முனகினாள்.

பேஜினால் அழுகையை அடக்க முடியவில்லை. குனிந்து ஆலிஸனின் இரண்டு கன்னங்களிலும் கூந்தலிலும் மாறி மாறி முத்தமிட்டாள். அவள் கண்களில் பொங்கி வழிந்த கண்ணீர் ஆலிஸனின் முகத்தை நனைத்தது.

ஆலி மறுபடி கண்ணைத் திறந்து, மறுபடி 'அம்மா' என்றாள். அவள் குரல் கரகரவென்றுதான் இருந்தது. ஆனால் அதைக் காட்டிலும் இனிய சப்தத்தைப் பேஜ் தன் வாழ்நாளில் கேட்டதில்லை. யுக யுகாந்தரமாக அங்கேயே உட்கார்ந் திருந்தாள், பெண்ணின் முகத்தையே பார்த்தவாறு.

தலைமை நர்ஸ் உள்ளே வந்தாள், ஆலிஸனைப் பார்த்ததும், 'விழித்துக் கொண்டு விட்டாள்! கொண்டு விட்டாள்! கடவுளே! ஆலிஸனுக்கு விழிப்பு வந்து விட்டது!' என்று கூவியவண்ணம் வெளியே ஓடினாள் டாக்டர் ஹேமர்மனை அழைத்து வர.

ஆலிஸன் கண்களை மூடிக் கொண்டிருந்தாள் டாக்டர் வந்தபோது. ஆனால் இப்போது அது கோமா அல்ல. தூக்கம்.

நடந்ததை அவரிடம் சொன்னாள் பேஜ். ஆலிஸனை நிதானமாகப் பரிசோதனை செய்தார் டாக்டர். சற்றைக் கெல்லாம் அவள் கண்ணைத் திறந்து அவரைப் பார்த்தாள். அவர் யாரென்று புரியவில்லை. அம்மாவை நோக்கினாள். கண்களில் நீர் தளும்பியது.

"ஓகே, கண்ணே, எல்லாம் சரியாகி விட்டது. இவர் டாக்டர் ஹேமர்மேன். நம் சினேகிதர். உன்னை நன்றாகச் சொஸ்தப் படுத்தி விடுவார்..." என்றாள் பேஜ்.

'யாரும் சொஸ்தப்படுத்தத் தேவையில்லை. என் கண்மணி விழித்துக் கொண்டு விட்டாள். கண்ணைத் திறந்தாள். என்னைக் கூப்பிட்டாள். பேசினாள். இனி எல்லாம் நன்மை தான்... குணம்தான்...' என்று அவள் மனம் எண்ணியது.

(தாய் தொடர்வாள்.....)

## இளைஞரை காப்பாற்ற முதலையுடன் சண்டை போட்ட பாட்டி

முதலையிடம் இருந்து இளைஞரை காப்பாற்றிய பாட்டிக்கு அவுஸ்திரேலிய அரசு வீரதீர விருது வழங்கி கௌரவித்துள்ளது.


அவுஸ்திரேலியாவின் பிரிஸ்பன் நகரைச் சேர்ந்த பாட்டி அலிசியா சோரோஹன் (61). கேப்யார்க் பகுதிக்கு குடும்பத்துடன் ஆண்டு தோறும் சுற்றுலா செல்வார். 2004ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திலும் சென்றிருந்தார்.

பேதர்ஸ்ட் மீன்பிடி துறைக்கு அருகே டெண்ட் அடித்து தங்கியிருந்தனர். நள்ளிரவு



அலிசியா

நேரம். அசந்து தூங்கிக் கொண்டிருந்தனர். அப்போது, அலிசியாவின் குடும்ப நண்பர் ஆண்ட்ரு (34) அலறும் சத்தம் கேட்டது. திடுக்கிட்டு விழித்தனர். எழுந்து பார்த்தால், ஆண்ட்ரு படுத்திருந்த இடத்தில் இரத்தத் துளிகள். கூடாரத்தில் இருந்து முதலை ஒன்று வெளியேறிக் கொண்டிருந்தது. 15 அடி நீளம், 300 கிலோ எடை கொண்ட மெகா முதலை.



டார்ச்சை எடுத்துக்கொண்டு அலிசியா துரத்த, படுவேகமாக நீருக்குள் சென்று மறைந்தது முதலை. அதன் வாய் பயங்கரமாக திறந்திருக்க, அதனிடம் சிக்கி உயிருக்கு போராடிக்கொண்டிருந்தார் ஆண்ட்ரு.

அலிசியாவுக்கு எங்கிருந்து தான் அவ்வளவு தைரியம் வந்ததோ தெரியவில்லை. வேகமாய் முதலை மீது பாய்ந்தார். இஷ்டத்துக்கு குத்த ஆரம்பித்தார்.

திடீர் தாக்குதலை எதிர்பார்க்காத முதலை, அரைகுறையாய் கடித்த நிலையில் ஆண்ட்ருவை விட்டுவிட்டு அலிசியாவை துவம்சம் செய்யத் தொடங்கியது.

அவருடைய மகன் ஓடி வந்து, துப்பாக்கியால் சுட்டு முதலையை கொல்வதற்குள்... அலிசியாவின் மூக்கும் ஒரு கையும் சிதைந்து சின்னா பின்னமாகியிருந்தது.

எனினும் வீரதீரச் செயலுக்கான சிறப்பு விருதை அலிசியாவுக்கு வழங்கி கௌரவித்தது அவுஸ்திரேலிய அரசு. விழாவில் பேசிய அலிசியா, 'என்னுடைய கை உணர்ச்சி இல்லாத சதைப் பிண்டமாகத்தான் இன்னமும் தொங்கிக் கொண்டிருக்கிறது. ஆயுள் முழுக்க இப்படித்தான் இருக்கும். என்று டாக்டர்கள் கூறிவிட்டனர். ஆனால், ஒரு உயிரை காப்பாற்றுவ தென்றால், இன்னும் எத்தனை முறை வேண்டுமானாலும் முதலையுடன் சண்டை போடத் தயார் என்று கூறி நெகிழ வைத்தார் அலிசியா.

## அரிசி வாங்க கூரையை விற்ற உண்மைச் சம்பவம்

மேற்குவங்க மாநிலத்தின் இயற்கை வளத்தை நினைத்துப் புழுங்காகிதம் அடைந்து போவார்கள் முர்ஷிதாபாத் மாவட்டத்தின் ஜோர்தாலா - கோஷ்பரா இடையே உள்ள சாலையில் பயணம் செய்பவர்கள். புதிதாக அங்கே வரும் சிலருக்கு இங்கேயே வசித்து விடலாமா என்று கூடத் தோன்றும்.

அந்த ரோட்டுக்கு அப்பால் உள்ள சிறு சிறு கிராமங்களின் அவல நிலையைக் கேள்விப்பட்டால் எப்படா இந்த இடத்தைவிட்டு காலி



செய்வோம் என்று அவர்கள் நினைக்க வாய்ப்பிருக்கிறது. அந்த அளவிற்கு அப்பகுதியில் தரித்திரியம் தாண்டவமாடுகிறது. தற்போது அந்தப் பகுதி பட்டினிச் சாவுகளுக்கு பாப்புலராகி வருகிறது. கடந்த 3 மாதத்தில் தயராம்பூர், பரஷ்பூர், தால்டோலி, கலடாரியா ஆகியக் கிராமங்களில் ஏராளனமான பட்டினிச் சாவுகள்.

மருத்துவக் குறிப்புகள் இந்த சாவுகளுக்கு நோய்களின் தாக்கமே காரணம் என்று கூறினாலும் பட்டினியே இந்த சாவுகளுக்குக் காரணம் என்று நான் ஒத்துக் கொள்கிறேன் என்கிறார் மாவட்டக் கலெக்டர் என்.மஞ்சுநாதபிரசாத். தயராம்பூர் கிராமத்தைச் சேர்ந்த பிஜாலா பீபி என்கிற பெண் கூறும் சம்பவம் இங்கு வறுமை எப்படி தாண்டவமாடுகிறது என்பதை எடுத்துக் காட்டுகிறது.

என் மாமா அலிமுதின் வறுமையினால் பல நாட்கள் பட்டினி கிடந்தார். வறுமையைச் சமாளிக்க வீட்டிலுள்ள பொருட்கள் ஒவ்வொன்றாக விற்பனை செய்தார்.

இறுதியாக ஒரு நாள் அரிசி வாங்குவதற்காக தன் வீட்டுக் கூரையை பிடுங்கி விற்றார்.

பிறகு அவரிடம் விற்பதற்கு ஒன்றுமேயில்லை. பட்டினி கிடந்தே ஒரு நாள் இந்த உலகத்தைவிட்டு மறைந்தார். அவர் போன பிறகு என் அத்தை ஜகீதாபீபியும் பட்டினி கிடந்தே உயிரைவிட்டார். கண்கள் கலங்க நிலைமையின் விபரீதத்தை எடுத்துரைக்கிறார் பிஜாலா பீபி.

அப்பகுதியில் உள்ள மக்களுக்கு காலங்காலமாக விவசாயம்தான் தொழில். அந்த கிராமங்களை வங்கதேஷ நாட்டிலிருந்துப் பிரிக்கும் பத்மா ஆறுதான் அவர்களின் வாழ்க்கை ஆதாரம். ஆனால் அந்த ஆற்றின் குறுக்கே கடந்த 1970ஆம் ஆண்டு பராக்கா அணைக் கட்டப்பட்டதிலிருந்தே அவர்களின் போராட்ட வாழ்க்கை தொடங்கியது.

ஒவ்வொரு மழைக்காலத்திலும் இந்த அணை நிரம்பி வழியும்போதும் அந்த உபரி நீர் விளைச்சலுக்குத் தயாராகயிருக்கும் பயிர்பச்சைகளையெல்லாம் அழித்துச் சென்று விடும்.

அதோடு நில்லாமல் எல்லா இடங்களும் தண்ணீரால் சூழப்பட்டு மக்கள் அங்கு வசிக்க முடியாதபடி செய்து விடும். வருடத்தின் சில மாதங்கள் இப்படியொரு சூழ்நிலை காணப்படும். அப்போது சுற்றிலும் வெள்ள நீர் சூழ்ந்திருக்க மத்தியில் காணப்படும் சிறிய தீவு போன்ற இடத்தில் மீன்பிடித் தொழில் நடத்தியும் சிறிய அளவில் விவசாயம் நடத்தியும் பிழைக்க முற்படுவர்.

ஆனால் அதற்கும் இடைஞ்சல்கள் வந்தது எல்லைப் பாதுகாப்புபடை ரூபத்தில். கிராமத்தினர் பத்மா ஆற்றின் வழியாக பொருட்களை வங்களாதேசத்திற்குக் கடத்திக் கொண்டு செல்வதாக கருதி அவர்களை குறிப்பிட்ட நேரத்தில் மட்டுமே அந்தப் பகுதிக்குள் செல்ல அனுமதிக்கிறது.

அதுவும் வாக்காளர் அடையாள அட்டையைக் காட்ட வேண்டும் என்பது உட்பட ஏகப்பட்ட நிபந்தனைகளுடன், இந்த வருடமும் இதே சூழ்நிலை நீடிப்பதால் வெள்ளத்தாலும், கெடுபிடிகளாலும் தங்கள் சொந்த மண்ணிலேயே சுதந்திரமாய் தொழில் செய்ய முடியாமல் தடுமாறி வருகின்றனர் கோஷ் பாரா பகுதி கிராமத்தினர்.

சமீபத்தில் இந்தியா 126 உயர் ரக போர் விமானங்களை ஏராளமான பொருட்செலவில் வாங்கப் போவதாக பத்திரிக்கைகளில் படித்தேன். அதற்கு அவர்களிடம் பணம் இருக்கிறது. ஆனால் அவர்களின் சொந்த மக்களான எங்களைக் காப்பதற்கு தடுப்பணைகள் கட்ட காசு இல்லையா.

அந்தக் கோரிக்கை நீண்ட நாள் தள்ளிப் போடப்பட்டே வருகிறதே என்று ஆதங்கத்துடன் கேட்கிறார் பரஷ்பூர் கிராமத்தைச் சேர்ந்த பட்டதாரியான சில்லார் ரகுமான்.

# சுவிற்சர்லாந்தின் சமஷ்டி



# முறைமை



**நீதி** முறையும், கோட்டங்களுக்கிடையில் பெருமளவில் வேறுபடுகின்றன. சில கோட்டங்களில், நீதிபதிகள் பாராளுமன்றத்தினால் நியமிக்கப்படுகின்றார்கள். வேறு சிலவற்றில் மக்களால் தெரிவு செய்யப்படுகிறார்கள். தொழிற் சட்டம் அல்லது வியாபாரச் சட்டம் தொடர்பாகச் சில கோட்டங்கள் விசேட நீதிமன்றங்களைக் கொண்டுள்ளன. வேறு சிலவற்றில் அப்படி இல்லை. சில கோட்டங்கள், நிர்வாக நீதிமன்றங்களைக் கொண்டுள்ளன. சட்டத்திற்கிணங்கக் குடியியல் ஊழியர்கள் நடந்து கொள்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்துவதே இவற்றின் கடமையாகும். வேறு சிலவற்றில் அப்படி இல்லை. நீதிமன்றங்களில் குற்றச் சட்டம் அல்லது வர்த்தகச் சட்டங்கள் தொடர்பான நடைமுறைகள் கூடக் கோட்டத்திற்குக் கோட்டம் வேறுபடும்.

கோட்டங்கள் பெருமளவு சுதந்திரத்தை அனுபவிக்கும் அதேவேளை, அவை, அடிப்படை உரிமைகள், மத்திய அரசாங்கத்திற்கு வெளிப்படையாக வழங்கப்பட்டுள்ள தகுதிகள் போன்றன உட்பட அரசியல் யாப்பை மதித்து நடக்க வேண்டும். கோட்டங்கள், அடிப்படை உரிமைகளை மீறினால், அல்லது தகுதிகள் தொடர்பான பங்கீட்டை மீறினால், கோட்டச் சட்டங்களுக்குச் சமஷ்டி முறைமன்றின் முன் அறைகூவல் விடுக்கப்பட லாம். ஆனால், சமஷ்டிச் சட்டம், இத்தகைய நிலைக்கு உட்படுத்தப்பட முடியாது.



### பகிரப்பட்ட ஆட்சியுடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள்

எந்தவொரு சமஷ்டி அரசிலும், பகிரப்பட்ட ஆட்சி பற்றி முடிவு செய்வதற்குப் பல வழிகள் உண்டு. இவற்றுள், நான்கை நாம் பரிசீலிப்போம். அரசியல் யாப்புசார் உரிமைகளும், எந்தவோர் அரசியல் யாப்புசார் திருத்தத்திலும் கோட்டங்களின் வகிபங்கும்; சமஷ்டி சட்டவாக்கச் செயன்முறையில் பகிரப்பட்ட செயற்பாடு; சமஷ்டி சட்டத்தைச் செயற்படுத்துவதில் கோட்டங்களின் வகிபங்கு; சமஷ்டி அரசாங்கம் அல்லது நிறைவேற்று அமைப்பு

### அரசியல் யாப்பு சார் உரிமைகளும் எந்தவோர் அரசியல் யாப்புசார் திருத்தத்திலும் கோட்டங்களின் பங்கும் பற்றலும்

எந்தக் கோட்டத்தில் பிரஜைகள் வாழ்ந்தாலும், சில அடிப்படை உரிமைகளைச் சகல பிரஜைகளுக்கும் அரசியல் யாப்பின் மூலம் உத்தரவாதப்படுத்துதல் பகிரப்பட்ட ஆட்சியை விரிவாக்குவதற்குச் சமஷ்டி நாடுகள் மேற்கொள்ளும் பிரதான வழிகளுள் ஒன்றாகும். உதாரணமாக, பேச்சுச் சுதந்திரம் அல்லது தனது சமயத்தைப் பின்பற்றுவதற்கு ஒருவருக்குள்ள சுதந்திரம் என்பவற்றைக் குறிப்பிடலாம். இத்தகைய பல அடிப்படை உரிமைகளையும் சுதந்திரங்களையும் சுவிஸ் பிரஜைகள் அனுபவிக்கின்றார்கள். இவ்வகையான உரிமைகள், ஒற்றையாட்சி அரசொன்றில் உள்ளவற்றிலிருந்து பெருமளவில் வேறுபடுவதில்லை.


எனினும், ஒற்றை ஆட்சி அரசுடன் பார்க்கும் போது,




இந்த அடிப்படை உரிமைகளை நிலைநிறுத்துதல், அவற்றைத் திருத்துதல் என்பன தொடர்பான செயன்முறையிலேயே பாரிய வித்தியாசம் நிலவுகின்றது. அரசியல் யாப்புசார் நியமங்களை, குறிப்பாக, சமஷ்டி சபையினூடாக அல்லது மேற் சபையினூடாக, அரசியல் யாப்புசார் நியமங்களை (அல்லது சமஷ்டிச் சட்டவாக்கம்) விரிவாக்குவதில், கோட்டங்கள் போன்ற உறுப்பு அலகுகளின் பிரதிநிதிகள் ஈடுபடுவதை பங்குபற்றும் தத்துவம் என்போம். சுவிஸ் அரசியல் யாப்பில் செய்யப்படும் எந்தத் திருத்தமும் சுவிஸின் பெரும்பான்மையான கோட்டங்களினாலும் அங்கீகரிக்கப்பட வேண்டும். முதலாவது சந்தர்ப்பத்தில், ஒவ்வொரு வாக்கிற்கும் சமமான மதிப்பு உண்டு. இரண்டாவது சந்தர்ப்பத்தில், மிகப் பெரிய கோட்டமாகிய ஸ்யூரிக்கிலுள்ள ஒருவரின் வாக்கின் மதிப்புப் போல, மிகச் சிறிய கோட்டமாகிய அப்பென்ஸில்லில் உள்ள ஒருவரின் வாக்கின் மதிப்பு 40 மடங்கு அதிகமாகும். இது வழமையான 'ஒரு நபர் - ஒரு வாக்கு' என்ற ஜனநாயக விதியுடன் பார்க்கும் போது, சமஷ்டியில் காணப்படும் மற்றுமொரு சிறு மாறுதலாகும்.

### சமஷ்டிச் சட்டவாக்கச் செயன்முறையில் பகிரப்பட்ட செயற்பாடு

சமஷ்டி முறைமை ஒன்றில் 'பகிரப்பட்ட ஆட்சி' சமஷ்டிப் பாராளுமன்றத்தினூடாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இது மற்றுமொரு வழியாகும். சில சமஷ்டி நாடுகளில், நாடு முழுவதிலும் சமச்சீராகப் பிரயோ கிக்கப்படக்கூடிய விதிகளைத் தமது தகுதி எல்லைக்குள், மத்திய அரசாங்கம் மேற்கொள்ளலாம். இப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பத்தில், சமஷ்டிச் சட்டவரை வாளர்கள், மக்கள் எங்கு வாழ்கிறார்கள் என்பதைக் கருத்திற் கொள்ளாது, முழுச் சனத்தொகையின் சார்பிலும் செயற்படுகிறார்கள். இந் தக் கருத்திலேயே, சமஷ்டிச் செயற்பாடு (சமஷ்டி பாராளுமன்றத்தினூடாகவும் அரசாங்கத்தினூடாகவும்) 'பகிரப்பட்ட' செயற்பாடாக அமைகின்றது. உதாரணமாக, கனடாவில் இந்நிலை காணப்படுகின்றது. இங்கு, பாராளுமன்ற உறுப்பினர்களினால் அளிக்கப்பட்ட வாக்குகளின் அடிப்படையில், சமஷ்டிக் குடியியல் சேவை, சமஷ்டிச் சட்டத்தை செயற்படுத்துகின்றது. இங்கு, உறுப்பு அலகுகளின் பிரதிநிதிகளின் நேரடியான உள்ளீடு எதுவும் இல்லை.



சுவிற்சர்லாந்து, ஜேர்மனி, அல்லது ஐக்கிய அமெரிக்கா போன்ற சமஷ்டி நாடுகளில், இது போன்ற நேரடியான பகிரப்பட்ட செயற்பாடு, பங்குபற்றல் என்ற தத்துவத்தின் மற்றொரு அம்சத்தினால் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. இச்சந்தர்ப்பத்தில் பல்வேறு உறுப்பு அலகுகளினதும் பிரதிநிதிகள் தத்தமது பிரஜைகளின் ஆர்வங்களை, சமஷ்டிச் சபையில் அல்லது மேற்சபையில் பாதுகாப்பார்கள். இதை நாம், 'சட்டவாக்கத்தின் ஏற்றக் கட்டத்தில் பங்குபற்றுதல் எனலாம். சுவிற்சர்லாந்தில், பாராளுமன்றத்தின் இரண்டாவது சபை - இது அரசுக்களின் சபை எனப்படும் - ஒவ்வொரு கோட்டத்திலிருந்தும் இரண்டு பிரதிநிதிகளையும் (மூன்று அரைக் கோட்டங்களுள் ஒவ்வொன்றிலுமிருந்து ஒவ்வொரு பிரதிநிதியையும்) கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. இங்கு, கோட்டத்தின் சனத்தொகையோ, அதன் பருமனோ, செல்வமோ கவனத்திற்கெடுத்துக்கொள்ளப்பட மாட்டாது. இப்பிரதிநிதிகள், கோட்டங்களின் பிரஜைகளினால் தெரிவு செய்யப்படுகிறார்களேயன்றி, அவர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்க முடியாத, கோட்டங்களின் அரசாங்கங்களினால் நியமிக்கப்படுவதில்லை. இவர்கள் கோட்ட அரசாங்கங்களின் முகவர்கள் அல்ல. ஆனால், தம்மைத் தெரிவு செய்யும் கோட்டங்களின் பிரஜைகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள். செனற் சபையில், சகல கோட்டங்களுக்கும் சம அளவிலான பிரதிநிதிகள் அனுமதிக்கப்படுவதால், பெரிய கோர்ட்டங்கள், சிறிய கோட்டங்களின் மீது தமது கருத்துக்களைத் திணிக்க முடியாது.

*(தொடரும்)*


## சமூக சேவைகள் மற்றும் சமூக நலன்புரி அமைச்சு தொழிற்பயிற்சி பிரிவு

### அலுமினியக் கட்டுமாணப் பயிற்சிநெறி - கொழும்பு மாவட்டம்

### (Aluminium Fabrication Course)

வடக்கு, கிழக்கு மாகாணத்தை வாழ்விடமாகக் கொண்ட அல்லது அங்கிருந்து இடம் பெயர்ந்து வெளிமாவட்டங்களில் வாழும் பாடசாலைக் கல்வியை முடித்த இடைநிறுத்திய மற்றும் பாதிப்புற்ற தரம் 8 இல் அல்லது அதற்கு மேல் சித்தி பெற்ற இளைஞர்களிடம் இருந்து மேற்படி அமைச்சினால், மேற்காணும் பயிற்சி நெறிக்கு கொழும்பு மாவட்டத்திலுள்ள பயிற்சி நிலையத்தில் தமிழ்மொழி மூலம் பயிற்சிகள் நடைபெறவுள்ளது.

**தகைமைகள்**

1. வடக்கு, கிழக்கு மாகாணங்களை வாழ்விடமாக அல்லது பிறந்த இடமாகக் கொண்டவர்களாக இருத்தல்.
2. தரம் 8 அல்லது அதற்கு மேல் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
3. 17 வயதுக்குக் குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
4. நற்குணமும், நல்லொழுக்கமும் உடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

**கொடுப்பனவு**

ஒழுங்கான பயிற்சி நெறிகளுக்குச் சமுகம் அளிப்போருக்கு உதவிக் கொடுப்பனவும் மற்றும் கடந்த காலத்தில் வழங்கப்பட்டது போன்று உணவும், தங்குமிட வசதியும் இவ்வமைச்சினால் செய்து கொடுக்கப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை**

மேற்படி பயிற்சிநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தேசிய அடையாள அட்டையின் நிழற்பிரதியுடன் கீழே தரப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்தை **"A4"** அளவுத்தாளில் தயாரித்து பூரணப்படுத்தி விண்ணப்பம் அனுப்பும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"பயிலுநர் தெரிவு"** எனக்குறிப்பிட்டு 17.03.2006 க்கு முன்னர்

**பணிப்பாளர் - தொழிற்பயிற்சி,**
**சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு,**
**இல.61, இசிப்பத்தான மாவத்தை,**
**கொழும்பு – 05.** என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

**செயலாளர்**

## சமூக சேவைகள் மற்றும் சமூக நலன்புரி அமைச்சு – தொழிற்பயிற்சி பிரிவு

## பயிற்சிநெறிக்கான மாதிரி விண்ணப்பப்படிவம்

1. விண்ணப்பிக்கும் பயிற்சிநெறி :-..............................................................

2. முழுப்பெயர் (ஆங்கிலத்தில் பெரிய எழுத்தில்) :-..............................................

3. முதல் எழுத்துடன் பெயர், (ஆங்கிலத்தில் பெரிய எழுத்தில்) :-..............................
..........................................................................................

4. விலாசம் (ஆங்கிலத்தில்) :-................................................................
..........................................................................................

5. முழுப்பெயர் (தமிழில்) :-..................................................................

6. இலங்கைப் பிரஜையா? ஆம்/இல்லை :-..........................................................

7. தேசிய அடையாள அட்டை இல. :-..............................................................

8. பால் :-..................................................................................

9. குடியியல் நிலை :-..........................................................................

10. பிறந்த திகதி :-..........................................................................

11. 1). பிறந்த மாவட்டம் :- ................................................
    2). தேர்தல் மாவட்டம் :- ................................................
    3). தேர்தல் தொகுதி பிரிவு :- ................................................

12. கல்வித் தகைமைகள் (சித்தியெய்திய பாடம், ஆண்டுகளுடன்) :-
..........................................................................................
..........................................................................................
..........................................................................................

13. வாழ்க்கைத் தொழிற்பயிற்சித் தகைமைகள் (பெற்றிருப்பின்)

| நிறுவனம் | துறை | காலம் |
|---|---|---|
| | | |

14.மொழித்தேர்ச்சி :-

| | வாசித்தல் | எழுதுதல் | பேசுதல் |
|---|---|---|---|
| தமிழ் | | | |
| சிங்களம் | | | |
| ஆங்கிலம் | | | |

15. தொழில் அனுபவம் (இருப்பின்) :-

| தொழில் வகை | காலம் (மாதங்களில்) | தொழில் புரிந்த இடம் | மாதாந்த வேதனம் |
|---|---|---|---|
| | | | |

இத்துடன் தேசிய அடையாள அட்டையின் நிழற்பிரதி (இருபுறம்) சமர்ப்பிக்கிறேன்.
எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்ட விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் வெளிப்படுத்துகிறேன். பொய்யான தகவல்கள் தரப்பட்டுள்ளன என்பது எச்சந்தர்ப்பத்திலும் கண்டுபிடிக்கப்பட்டால் எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம் என்பதை நான் நன்கறிவேன்.

............................ திகதி

................................................ விண்ணப்பதாரியின் கையொப்பம்

இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.

## இந்திய விமானங்களை சுடுவது போலப் புலிகள் பசாங்கு பண்ணினர்

**இந்திய** விமானங்கள் யாழ்ப்பாணத்தில் உணவுப் பொருட்கள் போடப் போவது பற்றி புலிகள் அறிந்திருக்கவில்லை. இந்திய அரசு கூட புலிகளை ஒரு பொருட்டாகக் கருதவில்லை. அவர்களுக்கு அறிவிக்கவுமில்லை. பாரிய இரைச்சலோடு மிராஜ் விமானங்கள் யாழ்ப்பாணத்திற்கு மேலாகப் பறப்பதைக் கண்டதும் முதலில் புலிகள் பதுங் கத் தொடங் கினர். அப்போது அவர்களிடம் விமானங் களைத் தாக்கும் ‘சாம்’ ஏவு கணைகள் இருக்க வில்லை. எனவே சில இடங்களில் கலிபர் ரக ரைபிள்களை வாகனங் களில் பொருத்தி, விமானங்களைச் சுட முனைவதாக மக்களுக்குப் பாசாங்கு பண்ணினர்.




இந்தியாவின் நடவடிக்கை கொழும்பிலுள்ள அரசியல் தலைவர்கள் மத்தியில் அதிர்ச்சியையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்தியது. ஜெயவர்தனா அதிர்ச்சி அடைந்தார். தேசிய பந்தோபஸ்து அமைச்சர் அத்துலத் முதலி ஆத்திரமடைந்தார். இந்திய விமானங்கள் பராசூட் மூலம் போட்ட பொருட்களைக் கைப்பற்று வதற்கு மக்கள் முண்டியடித்தனர். பொதிகளைப் பிய்த்து, அகப்பட்ட பொருட்களை மக்கள் எடுத்துச் சென்றனர். ஒரேயொரு தடவைதான் பொருட்கள் போடப்பட்டன. யாழ்ப்பாண மக்கள் மீதான இராணுவத் தாக்குதல்களை நிறுத்துவதற்கு அழுத்தம் கொடுக்கு முகமாகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக அப்போது அரசியல் ஆய்வாளர்கள் கூறினர்.

இந்திய நடவடிக்கை குறித்து கொழும்பிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த பத்திரிகைகள் காரசாரமாகக் கண்டனம் தெரிவித்தன. ஆட்சியிலிருந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் இந்திய எதிர்ப்புப் பேரணிகளை ஒழுங்கு செய்தது. கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகரின் உத்தியோகபூர்வ வாசஸ் தலமான இந்திய இல்லத்திற்கு வெளியே ஆர்ப்பாட்டம் நடத்துமாறு அரசு மக்களைத் தூண்டி விட்டது. மக்கள் மத்தியில் இந்திய விரோத எண்ணங்களைத் தூண்டிவிடும் திட்டமிட்ட பிரசாரங்களை ஜெயவர்தனா மேற்கொண்டார்.

இலங்கையின் வான்பரப்பில் இந்திய விமானங்கள் அத்துமீறிப் பறந்தமை குறித்து இலங்கை அரசு ஐ.நா. சபைக்கு முறையிட்டது. ஆனால், இந்தியாவின் இந்த நடவடிக்கை குறித்து ஐ.நா.சபையில் விவாதிக்குமாறு இலங்கை கேட்கவில்லை. இந்திய அத்துமீறல் குறித்து பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம் ஆகிய நாடுகள் கண்டனம் தெரிவித்தன. சார்க் அமைப்பில் அங்கம் வகிக்கும் இந்நாடுகளைத் தவிர ஏனைய சார்க் நாடுகளான பூட்டானும் மாலைதீவும் கவலை தெரிவித்தன.

சீனா, பெரிய நாடுகள் சிறிய நாடுகளை அடக்கக் கூடாதென்று கண்டனம் தெரிவித்தது. இந்திய நடவடிக்கைக்கெதிராக ஆதரவு திரட்டும் முகமாக அமைச்சர் ரணில் விக்கிரமசிங்காவை பாகிஸ் தானுக்கும் சீனாவுக்கும் ஜெயவர்தனா அனுப்பி வைத் தார். பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்கும் அமைச்சர் அத்துலத் முதலி அனுப்பி வைக்கப்பட்டார். இருவரது பயணங்களும் வெற்றியளிக்கவில்லை. இந்தியாவின் உதவியோடு இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு இந்நாடுகள் இலங்கைக்கு அறிவுரை கூறியிருந்தன. யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு மனிதாபிமான ரீதியில் உணவுப் பொருட்களை அனுப்ப விரும்புவதாக இந்தியா இலங்கைக்குத் தெரிவித்தது. இலங்கையின் வெளிவிவகார அமைச்சு வேண்டாவெறுப்புடன் அனுமதி வழங்கியது.

(அரசியல் தொடர்)

இலங்கை விவகாரங்களில் இந்தியா கையாளும் நடவடிக்கைகளை அமெரிக்கா தலைமையிலான மேற்குலக நாடுகள் எதிர்த்து வந்தன. இலங்கை இனப் பிரச்சினையில் இந்தியா எடுத்திருந்த நிலைப்பாட்டை சோவியத் ரஷ்யா வலுவாக ஆதரித்தது. அது இலங்கை மக்களின் உள்நாட்டுப் பிரச்சினையென்றும் இலங்கை மக்களே அப் பிரச்சினைக்குத் தீர்வு காண இந்தியா அனுமதிக்க வேண்டுமென்றும் சீனா கூறியது. பாகிஸ்தான், பின்கதவு வழியாக இலங்கைக்கு உதவத் தொடங்கியது. மேற்கு ஐரோப்பிய நாடுகளும் அவுஸ்திரேலியாவும் இந்த இனப்பிரச்சினையை வித்தியாசமான கண்ணோட்டத்துடன் பார்த்தன. தமிழ் அகதிகள் குடியேற்றப் பிரச்சினை மற்றும் அபிவிருத்தி யோடு சம்பந்தப்பட்ட சவால்கள் என்ற ரீதியிலேயே அவை இதனைக் கணித்தன.

இதற்கிடையில் தமிழீழ இயக்கங்கள் அமெரிக்கா, தென்கிழக்காசிய நாடுகள், பிரிட்டன், ஜேர்மனி, ஸ்கண்டினேவிய நாடுகள் ஆகியவற்றிலெல்லாம் புலம் பெயர்ந்த இலங்கைத் தமிழர்களூடாக வலுவான அமைப்புகளை இக்காலகட்டத்தில் ஏற்படுத்திக் கொண்டன. இதனூடாக அரசியல், பொருளாதார வேலைகளை மேற்கொள்வது தமிழீழ இயக்கங்களுக்கு வாய்ப்பாக அமைந்தது. குறிப்பாகப் புலிகள் இயக்கம் மேற்கொண்ட நடவடிக்கை காரணமாகப் பெரும் தொகை நிதியை அவர்களால் சேகரிக்க முடிந்ததோடு சர்வதேச ஊடகங்களூடாக இலங்கை அரசுக்கு எதிராக பிரசாரங்களை முன்னெடுத்துச் செல்லவும் முடிந்தது.

ஐரோப்பிய நாடுகளிலும் ஸ்கண்டினேவிய நாடுகளிலும் இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக பெருமளவில் இடம் பெயர்ந்ததால், அந்தந்த நாடுகளில் தமிழர் பிரச்சினை புதிதாக உருவெடுத்தது. புலம் பெயர்ந்த தமிழர்களுக்கு நிரந்தர வசிப்பிடம் வழங்க விரும்பாத பல நாடுகள், தமிழ் தீவிரவாதிகளுக்கெதிராக இலங்கை அரசு எடுக்கும் நடவடிக்கை

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

களுக்கு ஆதரவு வழங்கின. வேறு பல நாடுகள் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்பட வேண்டுமென விரும்பின. பல்தரப்பு மத்தியஸ்த முயற்சிகள் மேற் கொள்ளப்பட வேண்டுமென்றும் இவை விரும்பின. அதாவது, பொதுநலவாய அமைப்பு அல்லது ஐ.நா.சபை அல்லது, ‘குவாக்கர்ஸ்’ போன்ற தன்னார்வ சமாதான நிறுவனங்கள் இலங்கைப் பிரச்சினையில் தலையிட்டு தீர்வுகாண வேண்டுமென்று விரும்பின. ஒரு கட்டத்தில் பொதுநலவாய நாடுகளின் செயலாளர் நாயகமான சேர் எஸ்.ரம்பால் பிரிட்டனின் உதவியுடன் பேச்சுவார்த்தை நடத்தி, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முன்வந்தார். ஆனால் ஒரு சிக்கலான சூழ் நிலையில் பல்வேறு நாடுகள் இப்பிரச்சினையில் தலையிடுவதை இந்தியா விரும்பவில்லை என்றே கூற வேண்டும்.

இந்தியாவின் தலையீட்டை ஜெயவர்தனாவின் அரசாங்கம் விரும்பாத போதிலும், இந்தியாவை மீறி ஏனைய நாடுகள் இலங்கை இனப் பிரச்சினையில் தலையிட விரும்பவில்லையென்பதும் இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கது. தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அதுலத்முதலியோ, ஐ.நா.பந்தோபஸ்து சபையில் அங்கம் வகிக்கும் ஐந்து நிரந்தர அங்கத்துவ நாடுகளும் இப் பிரச்சினையில் தலையிட வேண்டுமென்ற கருத்தைப் பல இடங்களில் முன் வைத்து வந்தார். அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், சீனா, ரஷ்யா ஆகியவையே இந்த ஐந்து நாடுகளுமாகும். இந்தியாவின் மத்தியஸ்த முயற்சிகளனைத்தும் தோல்வி கண்டதால், ஐக்கிய நாடுகள் பந்தோபஸ்துச் சபையின் நிபந்தனைகள், விதிகளுக்கேற்ப ஐ.நா.செயலாளர் நாயகம் இம் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்பதே அமைச்சர் லலித் அதுலத்முதலியின் கருத்தாகும். மத்தியஸ்த முயற்சிகளுக்குக் கைகொடுக்க பொதுநலவாய அமைப்பு முன்வந்த விடயம் ஜனாதிபதிக்குத் தெரியாதென்று ஆட்சியதிகார உயர்மட்டத் தலைவர்கள் மத்தியில் பேச்சடிப்பட்டது. ஜனாதிபதி ஜெயவர்தனா அமெரிக்கா, பிரிட்டன் அல்லது அவுஸ்திரேலியா மத்தியஸ்தம் வகிப்பதையே விரும்பினார்.



மிராஜ் விமானம்

(தொடர்ந்து வடியும்....)




### அன்றிரவு


கோவிந்தன் வருவார் என்ற நம்பிக்கையுடன் அவர்கள் இருவரும் காத்திருந்தார்கள்.

இரண்டாவது பீரியட் போது சக்காரியா சார் எதையோ எடுப்பதற்காக லாபரெட்டரிக்கு வந்தார். ஸ்டோர் ரூமை அடைந்தபோது கதவு திறந்து கிடந்தது.

அங்கிருந்து குரங்கு ஒன்றின் எலும்புக்கூட்டை எடுக்க வேண்டியிருப்பது ஞாபகம் வந்ததால், உள்ளே நுழைந்தார்.

வெகுநாளாக மாணவர்கள் குரங்கின் எலும்புக் கூட்டைப் பார்க்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

ஸ்டோர் ரூமுக்குள் நுழைந்ததும் என்னமோ ஒன்று கருகும் வாசனை அவரது



மூக்கைத் தாக்கியது. சமீபகாலமாகப் பத்திரிகைகளில் தீ விபத்துக்களைப் பற்றி ஏராளமான செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. எனவே சந்தேகம் நிறைந்த கண்களுடன் சுற்றுமுற்றும் பார்த்தார்.

ஆனால், குறிப்பிடும்படி எதுவும் தென்படாததால் கருகல் வாசனை தன்னுடைய கற்பனையாக இருக்குமென்று வெளியே வந்தார்.

அப்போது குமார் லாபரெட்டரிக்குள் நுழைந்தார்.

**எழுதுவது**
**சிவன்**

“என்ன சார் இங்க? நான் உங்களுக்கு ஏதாவது உதவணுமா?” - குமார் கேட்டார்.

“அதெல்லாம் ஒண்ணும் தேவையில்லை சார். குரங்கோட எலும்புக்கூடு எடுக்க வந்து மறந்து வெளியே வந்துட்டேன்.” - என்றவர் மறுபடி உள்ளே நுழைந்து ஒரு சிறிய கண்ணாடிப் பெட்டியுடன் வெளியே வந்தார். பார்வைக்கு அது ஒரு குழந்தையின் எலும்புக்கூடு மாதிரியே இருந்தது.

சக்காரியா சார் வெளியேறிவிட்டார்.

குமார் மேஜை டிராயரைத் திறந்தார். அதற்குள் இருந்த இரண்டு புத்தகங்களை எடுத்துப் புரட்டிப் பார்த்தார்.

“என்ன தேடுறீங்க?” - அவருக்குப் பின்னாலிருந்து ஒரு குரல் கேட்டது.

குமார் திரும்பிப் பார்த்த போது தெளிவற்ற ஸ்ரீதேவியின் உருவம் தெரிந்தது.

“அடுத்த வகுப்புக்கான பாடம்....”

அவர்கள் இருவருக்குமிடையில் இருந்த இடைவெளி வழியே ஸ்டோர் ரூமின் எலும்புக் கூடுள்ள கண்ணாடிப் பெட்டி நன்றாகவே தெரிந்தது.

“பக்கத்தில போய்ப் பாருங்களேன்!” - ஸ்ரீதேவி, கையால் சுட்டிக்காட்டியபடி கூறினாள்.

குமார் அங்கிருந்து நகர்ந்து கண்ணாடிப் பெட்டியை நெருங்கி எலும்புக்கூட்டை முழுவதுமாகப் பார்த்தார்.

எலும்புக்கூட்டின் கங்கணப் பகுதியில் அவர் கட்டி வைத்திருந்த கறுப்புக் கயிறு சாம்பலாகிப் போயிருந்தது. குமார் வியப்பால் கண்களை அகல விரித்தார்.

“இது எப்படி இப்படியானது?” - குமார் வியப்பு மாறாத குரலில் கேட்டார்.

சற்று நேரம் எதையோ யோசித்த ஸ்ரீதேவி அதற்குப் பதிலளித்தாள். “வேறு யாராவது தங்களுக்கு எதிராகச் செயல்படலாம் என்பதைத் தெரிந்து கொண்டு முன்கூட்டியே இப்படியொரு பாதுகாப்பு ஏற்பாட்டைச் செய்திருக்கலாம். எலும்புக்கூட்டின் மீது சக்தியேற்றிவிட்டிருக்க வேண்டும்.”

“ஓகோ... அப்படியொரு வழி இருக்கிறதா? மேற்கொண்டு இந்தக் கண்ணாடிப் பெட்டிக்குள் இருக்கிற எலும்புக்கூடு அசையாமல் இருப்பதற்காகத்தான் திருமேனி (தேவதத்தன் நம்பூதிரி) இந்தக் கயிறை மந்திரித்து தந்தார். ஆனால், இப்படிப்பட்ட நடவடிக்கையை நமது எதிராளிகள் எதிர்பார்த்து அதற்கேற்ற முன்னேற்பாட்டைச் செய்திருக்கிறார்கள். அப்படியானால் நான் உடனடியாகத் திருமேனியைச் சந்திக்க வேண்டுமே!” - குமார். ஏமாற்றத்துடன் அங்கிருந்து திரும்பினார்.

அன்று இரவுக்குள்ளேயே இதற்கொரு பரிகாரம் காணவில்லையென்றால், நிச்சயம் எலும்புக்கூடு கண்ணாடிப் பெட்டியிலிருந்து வெளியேறிவிடும் என்று குமார் நம்பினார். எனவே திருமேனியை உடனடியாகச் சந்திப்பது அவசியம் என்றும் நினைத்தார்.

பிரின்ஸிபாலின் அறைக்குச் சென்று லீவு வேண்டும் என்று கூறினார் குமார்.

“என்ன சார் சமீபகாலமாக இப்படி அடிக்கடி லீவு எடுக்குறீங்க! ஏதாவது பிரச்சனையா?” இதுவரையில் லீவு என்பதைப் பற்றியே யோசிக்காத ஒரு மனிதர் குமார் என்பது பிரின்ஸிபாலுக்கும் நன்றாகவே தெரியும்.

“குடும்பத்தில சில பிரச்சனைங்க சார். இத்தனை நாளா அந்தப் பக்கமே தலைவைச்சுப் படுக்காம இருந்தேன். அதனால ஒண்ணுக்கு மேல ஒண்ணா எல்லாப் பிரச்சனைகளும் சேர்ந்து இப்ப ஒரே தலைவலியா மாறிடுச்சு. இனிமேலும் இதையெல்லாம் கவனிக்காம இருக்க முடியாதுங்கிற நிலைமை. என்ன சார் செய்யிறது?” - குமார் தன்னுடைய அவசரத்தை வெளிக்காட்டாமல் நாற்காலியில் அமர்ந்தார்.

குமாரின் பிரச்சனையே தங்களது லேபில் உள்ள எலும்புக்கூடு தொடர்பானதுதான் என்பதைப்பற்றி பிரின்ஸிபால் கொஞ்சம்கூட யோசித்தே பார்க்கவில்லை.

“அவசியமா நீங்க போய்த்தான் தீரணும்னா கிளம்புங்க. நம்ம காலேஜோட நிலைமையை நான் உங்க கிட்ட விளக்கணும்கிற அவசியமே இல்லை” - பிரின்ஸிபால் லீவு லெட்டரை ஒருதடவை பார்த்துவிட்டுக் கையெழுத்துப் போட்டு, டிரேயில் தள்ளினார்.

(வாசனை வீசும்....)

# மனதுக்கு நிம்மதி

"**நம்** மனத்தைப்பற்றி அறிந்துகொள்ளும் மனோதத்துவ ஆராய்ச்சிகளே உலகில் நிலவும் மதங்களின் எதிர்காலமாகும்" என்று கூறினார் ஒரு மனோதத்துவப் பேராசிரியர். வாழும் வழியைப் போதிக்கின்றன மதங்கள், அத்துடன் நம்மை நாமே அறிந்து கொள்ளும் முயற்சியில் அவை நம்மை ஈர்க்கின்றன.


எனினும் மதம் ஒரு போதை, செயலற்றவனின் புகலிடம், சுயநம்பிக்கை இல்லாதவனின் ஊன்றுகோல், மக்களைப் பயமுறுத்த மத போதகர்கள் உபயோகிக்கும் ஒரு சாதனம் என்று அதன் எதிரிகள் அன்றிலிருந்து இன்றுவரை கூறி வருகின்றனர். மேலும் நமது நாட்டில் மதப் போதனைகளினால் ஒருதலைப்பட்ச வளர்ச்சி ஏற்பட்டு மக்கள் அதிகம் விதியையும் குறைந்த அளவுக்கு மனித முயற்சியையும் நம்பத் தலைப்பட்டார்கள். அத்துடன் எல்லாத் துறைகளிலும் அயோக்கியர்கள் இருப்பதுபோல், மதத் துறையில் சில போலிகள் புகுந்து, பொதுமக்களிடையே ஓர் அவநம்பிக்கையைத் தேற்றுவித்துவிட்டனர். மதசம்பிரதாயங்களும் சடங்குகளும் மனிதனது சுதந்திர உணர்ச்சியைப் பறித்து சம்பிரதாயங்களுக்குட்பட்ட ஒரு வாழ்க்கையை அமைத்து விட்டன. வேண்டாதவற்றைக் கெல்லி எறிய வேண்டிய மத சீர்திருத்தமானது, மதங்களின் அடிப்படைக் கோட்பாடுகளே பொய், ஏமாற்று வித்தை என்ற ஓர் எண்ணப் புரட்சியை விளைவித்தது. அதே சமயம் மேனாடுகளில் விஞ்ஞான அறிவு வேகமாக வளர்ந்தது. அம்மை நோய் ஒரு வைரஸிலிருந்து கிளம்புகிறது. செயற்கையாக வானிலிருந்து மழை பெய்விக்கலாம். பறவைகளைப் போல் மனிதனும் பறக்கலாம் என்பன போன்ற விஞ்ஞான உண்மைகளின் தெளிவில் மனிதன் மதங்களைச் சந்தேகிக்கத் துவங்கினான். இதன் விளைவாக ஞானி, சோம்பேறி என்ற பட்டம் பெற்றார். அவர் இடத்தை விஞ்ஞானிகள் ஆட்சி புரியத் துவங்கினர். எதையும் ஆதாரத்துடன் நோக்கும்போது நமது தர்க்கவாத அறிவுக்குப் பெருமை ஏற்படுகிறது.

ஆனால் கடந்த பத்து ஆண்டுகளில் ஒரு மகத்தான மறுமலர்ச்சி புதிய நோக்கு ஏற்படத் துவங்கியது. விஞ்ஞானிகளின் சோதனைகளுக்கு யோகிகளும் ஞானிகளும் உள்பட இசைந்தனர். அமெரிக்காவில் கான்சாஸிலுள்ள 'மென்னிங்கர் இன்ஸ்டிடியூட்டில்' ராமயோகி தமது இதயத்தையும், இரத்த ஓட்டத்தையும் மனக் கட்டுப்பாட்டில் நிறுத்திக் காட்டினார். தானே இயங்கும் தசைகள் என்று நாம் இத்தனை நாள் படித்து வந்த விஞ்ஞானம் நேர்தலைகீழாக 180 டிகிரியில் மாறியது. ஸ்டான் போர்ட் பல்கலைக்கழகத்தில் புட்ஆப் என்ற பௌதிக விஞ்ஞானி (Remoteviewing) என்ற ஒரு சாதனையை விஞ்ஞான பூர்வமாகச் செய்து காட்டியிருக்கிறார். அதாவது தொலைவிலுள்ள ஒருவர் இருக்குமிடத்தையும் செய்யும் செயலையும் வேறு இடத்திலுள்ள ஒருவர் படமாக வரைந்து காட்டுகிறார். நமது அலுவலகத்தில் என்ன நடக்கிறது, வீட்டில் குழந்தை எப்படியிருக்கிறான், எதிரி நாட்டு இராணுவ முகாமின் தளவாட வலிமை என்ன, என்று பலவித விஷயங்களுக்கும் இது நாளை பயன்படக்கூடும். ஹார்வார்ட் பல்கலைக் கழக மருத்துவர் பென்சன், நெருக்கடிகளில் வாழும் அமெரிக்க சமுதாயத்திற்கு, மருந்துகளும் மாத்திரைகளுமில்லாத மனக்கட்டுப்பாட்டு முறையை, தியான முறையைச் சொல்லிக் கொடுத்து வருகிறார். மனம்.

# ஒரு ஞானியும் ஒரு விஞ்ஞானியும்

மனம். மனம். எங்கும் மனம் பற்றி ஆராய்ச்சி.

அதாவது விஞ்ஞானம் இப்போது வெகு தீவிரமாக ஞான மார்க்கத்தில் இறங்கியிருக்கிறது. உலகில் மிகப் பெரிய காரியம் நம்மை நாமே அறிந்து கொள்வதாகும் என்று எல்லா தத்துவ ஞானிகளும் கூறியிருக்கிறார்கள். நம்மை நாமே அறிந்துகொள்ளும் முயற்சியில் அறிவைப் படிக்கப் படிக்க நமது முந்தையர் செய்த விந்தைகளும் நமது ஞானத் தந்தையர் காட்டிய வழிகளும் எவ்வளவு அபூர்வமானவை, அற்புதமானவை என்ற எண்ணங்களில் திளைத்தேன். மிதந்தேன். நமது பெரும் சொத்தை அறியாது அனுபவிக்காது போவது, நமது பெரியவர் காட்டிய வழியில் நடக்காது போவது எத்தகைய



மனம் செயல்படும் விதங்களை, மனத்தின் இயல்பினை அறியும் முயற்சியில் - மேனாட்டு விஞ்ஞானம் இறங்கியிருக்கிறது. மனிதன் தேவனாகும் முறை பூமியில் தோன்றுகிறது என்றுதான் கூறவேண்டும்.

நான் பிரபஞ்ச அறிவு பற்றி எழுதியபோது எனக்குள் தயக்கமிருந்தது. பழமைக்குள் போய்விடும் ஒரு பயம். வயோதிகத்தினுள் போய்விடும் ஒரு சந்தேகம், ஆனால் வளரும் விஞ்ஞான பேரிழப்பாகும் என்பதை உணர்ந்தேன்.

"பிரபஞ்சம் எங்கே இருக்கிறது? நமது ஊர் ஞானி என்ன எல்லாம் தெரிந்தவரா? மேனாட்டு விஞ்ஞானத்திற்கெதிரே அவர் பேதையாக, பைத்தியக்காரராக அல்லவா நிற்பார்" என்பன போன்ற கேள்விகளுக்குப் பதிலாக சமீபத்தில் டாக்டர் ரிச்சர்ட் செல்சர் எழுதிய ஒரு சம்பவத்தை இங்கே மொழிபெயர்க்க ஆசைப்படுகிறேன். டாக்டர் செல்சர், யேல் பல்கலைக்கழக மருத்துவமனையில் ஒரு மருத்துவர். புகழ்பெற்றுவரும் சிறந்த எழுத்தாளர். டாக்டர் செல்சர் எழுதுகிறார்.

"ஏஷி தோண்டன், வரும் ஜூன் 10ஆம் திகதி காலை ஆறு மணிக்கு நமது மருத்துவ மனைக்கு வந்து நோயாளிகளைப் பார்ப்பார். தோண்டர், 'தலாய்லாமா மருத்துமனைக்கு வந்து நோயாளிகளைப் பார்ப்பார். தோண்டன், 'தலாய்லாமாவின் மருத்துவர்' என்ற அறிவிப்பைப் பலகையில் பார்த்தேன். கடவுளரிடமிருந்து வரும் ஒரு தூதுவரை நம்பாத அளவுக்கு நான் ஒரு சந்தேகப் பிராணி அல்ல.

ஜூன் 10ஆம் திகதி, நான் மற்ற மருந்துவர்களுடன் கோட்டுடன் நிற்கிறேன். அந்த அறை, பிற டாக்டர்களின் வெளிப்படையான சந்தேகங்களால் கனத்துக் கொண்டிருந்தது. சரியாக மணி ஆறு. ஒரு சிறிய உருவம். பொன் நிறம், கையில்லாத அங்கியில் புத்தபிக்குகளுக்கே உரித்தான வண்ண அங்கியில் தோன்றுகிறார். நன்றாக சவரம் செய்யப்பட்ட தலை. பெயருக்கு, கண்ணுக்கு மேல் இமையில் ஒரு வரி மயிர். மொழி பெயர்ப்பாளர், ஓர் இளைஞர், தோண்டனை அறிமுகம் செய்து வைக்கிறார். தோண்டன் தலைகுனிந்து வணக்கம் தெரிவிக்கிறார். மருத்துவர்கள் தேர்ந்தெடுத்த ஒரு நோயாளியை தோண்டன் பார்ப்பார் என்று அறிவிக்கப்பட்டது. அந்நோய் என்னவென்று ஏஷி தோண்டனுக்குத் தெரியாது. மருத்துவர்களாகிய எங்களுக்கும் தெரியாது. தோண்டன் எங்கள் முன்னிலையில் சோதனை செய்வார். பிறகு நாங்கள் மீண்டும் கூடுவோம் தோண்டனுடன். தோண்டன் அப்போது நோயினை விளக்குவார்." இது ஏற்பாடு.

அந்தக் குறிப்பிட்ட நோயாளிக்கு முன்னமே செய்தி அனுப்பப்பட்டது. ஒரு வெளிநாட்டு மருத்துவர் வரப் போகிறார் என்று. காலை எழுந்தவுடன் சிறுநீர் பிடித்து வைக்குமாறு நோயாளிக்குச் சொல்லி இருந்தார்கள்.

(தொடர்ந்து வரும்.........)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

## குறுக்கெழத்துப் போட்டி 159

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | 5 | 6 |
| 7 | 8 | 9 | | 11 | |
| 13 | | 15 | 16 | 17 | 18 |
| | 20 | 21 | 22 | | 24 |
| 25 | 26 | | 28 | 29 | 30 |
| 31 | 32 | | 34 | 35 | 36 |

### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 07.03.2006 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-159
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 157க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.

சி.சஜித்தா, 43/1, புகையிரத நிலைய வீதி, மட்டக்களப்பு.

### பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.

1. திருமதி ஜெயா ஜேசுதாசன், 155/07, ஜெம்பட்டாவீதி, கொழும்பு - 13.
2. ச. தயாபரன், 274/11, வலியமுன வீதி, ஹேகித்த - வத்தளை.
3. இ. கார்த்திகேசு, 3 1/3, 42ஆவது ஒழுங்கை, கொழும்பு - 06.
4. க. நிரஞ்சன், 22, பிரதிபிம்பராம வீதி, களுபோவில.
5. ந. நாகலிங்கம், 22, தாமரைக்கேணி வீதி, மட்டக்களப்பு.
6. சீ. தங்கவடிவேல், அரசினர் வைத்தியசாலை, மட்டக்களப்பு.
7. கே. அரசேஸ்வரன். கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.
8. ஏ. சிறீன் ஷிதாரா, 112, இமாம் கஸ்ஸாலி வீதி, பெரிய நீலாவணை.
9. எம். ராதிகா தேவி. 5ஆம் வட்டாரம், அனலைதீவு.
10. த. யோகராசா, சரசாலை தெற்கு, சாவகச்சேரி.

### குறுக்கெழுத்துப் போட்டி 157 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 சு | 2 த | 3 ங் | 4 தி | 5 ர | 6 ம் |
| 7 ம | 8 ழை | ■ | 10 க | 11 ம் | 12 ர |
| 13 ம் | ■ | 15 ன் | 16 ல | 17 யு | 18 வ |
| 19 க | 20 ம் | 21 ப | 22 ம் | ■ | ■ |
| 25 லி | 26 ஓ | 27 கை | ■ | 29 வி | 30 தி |
| ■ | 32 யு | 33 வ | 34 ம் | ■ | 36 ப |

### இடமிருந்து வலம்

1. சுவிற்சர்லாந்தின் தலைநகரம்.
5. பின்னிய தலைமுடி என்றும் பொருள்படும்.
7. நாடு அல்லது பரந்த இடம் என்றும் கூறலாம் (குழம்பியுள்ளது).
15. சுறாமீன் அல்லது ராசிகளில் ஒன்று.
20. பாட்டு அல்லது காடு என்றும் பொருள்படும்.
25. மீன்பிடி உபகரணம் (திரும்பியுள்ளது).
28. நட்சத்திரங்களில் ஒன்று (குழம்பியுள்ளது).
31. சேரனுடைய கொடியின் சின்னம்.
34. மழைக்கு அதிபதியான வருணனைக் குறிக்கும் (குழம்பியுள்ளது).

### மேலிருந்து கீழ்

1. வெற்றி என்று பொருள்படும்.
2. பூக்களுடன் உறவாடும் வண்டினம் (தலைகீழ்).
3. கிருஷ்ணனின் அவதாரங்களில் ஒன்று (குழம்பியுள்ளது).
5. அம்பு என்றும் பொருள்படும் (குழம்பியுள்ளது).
16. இவனுடைய வீட்டுக் கைத்தறியும் கவிபாடும் என்பர்.
18. அடைக்கலம் என்றும் பொருள்படும் (தலைகீழ்).
20. பாதுகாப்பு என்று கூறலாம்.
25. பொருளொன்றின் பெறுமதி (தலைகீழ்).
29. குளம் அல்லது நீர்த்தடாகம் (தலைகீழ்).

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

# புதிய நடையில் புதிய தத்துவங்கள்



- வழங்குவது றாஹில்

## வருடங்கள் வகுப்பறை

வாழ்க்கை கண்ணீர்க் குளமல்ல.
அதைப் பன்னீர் மழையாக்கு!

வருடங்கள் உனக்கான பாடப் புத்தகங்கள்.

நீ கற்றுக் கொள்ளும் போதுதான் உனது குறைகள் கழன்று விழ ஆரம்பிக்கின்றன.

உனது தவறுகளை நீ புதுப்பிக்காமல் அழித்துவிடுவதற்கு சந்தர்ப்பம் பெறுகிறாய்.

உனது கறைகளைக் கழுவிவிடுவதற்கு உனக்குத் தண்ணீர் கிடைக்கிறது.

உன்னை நீ திரும்பத் திரும்பத் திருத்தி எழுதிக் கொள்வதற்கு வாய்ப்புத் தருவது காலங்கள்தான்.

உன்னைச் சந்திக்கின்ற வருடங்கள் வெறும் நாட்கள் தான் என்று நீ தீர்ப்புச் செய்யும்போது உனது அழுக்குகள் இன்னும் உன்னில் நிரம்புகின்றன.

உன் தவறுகள் இன்னும் உன்னில் வளர்கின்றன.

உன் குறைகள் மேலும் உயிர் பெறுகின்றன.

நீ நாட்களைக் கைகுலுக்கு!
பூச்செண்டுகள் கொடு!

நாட்கள் பூக்கள் போன்றவை.
உதிர்ந்தால் உதிர்ந்ததுதான்.

அது உயிர் விடுவதற்கு முன் அதன் வாசம் சேகரி! அழகினை அள்ளு.

உனது நாட்கள் வைரங்களை விடக் கோடி மடங்கு பெறுமதியானவை.

நீ வயதால் வருடங்களை மேய்கிறாய்.

நீ மனதால் வருடங்கள் பார்!

கிழக்கிலிருந்து ஆரம்பமாகின்ற ஒவ்வொரு விடியலும் உனக்கானதுதான்.

உனக்கான காலங்களில் நீதான் கண்ணீர் தெளிக்கின்றாய்.

காலங்கள் பூக்கள் ஏந்திக் கொண்டும் முட்கள் சுமந்து கொண்டுந்தான் உன்னை நோக்கி வருகின்றன.

உனக்குப் பூக்கள் தேவையானால் முட்கள் பற்றிக் கவலைப்படாதே!

முட்கள் தீண்டியதற்காகப் பூக்களே வேண்டாம் என்றால் எப்படி?

குழந்தைப் பருவம் பால் பெய்கிறது உனக்கு.

சிறு பருவம் விளையாட்டுக் காட்டுகிறது.

வாலிபப் பருவம் உன்னை மாற்றுகிறது. உன் குருதி வேகம் மாறுகிறது. உன் மனதில் கனவுகள் நுழைகின்றன.

நினைவுகளால் உன் வாலிபம் நிறைகிறது. உன் செயல்கள் வேகமாகின்றன. காதல் அழைப்பிதழ் அனுப்புகிறது. காமம் வாசல் செய்கிறது.

நீ துருப்பிடிப்பதுவும் தூசுதட்டப்படுவதும் வாலிபத்தில்தான்.

உனது வாலிப வருடங்கள் ஆபத்தானவை. ஆனால், அழகானவை நீ விபத்தடையாமல் இருந்தால்.

முதுமையில் உன் அனுபவங்கள் சிகரங்கள் அடைகின்றன.

உன் கண்ணீர் வற்றி வரண்டு போகிறது.

உன் புன்னகையும் கண்ணீரும் சந்திக்கின்ற ஒரே ஒரு இடம் உனது முதுமைதான்.

நீ வருடங்களால் உனது வாழ்க்கைக்குப் பாதை செய்திருந்தால் உனது முதுமை முக்தி பெறுகிறது.

நீ வருடங்களை வீணடித்திருந்தால் உனது முதுமை தகைமை இழந்து விடுகிறது. இப்படி....

உனது கண்ணீரையும் புன்னகையினையும் வருடங்களா தீர்மானிக்கின்றன?

இல்லை!!

தீர்மானிப்பதும் அனுபவிப்பதும் நீ!

# றொக்சி

"**அப்பா** எங்கட றொக்சி செத்துப் போச்சப்பா."

"எப்படா?"

"இண்டைக்குத்தானப்பா."

"என்னடா நடந்தது?"

"தெரியேல்லயப்பா. அது நல்லாத்தானப்பா நிண்டது. காலமை நான் நித்திரையால எழும்பி வரேக்க வாசலில படுத்திருந்தது. 'ஏய் றொக்சி' எண்டு தட்டினனான்பா. அது எழும்பேல்ல. மற்ற நாட்களில இப்பிடி நான் எழுப்பினால் மெதுவா எழும்பி முன்னங்கால் இரண்டையும் நீட்டி கொட்டாவி விடுமப்பா. பிறகு என்னில பாய்ஞ்சு முகத்தை நக்க வருமப்பா. காலையில அப்பிடி எதுவுமே செய்யேல்ல. திரும்பவும் தட்டிப்பாத்தேனப்பா எழும்பவேயில்லை. பிறகு அம்மாவைக் கூப்பிட்டேனப்பா அம்மா தான் சொன்னா றொக்சி செத்துப் போச்செண்டு."

நான் தொலைபேசியில் அழைத்தபோது என்னுடைய ஐந்து வயது மகள் சொன்ன தகவல்கள் இவை. அப்பாவுக்கு றொக்சியை மிகவும் பிடிக்கும் என்பதை தெரிந்து வைத்திருந்ததனால் அவள் முதலில் சொன்னது இந்த விடயம்தான்.

உயிர்கள் இறப்புக்கு உட்பட்டவைதான் என்பதை நான் உணர்ந்திருந்த போதும், ஒரு மகளைப் பறி கொடுத்த தகப்பனின் துக்கம் போல் இந்தச் செய்தி என்னை வாட்டியது.

பின்னர் என்னோடு கதைத்த என் மனைவி என் குரலில் தெரிந்த மாற்றத்தைக் கண்டு...

"றொக்சிக்காக இப்பிடியெண்டால் ஒரு வேளை எங்களுக் கொண்டெண்டால்..." என்று ஆச்சரியப்பட்டதோடு ஆறுதலும் சொன்னாள்.

றொக்சி பிறந்த அன்றே அதன் தாயின் முலைகள் அதனிடமிருந்து பறிக்கப்பட்டு விட்டன. சென்னையில் குடியிருந்த எனது நண்பனின் அக்காவின் குடும்பம் மீண்டும் இலங்கைக்கு மூட்டை கட்டியபோது அவர்களோடு விமானத்தில் றொக்சியின் அம்மாவும் பறந்து போய்விட்டது. அது இலங்கைக்குப் பயணமாக விருந்த தினத்திலேயே இரண்டு குட்டிகளை ஈன்று விட்டது. ஏற்கனவே ஏற்பாடு செய்தபடி றொக்சியின் அம்மா மட்டும் பறப்பதற்கு அனுமதியிருந்தது.

வெள்ளை வெளேரென்று பஞ்சுப்பொதியாக கண்கள் திறக்காதிருந்த றொக்சியை என்னோடு எடுத்து வந்தேன். பசியோடு இருந்த அதை என் நெஞ்சோடு அணைத்தபோது தாயின் முலை தேடி என் கமக்கட்டுக்குள் மூஞ்சை நுழைத்தது.

முதலில் அதற்காக பக்கத்திலுள்ள ஆங்கில மருந்துக் கடையில் குழந்தைகளுக்குப் பால் புகட்டப் பாவிக்கும் போச்சியும் அதற்கான குடுவையையும் வாங்கினேன். அதற்குப் பக்கத்திலுள்ள தேனீர் கடையில் பால் என்று சொல்லி வெள்ளை நிறத் தண்ணீர் வாங்கினேன். நான் எப்போதும் பலசரக்குச் சாமான்கள் வாங்கும் திலகனின் கடையில் அகலப் பெட்டியொன்றை அதன் படுக்கைக்காகப் பெற்றேன். என்னுடைய பழைய சட்டைகள் அதன் மெத்தையாகின.

றொக்சிக்குப் பால் புகட்ட போச்சியை அதன் வாயில் நுழைக்க முயற்சித்தபோது ம்...கும் அது உள்ளே போக மறுத்தது. மனிதக் குழந்தைகளுக்காகத் தயாரிக்கப்பட்ட அது இந்தச் சிறிய ரக நாயின் ஒரு நாள் வயதுக் குட்டிக்கு உலக்கை போன்றிருந்தது. என்ன செய்வதென்று தலையைச் சொறிந்தபோது, சின்ன வயதில் அம்மா சொன்ன ஒரு விடயம் ஞாபகத்துக்கு வந்தது. எங்கள் பெரியண்ணன் பிறந்தபோது முலைப்பால் குடிக்க மறுத்து விட்டாராம். அப்போதெல்லாம் அம்மா தன்னுடைய பாலை எடுத்து சுத்தமான வெள்ளைத் துணியைத் திரித்து அதில் நனைத்து அண்ணனின் வாயில் வைப்பாவாம்.

அம்மாவின் உத்தியைப் பின்பற்றினேன். றொக்சியும் பால் தோய்த்த வெள்ளைத் துணியை ஆவலோடு சூப்பியது. வாயிலிருந்து துணியை பால் தோய்க்க விலக்கிய போது பால் தேடி எங்கெல்லாமோ வாயை நுழைத்தது.

சாமத்தில் நான் நல்ல உறக்கத்தில் இருக்கும்போது றொக்சியின் க்...வீக்... க்..வீக் என்ற இடைவிடாத சத்தம். "அடடா இது என்ன கஷ்டமடா" என்று நித்திரை கலைந்த சினத்தோடு அதனருகில் சென்று அசையும் பஞ்சுப்பொதியாக அதைப் பார்க்கும்போது எல்லாச் சினமும் விலகி ஒரு தாய்மையின் புல்லரிப்பு, உடலெங்கும் பரவும். ஆதரவான பாலூட்டலில் மீண்டும் அமைதியாகும்.

அது எப்போது கண் விழிக்கும் என்று ஆவலோடு எதிர் பார்த்திருந்தேன். ஒவ்வொரு காலையிலும் எழுந்ததும் முதலில் பார்ப்பது அதன் கண்களைத்தான்.

முதன் முதல் கண் விழித்து அந்தக் கரிய குண்டுக் கண்களால் என்னைப் பார்த்தபோது ஏற்பட்ட சந்தோசத்துக்கு அளவேயில்லை. சந்தோசத்தில் அதன் முன்னங் கால்களோடு உடம்பைப் பற்றித் தூக்கி என் முகத்துக்கு நேராக வைத்துப் பார்த்தபோது இமைகள் மூடாமல் என் முகத்தைப் பார்த்தது. 'நீதானா எனது அம்மா' என்று கேட்டிருக்குமோ?

அப்போது நான் தனியாகத்தான் சென்னையிலிருந்தேன். புத்தகங்கள் மட்டுமே துணையாக இருந்த என்க்கு இப்போது றொக்சியும்.

றொக்சியின் வீடாகப் பாவிக்கப்பட்ட அட்டைப் பெட்டியின் சுவர்கள் அதற்கு ஒரு பொருட்டாக இருக்கவில்லை. அதனை ஏறிப் பாய்ந்து வெளியே வந்து தன்பாட்டுக்கு வீடெல்லாம் விழுந்து விழுந்து நடந்தது. இரவில் தன் படுக்கை பிடிக்காமல் நான் நித்திரையானதும் என் கால்மாட்டைத் தன் படுக்கையாக்கிக் கொண்டது. சில நேரம் என் கால்களில் நசிபட்டு கீச்சிட்டதுமுண்டு.

மிகச் சில தடவைகள் அது தன் இயற்கைக் கழிவுகளை வீட்டினுள் கழிக்க முற்பட்டபோது நான் அதட்டி வெளியே கொண்டு போய் விட்டிருக்கிறேன். உள்ளே கழிக்கக் கூடாது என்பதை விரைவாகவே புரிந்துகொண்டு அந்த நேரங்களில் வெளியே ஓடும். சில நேரங்களில் கதவு சாத்தியிருந்தால் திறந்துவிடு என்பது போல் குரைக்கும்.



-சின்னத்தங்கச்சி

மிக வேகமாக வளர்ந்தது றொக்சி. குழந்தையின் வளர்ச்சி பார்த்து பொங்கும் ஒரு தாயின் மனதுபோல என் மனமிருந்தது. மாலையில் அதனோடு அந்தக் குடியிருப்பைச் சுற்றி வருவதும் அதற்கு ஓட்டம் காட்டி விளையாடுவதும் மனதுக்கிதமான பொழுது போக்காகின.

றொக்சி வீட்டிலிருப்பதால் நான் எங்கு சென்றாலும் அதிக நேரம் தங்காது வந்து விடுவேன். அதனைத் தனியாக விட்டுப் போகும்போது என்னைத் தனியாக விட்டு விட்டுப் போகாதே என்பதுபோல் குரைக்கும். நான் திரும்பி வரும்போது அதன் சந்தோசத்தைப் பார்க்கவேண்டுமே! கதவைத் திறப்பதுதான் தாமதம் ஓடிவந்து என்மேல் தாவிக் குதிக்கும். பின்னர் அங்கும் இங்குமாக ஓடிவிட்டு மீண்டும் வந்து என் மேல் தாவும். நான் கதிரையில் அமர்ந்தால் என் மடியில் தன் மூஞ்சை நுழைக்கும். என் முகத்தை நக்க வரும். சிலநேரம் செல்லமாக என் முகத்தைப் பார்த்து குரைக்கவும் செய்யும்.

நான் வசித்த வீடு றொக்சியை வளர்ப்பதற்கு வசதிக் குறைவாக இருந்ததால் வேறொரு வீட்டுக்கு மாறினேன். புதிய வீட்டின் முன்பக்க வராண்டா கிறீல் யன்னல்கள் வைத்து அடைத்து அதற்குத் தனியாகக் கதவும் வைக்கப்பட்டிருந்ததால் றொக்சிக்கு அது வசதியான இடமாயிற்று.

எனது நண்பன் ஒருவனும் புதிய வீட்டில் என்னோடு வந்து சேர்ந்துகொண்டான். அவனும் பிராணிகள் வளர்ப்பதில் பிரியமுள்ளவன். வீட்டுக்கு வெளியே தனியான கூடுகள் அமைத்து புறாக்களும் வெள்ளை நிற முயல்களும் வளர்க்கத் தொடங்கினான்.

ஆரம்பத்தில் றொக்சி "விடு என்னை. அவற்றை எல்லாம் பிடித்துக் கொன்றுவிடுகிறேன்" என்பதுபோல் மூர்க்கத்துடன் மூசி நின்றது. ஒரு நாள் றொக்சிக்குப் பக்கத்தில் முயலையும் புறாவையும் வைத்துக் கொண்டு சொன்னேன், "இது எங்களுடையவை. இவற்றை நீ எதுவும் செய்யக் கூடாது" என்று. இப்படி நான் சொன்னதை யாராவது பார்க்க நேர்ந்தால் இந்த மனிதனுக்குப் பைத்தியமாக்கும் என்று நினைத்திருப்பார்கள். ஆனால் றொக்சி நான் சொன்னதைப் புரிந்து கொண்டது. அதற்குப் பின்னர் அது நிற்கும் வராண்டாப் பகுதிக்கு முயலோ, புறாவோ வந்தால் இது பேசாமல் ஒரு மூலையில் போய் இருந்துவிடும்.

சில நேரங்களில் எனக்குத் தெரியாமலே அது வெளியே உலாவப் போய்விடும். அது வீட்டிலில்லாததை உணர்ந்து நான் வீதியில் நின்று "றொக்சி" என்று கூப்பிட்டால் என் குரல் கேட்டது தான் தாமதம் பாய்ந்தடித்து ஓடி வரும். என்னை அண்மிக்கும்போது தான் சொல்லாமல் போனது தவறுதான் என்று சொல்வதுபோல் ஓட்டத்தை நிறுத்தி தலையைப் பதித்து மெதுவாகப் பதுங்கிப் பதுங்கி வந்து என்னைக் கடந்ததும் ஒரே பாய்ச்சலில் வீட்டுக்குள் ஓடி ஒளிந்துவிடும்.

என் வீட்டுக்கு அடிக்கடி வரும் ஒரு குடும்பத்தினருக்கு றொக்சி என்றால் மிகவும் விருப்பம். றொக்சியும் அவர்களைப் பார்க்கும் போதெல்லாம் ஏதோ தன் சொந்தக்காரர்களைப் பார்ப்பதுபோல் குதூகலத்துடன் வாலாட்டும், தாவிக் குதிக்கும். ஒருநாள் தங்கள் வீட்டுக்கு றொக்சியை அழைத்துச் செல்ல அவர்கள் விரும்பியதால் அனுப்பி வைத்தேன். ஒரு வாரம் தங்கள் வீட்டில் வைத்திருக்கிறோம் என்று சொல்லிக் கொண்டு போனவர்கள் அன்று மாலையே திரும்பக் கொண்டுவந்து விட்டார்கள். "என்ன உங்கட றொக்சி அங்க வந்ததிலயிருந்து ஒரே சோகமாயிருந்தது. எதை வைச்சாலும் சாப்பிடமாட்டேன் எண்டிட்டு இந்த வீட்டில எப்பிடியெல்லாம் துள்ளித் திரியிற றொக்சியா இது எண்டு நம்பமுடியாமலிருந்தது" என்றார்கள்.

எனக்குத் திருமணம் பேசியிருந்தது. எனக்கானவள் மதுரையில் குடியிருந்தாள். உத்தரவாதப் பத்திரத்துடன் காதலித்த காலமது. அதனால் இடையிடையே மதுரைக்குப் பறந்து விடுவேன். ஆயினும் ஒரு நாளுக்கு மேல் அங்கு தங்குவதில்லை. அப்போதெல்லாம் "என்னை விட உங்களுக்கு றொக்சி முக்கியமா?" என்று செல்லமாகச் சிணுங்கும் என்னவள், மறு வினாடி "ஒரு வாயில்லா ஜீவன் மேல் இவ்வளவு நேசம் வைத்திருக்கும் உங்களைப் பாக்க எனக்குப் பெருமையாத்தான் இருக்கு" என்று என் மனமெங்கும் பசுமை வளர்ப்பாள்.

வீட்டுக்கு வந்ததும் நண்பன் முறையிடுவான்: "என்னடா உன்ர றொக்சி நீ போனதிலயிருந்து சோர்ந்துபோயிருக்குது. சாப்பாட்டைத் தொட்டும் பாக்குதில்லை" என்பான்.

இப்படி ஓரிரு நாட்கள் அதனைப் பிரிந்து போய்விட்டு மீண்டும் வீட்டுக்கு வரும்போது றொக்சி என்னை ஆரவாரத்தோடு வரவேற்பதில்லை. இரண்டு தடவை வாலாட்டிவிட்டு மெதுவாக எழுந்து வந்து வேண்டா வெறுப்பாக என் மேல் ஒரு தாவல் தாவிவிட்டு மீண்டும் போய் படுத்துக் கொள்ளும். ஆனால் அடுத்த அரைமணி நேரத்தில் வழமைக்குத் திரும்பிவிடும்.

எனக்குத் திருமணமான புதிதில் றொக்சியை நான் பராமரிக்கும் விதத்தைப் பார்த்து ஆச்சரியப்பட்டு என் மனைவி என்னைக் கிண்டல் செய்வதுண்டு "பேசாமல் றொக்சியாகவே நானும் பிறந்திருக்கலாம்" என்று. ஆனால் என் மேலுள்ள நேசத்தில் நான் நேசிக்கும் றொக்சியை அவளும் நேசித்தாள். எங்களுக்கு மகள் பிறந்து வளரும்போது றொக்சி குரைப்பதும் அங்கிங்கு ஓடித் திரிவதும் அவளைச் சிரிக்க வைக்கும் சமாச்சாரங்களாக இருந்தன.

பொருளாதாரம் என்னும் அரக்கன் இந்த இனிமையான சூழல்களை விட்டு என்னை வெளிநாடு துரத்திவிட்டான். என் மனைவி எனக்கெழுதும் கடிதங்களில் மகளைப் பற்றியும் றொக்சியைப் பற்றியும் எழுத மறக்கமாட்டாள். சில நேரங்களில் றொக்சியைப் பற்றி எழுதும்போது உங்கள் மூத்த மகள் என்று குறிப்பிடுவாள்.

ஆரம்பத்தில் வந்த கடிதங்களில் றொக்சி சாப்பிடுதில்லை. சோகமாகப் படுத்த படியே இருக்கு என்ற வரிகளே அதிகம் காணப்பட்டன. போகப்போக றொக்சி சமாதானமாகி வழமைக்குத் திரும்பி விட்டதை உணரக்கூடியதாயிருந்தது.

மனைவியையும் மகளையும் றொக்சியையும் புகைப்படம், வீடியோ இவற்றின் மூலம் பார்த்து மகிழ்ந்தேன். மாதத்திற்கு இரண்டு மூன்று தடவைகள் மனைவியும் மகளும் தொலைபேசிக் கூடங்களிலிருந்து என்னோடு தொலைபேசியில் கதைப்பார்கள்.

மூன்றரை வருடங்களின் பின்னர் எங்கள் வீட்டுக்கு தொலைபேசி இணைப்புக் கிடைத்தது. தொலைபேசி வந்த முதன் நாள் மனைவியுடன் கதைக்கும்போது றொக்சியைக் கூட்டிவந்து அதன் காதுக்குள் ஒலி வாங்கியை வைக்கும்படி சொன்னேன். அவள் அப்படியே செய்ய, நான் மென்மையாக "றொக்சி, றொக்சி" என்று கூப்பிட்டேன். மறு முனையில் றொக்சி குரைப்பது கேட்டது. என் மனதுக்குள் ஏதோ பிரவாகம் பெருக்கெடுத்ததைப்போல் உணர்ந்தேன்.

ஒலி வாங்கி என் மனைவியின் காதுக்குப் போனபோது "இப்ப றொக்சி என்ன செய்யுது?" என்று கேட்டேன்.

"அதை ஏன் கேக்கிறியள்? உங்கட குரலைக் கேட்டது அதுக்குப் பெரிய சந்தோசம் போல பயங்கரப் புழுகத்தோட இஞ்சையும் அங்கையும் ஓடித்திரியுது" என்றாள்.

# முட்களின் வசந்தம்


**விஜய்** 10ஆம் ஆண்டு படிப்பவன். படிப்பில் மிகுந்த ஆர்வம், நன்றாகப் படிப்பான். ஆனால் படிப்பதற்கான வசதிதான் குறைவு. விஜயின் தந்தை மேசன் வேலை செய்துதான் குடும்பத்தைப்பார்த்துவந்தார். மேசன்வேலையில் கிடைக்கும் பணம் குடும்பத்தின் அன்றாட செலவுக்கே போதாது. ஆனாலும் தன் மூன்று பிள்ளைகளான விஜய், சேகர், பிரணதியை கடைசிவரைக்கும் படிப்பிப்பது என்ற உறுதி மட்டும் அவரிடம் மேலோங்கி நின்றது. அதற்காகக் கிடைத்த வேலைகளையெல்லாம் செய்தார். மழை, வெயில் பாராமல் தூக்கம் மறந்து, பசி மறந்து, கஷ்டப்பட்டு உழைத்தார். இடையிடையே சுகயீன முற்றும் இருந்தார். ஆனாலும் வேலைக்குப்போய்விடுவார். தான் ஒரு நாள் வேலைக்குப்போகாவிட்டாலும் தன் குடும்பம் பட்டினி கிடக்கநேரிடும், பிள்ளைகளின் படிப்பு பாதிக்கப்படும் என்றுதான் நினைத்தாரே தவிர, தன்னைப்பற்றி கவலைப்பட்டதேயில்லை. ஒரு நாள் விஜய் பாடசாலை விட்டு வீடு வந்தான். வீட்டில் அம்மா அழுதுகொண்டிருந்தாள். ஓடிச்சென்று தாயின் கன்னங்களைத்துடைத்து ஏன் அம்மா அழுகிறாய்? என்றான். அழுதுகொண்டே தாயும் "ஏன்தான் அந்த கடவுள் நம்மள இப்படிச் சோதிக்கிறானோ" என்றுவிட்டு, மத்தியானம் உங்க அப்பா சாப்பிட வந்தாரு. வரும்போதே நெஞ்சுக்குள் வலிப்பதாக கூறினார். நானும் "சாப்பிட்டவுடன் வேலைக்குப் போகாம கொஞ்சநேரம் படுங்க" என்றேன். சரி யென்றுவிட்டு சாப்பிட இருந்து, சாப்பிட்டுக்கிட்டு இருக்கும்போதே நெஞ்சு வலி அதிகரிக்க நெஞ்சப் பிடிச்சுக்கிட்டே விழுந்திட்டாரு. அப்புறம் பக்கத்து வீட்டு அண்ணன் உதவியோடுதான் பெரியாஸ்பத்திரிக்குக் கொண்டுபோனோம். அங்கு அப்பாவை வார்ட்டில் வைத்திருக்கிறார்கள் என்று கூறிவிட்டு, விஜயிடம் உன் தம்பியும், தங்கையும் இன்னும் பள்ளிவிட்டு வரல, வந்ததும் நீங்க மூனுபேரும் இருந்து சாப்பிடுங்க. நான் அப்பாவுக்குத் தேவையான சாமான்களை எடுத்துக்கிட்டு ஆஸ்பத்திரிக்குப் போயிட்டு வாரன் என்றாள் அம்மா. விஜயோ இப்ப நாங்களும் வாரமே அம்மா என்றான். இப்ப தேவையில்லை பின்னேரம் போகும்போது போகலாம் என்று விட்டுப் புறப்பட்டாள் விஜயின் தாய்.

பின்னேரம் தாயோடு விஜயும், சேகரும், பிரணதியும் சென்றார்கள். அங்கு அப்பாவுக்கு சேலன் ஏற்றப்பட்டிருந்தது. மயக்கம் தெளிந்திருந்தது. ஆனால் எதுவும் பேசமுடியவில்லை. அப்போது செக்கப்புக்காக வந்த பெரிய டாக்டர் விஜயின் அம்மாவை அழைத்துப் பேசினார். உங்க கணவர் உடம்புக்குள் வலிகளையும் நோய்களையும் வைத்துக்கொண்டு ஓய்வில்லாமல் வேலை செய்திருக்கிறார். அதனால் அவருடைய இதயம் மிகவும் பலவீனமாக இருக்கிறது. ஒரு மூன்று நான்கு வருடங்களுக்கு அவரை எந்தவொரு பாரமான வேலையையும் செய்யவிடாதீர்கள். கொஞ்ச நாளைக்கு எந்த வேலையும் செய்யாமல் தொடர்ந்து ஓய்வெடுக்கச் சொல்லுங்கள், அப்படி இல்லா விட்டால் அது அவருடைய உயிருக்கே ஆபத்தாகிவிடும். இன்னும் ஒரு வாரம் மட்டில் வாட்டில் இருக்க வேணும் பிறகு டிக்கட் வெட்டி வீட்டுக்குக் கூட்டிப்போகலாம். நான் சொன்ன எதையும் மறக்காதீங்க என்றுவிட்டு டாக்டர் போய்விட்டார். தன் செலவுக்கு கணவர் கொடுக்கும் பணத்தில் சிறுகச் சிறுக எறும்பு சேர்ப்பதுபோல் சேர்த்துவைத்ததையெல்லாம் ஆஸ்பத்திரிச்செலவில் போய்விட்டது. ஆஸ்பத்திரியில் இருந்து கணவரும் வீட்டுக்கு வந்துவிட்டார். அவருக்கு நல்ல சாப்பாடு செஞ்சு கொடுக்கவும் கையில் காசு இல்லை யோசித்துக்கொண்டே தாம் வழமையாக கடனுக்குச் சாமான் எடுக்கும் கடைக்குப்போய் தன் நிலமையை கூறி, பத்து நாளைக்கு சாமான் தாங்க, அவர் வேலைக்குப்போக ஆரம்பிச்சதும் கடனைத்திருப்பித்தந்துவிடுகிறேன் என்று கூறி சாமானும் வாங்கி வந்தாள். இந்தச் சந்தர்ப்பத்தில் விஜயின் மாமா முறையானவர் மயில்வாகனம் கொழும்பில் நகை வேலை செய்பவர், விஜயின் அப்பாவைப் பார்ப்பதற்காக வந்திருந்தார். அவர் விஜயின் அம்மாவோடு பேசுகையில் "இன்னும் எத்தனை நாளைக்கு இப்படி கடனை வாங்கி வாழ்க்கையை ஓட்டப் போற" பேசாம உன் மூத்தவன என் கூட அனுப்பிவை. எனக்கும் வேலைக்கு ஒரு ஆள் தேவை. உனக்கும் மாசாமாசம் ஒரு தொகைப் பணம் அனுப்புறன். அவனும் வேலை பழகின மாதிரியும் இருக்கும் உன் குடும்பக் கஷ்டம் குறஞ்ச மாதிரியும் இருக்கும் என்ன சொல்ற என்றார். அதை அவனிடமே கேளுங்கள் என்றாள் விஜயின் தாய். அவரும் விஜயைக் கூப்பிட்டு நீ படிச்சு முடிச்சு வேலைசெய்கிறதாக இருந்தால் இன்னும் எத்தனை வருடங்கள் போகும். அதுமட்டுமல்லாம படிச்சு முடிச்சதுமே வேலை கிடைச்சிடுமா? உங்க அப்பா வேலைக்குப் போவதற்கும் இன்னும் கொஞ்சக் காலம் எடுக்கும்.

அதுவரைக்கும் உன் குடும்பத்தோட நிலமையைபற்றி யோசிச்சிப்பாரு என்றார். அனைத்தையும் கேட்டு விட்டு எதுவும் பேசாமல் அங்கிருந்து புறப்பட்டான் விஜய். இப்படியாக ஒரு வாரம் விஜயின் மௌனத்தோடே கழிந்தது. வழமைபோல் விஜயின் தாய் கடைக்குச் சாமான் வாங்கச்சென்றாள். கடைக்காரரோ, அக்கா இப்பவே கடன்காசு நாலாயிரத்தைத் தாண்டிவிட்டது. தொடர்ந்து சாமான் தந்துகிட்டு இருக்கிற அளவுக்கு நானொன்றும் அவ்வளவு பெரிய கடையும் நடத்தவில்லை, அதனால காச கொஞ்சம் கொஞ்சமாகவாவது தந்து முடித்துவிட்டு பிறகு சாமான் எடுங்கள் என்றார். ஆமாம் என்றவாறு தலையை அசைத்து விட்டு வந்தாள். என்னசெய்வது என்று தெரியாமல் வீட்டுக்கு வந்து அடுக்கி இருந்த பானைகளில் ஒன்றை எடுத்தாள். அதற்குள் இருந்த குறுநெல் அரிசியில் உப்புக்கஞ்சி காய்ச்சினாள்.

பள்ளி விட்டு வரும் பிள்ளைகளின் பசியாவது போக்குமே. விஜயும் அவனது தம்பி சேகரும் பள்ளிவிட்டு வந்து கஞ்சி குடித்துக் கொண்டிருக்கும்போது, சேகர் அம்மாவிடம் கேட்டான், அம்மா அண்ணா படிக்கவேனும் என்று ஆசைப்படுகிறான் அதனால மாமாவோட நான் வேலைக்குப்போகிறேனே என்றான். உடனே சேகரைப் பார்த்து அழுதபடியே விஜய் சொன்னான்; இப்ப எனக்கு படிக்கவேனும் என்ற ஆசையை விட உங்களையெல்லாம் நல்லபடியா பார்த்துக்கவேனும் என்ற ஆசைதான் அதிகமாக இருக்கு. அதனால நானே வேலைக்குப்போறதா முடிவு பண்ணிட்டன் என்றான். இரண்டு நாட்களில் விஜய் மாமாவோடு கொழும்புக்குப் புறப்பட்டான். அதன் பிறகு மாதா மாதம் விஜயின் மாமாவும் பணம் அனுப்பினார். விஜய் குடும்பத்தின் பட்டினிகுறைந்தது; வறுமையும் குறைந்தது. நாளடைவில் சேகரும் அதே வேலைக்குச் சென்றான். ஐந்து வருடங்களில் விஜய், சேகர் இருவரும் முழுமையாக வேலை பழகி மாமாவின் உதவியோடு தனித்தனியே வேலைசெய்ய ஆரம்பித்தார்கள். இருவரும் வறுமையை முழுமையாக அனுபவித்தவர்கள் அல்லவா, அதனால் தம் குடும்பத்தை ஒரு நல்ல நிலைக்குக் கொண்டுவர ரொம்பவும் கஷ்டப்பட்டு உழைத்தார்கள். விஜயும், சேகரும் தாங்கள் இடையில் விட்ட படிப்பை தங்கள் தங்கையைப் படிப்பிப்பதன் மூலம் முழுமைபெறச் செய்வது என்பதில் உறுதியாக இருந்தார்கள். அவளும் மிகச்சிறப்பாகவே படித்து மருத்துவ பீடத்தில் பல்கலைக்கழகம் சென்றாள். விஜயின் தந்தைக்கு வீட்டோடு ஒரு சில்லறைக்கடை போட்டுக்கொடுத்தார்கள். அவரும் அதை சிறப்பாக நடத்திச் சென்றார்.

கொஞ்சம் கொஞ்சமாக வீட்டையும் உடைத்து பெரிதாக கட்டி முடித்தார்கள். ஒரு நல்ல நிலைக்கு உயர்ந்தது விஜய் குடும்பம். தொடர்ந்து விஜயை மாப்பிள்ளை கேட்டு வரத்தொடங்கினார்கள். அனைத்தையும் தட்டிக்கழித்தான். தன் தங்கையின் மருத்துவப்படிப்பு முடியும் வரை தான் திருமணம் செய்யப்போவதில்லை என்பதில் உறுதியாக இருந்தான். விஜயின் தங்கை பிரணதியும் மருத்துவப் படிப்பை முடித்து டாக்டராக வெளியேறினாள். அதன் பின்னர்தான் விஜய் தன் திருமணம் தொடர்பாக தாய், தகப்பன், தம்பி, தங்கை அனைவரோடும் முதன்முறையாக பேசினான். தன் தொழில் குருவும் மாமாவுமான மயில்வாகனத்தின் மகளைத் தான் திருமணம் செய்ய விரும்புவதாக கூறினான். உங்கள் எல்லோருக்கும் இதில் சம்மதம் என்றால் மாமாவோடு பேசுங்கள். வரதட்சணை அது இது என்று ஒருசதம் கூட வேண்டவே வேண்டாம் என்றான்.



-வ.சந்திரபிரசாத்,
மாமாங்கம்.

விஜயின் தாயும் நீ இப்படியொரு முடிவு எடுத்ததில் எங்க எல்லோருக்கும் ரொம்பவே சந்தோசம். அவர் நம்ம குடும்பத்துக்கு செய்த உதவிக்கு எப்படி நன்றிக்கடன் தீர்ப்பது என்றிருந்தேன். உன் இந்த முடிவு எங்களுக்குச் சந்தோசமாகவும் பெருமையாகவும் இருக்கிறது என்றாள். விஜயின் மாமாவோடும் பேசினார்கள் அவரும் மிகுந்த மகிழ்ச்சியோடு சம்மதித்தார். பெரியோர்களின் ஆசீர்வாதத்துடன் விஜய் திருமணம் இனிதே சிறப்பாக நடந்தேறியது. விஜய் அவன் மனைவி, தாய், தகப்பன், தம்பி சேகர், தங்கை பிரணதி எல்லோரும் சந்தோசமாக வாழ்ந்தார்கள். இந்தக் குடும்பம் பட்ட கஷ்டத்துக்கு இப்ப அந்தக்கடவுளாப் பார்த்து இவர்களை நல்ல படியாக வாழ வச்சிருக்கான் என்று அந்த ஊரே சொல்லுமளவுக்கு நல்ல சிறப்பாக வாழ்ந்தார்கள்.

உண்மைச் சம்பவம்

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்

## சிந்தித்துப் பார்க்க...

# குறள் சொல்லும் வாழ்க்கைத் தத்துவம்

சாதிக்க முடியாதவைகளைக் கூட பிறக்குச் சொல்வதிலேயே மனிதன் தனக்குள்ளேயே பெருமைப்பட்டுக் கொள்கிறான். ஆனால், அவனால் அதைச் செயல்படுத்த முடியுமா? என்றால் இல்லை என்றே பதில் கிடைக்கும். தன்னால் செய்யமுடியாதவைகளை மற்றவன் மேல் சுமத்தி மகிழ்கின்ற மனிதன் ஏன்? எப்படி? என்னும் கேள்விகளைத் தனக்குதானே கேட்டுக் கொண்டால்......


*"சொல்லுதல் யார்க்கும் எழிய அரியவாம்*
*சொல்லிய வண்ணம் செயல்"*

இப்படி செய்யலாம் என்று சொல்வது யாவர்க்கும் எழிதான செயல் ஆனால் அதைச் செய்ய முற்படுவனுக்குத்தான் அதன் கடினம் தெரியும் செயலாற்ற முடியாததைச் சொல்வதில் சொல்லாதிருப்பது மேல்.

# நாளைய உலகம் நம் கையில்

**அன்று** கொலு மண்டபத்தில் அமர்ந்திருந்தவர்களின் முகங்களில் தோன்றிய வாட்டம் வழக்கத்துக்கு மாறாகக் காணப்பட்டபோது, ஏதோ நடக்கக் கூடாததொரு நிகழ்வு நடந்திருக்கிறது என்பதை ஊகிக்கக் கூடியதாக இருந்தது. அதனால்தான் அரசரின் முகத்திலும் கடுமை தெரிகிறது. என்னவாயிருக்கும்? என்ற கேள்வி அருள்வர்மனின் மனதில் தோன்றி மறைந்த மறுவினாடியே இளவரசனின் கேள்விக்கணை அரசரை நோக்கிப் பறந்தது.

"தந்தையே! எங்கள் ஜென்ம விரோதியான வன்னியன், எம்மைச் சூழ்ந்திருக்கும் அந்நியர்களோடு உறவுவைத்துக் கொண்டிருக்கிறான் என்பது பழங்கதை தான். இருப்பினும், எம்மைச் சூழ்ந்திருக்கும் அந்நியர்களால் இதுவரை எமக்குப் பங்கம் நேர்ந்ததில்லை என்பதும் தாங்கள் அறியாததல்ல எனினும் அயலவர்கள் வன்னியனின் கைக் கூலிகளாக மாறிவிட்ட பின்னும் நாம் அவர்களை அலட்சியம் செய்வது புத்திசாலித்தனமாகாது என்பதே எனது தாழ்மையான கருத்து" என்று முடிப்பதற்குள்; மந்திரியாரின் முறுவல் அவனைச் சற்றுத் தடுமாறவைத்தது என்ன சொல்லப் போகிறார் என்ற எண்ணத்தில் மந்திரியாரின் பக்கம் பார்வையை ஓட விட்டான். இதுவரை அமைதியாக இளவரசனின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த சபையோரின் கவனம் மந்திரியார் என்ன சொல்லப்போகிறார் என்பதிலேயே குறியாக இருந்தது. ஆனால், மந்திரியார் புன்முறுவலோடு முடித்துக்கொண்டது, சபையிலிருந்தவர்களுக்கு வியப்பாக இருந்ததுமட்டுமல்ல, ஏமாற்றமாகவுமிருந்தது.



"மந்திரியாரே!" என்று மன்னர் அழைத்ததும் சபையோரின் கவனமெல்லாம் மன்னர் பக்கம் திரும்பியது. அழைப்போடு நிறுத்திக் கொண்ட மன்னனை நிமிர்ந்து பார்த்த மந்திரியின் முகத்தில் "கூறுங்கள் மன்னா" என்பதுபோல் ஒரு சாயல் தோன்றி மறைய "ஏன் நிறுத்திவிட்டீர்கள்? ஏதும்

## தருவது கற்பகன்

ஐயம் இருந்தால் கேட்கலாமே" என்றவரின் முகத்தில் தோன்றிய மகிழ்ச்சி ரேகைகள் அனைவருக்கும் உற்சாகத்தைத் தந்தது.

"ஒன்றுமில்லை மன்னவா! இளங்கன்று பயமறியாது" என்று ஓர் முதுமொழி உண்டு. இளவளின் நோக்கமெல்லாம் எதிரியின் அழிவை நோக்கம் கொண்டதுதான் என்பது அவரின் துடிப்பான வார்த்தையிலிருந்தே தெரிகிறது. ஆயினும்.... என்று முடிப்பதற்குள், "தந்தையே! மந்திரியாருக்கு என் வீரத்தில் நம்பிக்கை வருவதென்றால், நான் களமிறங்கித்தான் ஆகவேண்டும். "இல்லையேல், நான் காலம் முழுவதும் கோழையாகவே வாழ்ந்துவிடுவேன் போலிருக்கிறதே!" என்று சலித்துக் கொண்டான்.

அரசருக்கோ பெருமிதம் தாழவில்லை. ஆயினும், எதிரியின் பலம் பற்றி அவர் நன்கறிவார். அதனாலோ என்னவோ "இளங்கன்று பயமறியாது என்பது இவ்விடத்துக்குப் பொருத்தமானதுதான் மந்திரியாரே" என்று கூறிக் கொண்டிருக் கையில் அருள்வர்மன் சபைக்குள் புகுந்தான். தளபதி அருள்வர்மனைக் கண்டதும் சபையில் ஓர் இனந்தெரியாத உற்சாகம் ஏற்பட்டது. அருள்வர்மனைக் கண்டதும் "வரவேண்டும் தளபதியாரே!" என்றான் இளவல்.

பதிலுக்கு ஓர் இளமுறுவலைச் சிந்தியவாறு "வணக்கம் இளவரசே" என்றவன், தொடர்ந்தான். "மன்னவா! படையெடுப்பு அவசரமில்லையாயினும், எதிரிகளின் கைக்கூலிகள் சிறுசிறு குழப்பங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். நம்மை அண்மித்திருக்கும் கைக் கூலிகளோடு ஒற்றர்களும் இருக்கிறார்கள் எனத் தகவல் கிடைத்திருக்கிறது" என்றான்.

"தளபதியாரே! எமது ஒற்றர்களின் திறமையில் சந்தேகம் வேண்டியதில்லை. எதற்கும் சற்று நிதானமாயிருக்க வேண்டிய நேரமது."

"மன்னிக்கவேண்டும் மன்னவா! நம் எல்லைப் புறத்தில் எதிரியின் துணைத் தளபதிகள் முகாமிட்டிருக்கிறார்கள். அவர்கள் மேலும் வலுப்பெறுவதற்கு இடமளிப்பது அவ்வளவு நல்லதாக இருக்காது என்பது எனது பணிவான கருத்து" என்று குழைந்தான் அருள்வர்மன்.

அவன் கூறி முடிப்பதற்குள் "தந்தையே! இதைத் தடுக்கவேண்டும். நமது படைகளில் ஒரு சிறுபகுதியையேனும் எல்லைப்புறத்தில் ரோந்து நடவடிக்கையில் அமர்த்த வேண்டும். அந்தப் பொறுப்பை என்னிடம் விட்டுவிடுங்கள்" என்று தனக்கே உரித்தான துடிப்போடு கூறினான் இளவல்.

மன்னர் தளபதியை நோக்கினார். அந்தப் பார்வையில் அப்படிச் செய்யலாமா? என்ற கேள்வி புதைந்திருப்பதைக் குறிப்பாலறிந்த தளபதி "ஆம் என்பது போல் தலை அசைத்தான்." அதையடுத்து மன்னரின் முகத்தில் இளையோடி மறைந்த புன்முறுவலிலிருந்து, இளவரசனின் வேண்டுகோளை அவர் ஏற்றுக்கொண்டார் என்பது தெளிவாயிற்று.

பேரிகை முழக்கத்தோடு தேரை விட்டிறங்கிய இளவலை, பணிப்பெண்கள் ஆராத்தி எடுத்தனர். ஆரவாரத்தோடும், வெற்றிப் பெருமிதத்தோடும் அரண்மனையை அடைந்த இளவல், தனது வெற்றியை தந்தையிடம் கூறிப் பாராட்டுப் பெறும் நோக்கோடு வீறு நடைபோட்டு நடந்தான். கொலுமண்டபம் அண்மித்துவிட்டது, மண்டபத்துக்குள் நுழைந்தவன் வெற்றிக்களிப்பின் மிகுதியால் மன்னருக்கு வழக்கமாகச் செய்கின்ற வணக்கத்தைக் கூட மறந்தவனாய் "தந்தையே! இவ்வளவு காலமும் நம் எல்லைப் புறத்தில் நடமாடிய ஒற்றர்கள் பிடிபட்டுவிட்டார்கள். எதிரிகளின் கைக்கூலிகளாக இருந்து எமக்குத் தொல்லை கொடுத்தது இவர்கள்தான் என்பதை எமதொற்றர்கள் ஊர்ஜிதம் செய்துவிட்டார்கள். நான் சென்ற பயணம் வெற்றிகரமாக முடிந்தது" என்று முழங்கினான்.

இதைக் கேட்ட மன்னரின் முகத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படாததைக் கண்டு, சற்றுக் குழப்பமடைந்த இளவல், சமாளித்துக் கொண்டு "பிடிபட்ட கைதிகளுக்குத் தண்டனை வழங்குவது.." என்று முடிக்கு முன்பே "ஒற்றர்களின் கைக் கூலியாக இருப்பவர்களில் பலதரப்பட்டவர்கள் இருப்பார்கள். அதில் உன்னிடம் பிடிபட்டவர்கள் எத்தகையவர்கள் என்பதைப் பொறுத்துத்தான் தண்டனை. வஞ்சக நோக்கமில்லாமல் வறுமையால் வழிதவறிப் போனவர்களாக இருந்தால் அவர்கள் மன்னிக்கப்பட வேண்டியவர்கள். அவர்களுக்கு வாழ வழிசெய்து கொடுப்பதே அவர்களுக்கான தண்டனை" என்று முடித்தார்.

இதைக் கேட்டதும் இளவல் பெரிதும் கலங்கி விட்டான். ஆயினும் அதை வெளியில் காட்டிக் கொள்ளாதவனாய் மெதுவாக தனது மாளிகையை நோக்கி நடக்கத் தொடங்கினான்.

அருள்வர்மன் விழுப்புண் பட்டு வைத்தியரின் மனையில் இருப்பதாக மன்னர் கேள்வியுற்றதும் பெரிதும் கலங்கிவிட்டார். உடனடியாக அவனைக் காணவேண்டும் என்ற எண்ணம் அவர் நடையைத் துரிதப்படுத்தியது. அருள்வர்மன் இருந்த கூடத்தை அடைந்தபோது, அருள்வர்மன் கட்டிலில் அமர்ந்திருப்பதைக் கண்டார் அதன் பின்தான் சற்று ஆறுதலாக இருந்தது.

அரசரைக் கண்டவுடன் அருள்வர்மன் தலையைக் கவிழ்ந்துகொண்டான். அரசரை நேருக்கு நேர் பார்ப்பதற்கு வெட்கப்பட்டவன் போலிருந்தது.

இதைக் கண்டதும் அரசரின் புருவங்கள் "என்ன நடந்தது?" என்பதுபோல் சுருங்கி நிமிர்ந்தன. அருள்வர்மன் சொல்லத் தொடங்கினான்.

"அரசே! நான் சென்ற பகுதி எதிரிகளின் முக்கிய தளமாக இருக்கும் என்று நான் எண்ணவில்லை. எதிரிகளின் தாக்குதல் பலம்பெற்ற போதுதான் அது தளபதிகளின் பாசறை என்பதை ஊகிக்க முடிந்தது. இருந்தும், எங்கள் பரம எதிரிகளில் ஒருவனான புலிகேசியை உயிரோடு கைது செய்துவிடவேண்டும் என்று, எடுத்த முயற்சிகள் பயனற்றுப் போய்விட்டன. எங்கள் வீரர்களும் களைப்படைந்து விட்டார்கள். உயிரைப் பணயம் வைத்தாவது அவனைப் பிடிக்க முடியாமல் போய்விட்டதே என்பதை நினைக்கும் போதுதான் என்னால் ஜீரணிக்க முடியாததாயிருக்கிறது" என்று வருந்தினான்.

இதைக் கேட்ட மன்னரின் முகத்தில் தெரிந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. கட்டிலில் அமர்ந்திருந்த தளபதியை வாரி மார்போடு அணைத்த மன்னன், "நீ தளபதி ஒருவனைக் கைதுசெய்யப் போரிட்டாய் என்பது போற்றுதற்குரியது. உன் துணிவு போற்றுதற்குரியது. தோல்வி வெற்றியின் முதற்படி. அதையிட்டுக் கலங்காதே! "என்றார். அவர் கண்களிலிருந்து அருவியாக ஓடியது ஆனந்தக் கண்ணீர்" என்பதைச் சொல்லித்தான் தெரிய வேண்டுமா?

*"கான முயல் எய்த அம்பினில்*
*யானை பிழைத்த வேலேந்தல் இனிது."*

---

சிவராத்திரி அன்று என்ன செய்தீர்கள்?

-பி.ரஞ்சினி, வட்டவளை.

நீண்ட காலத்தின் பின் நண்பரின் அழைப்பின் பேரில் நகுலேஸ்வரம் சென்று அலைகளின் தாலாட்டில் இரவு முழுவதும் மெய் மறந்து இருந்தேன்.

**அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் இவ்வாரம் இந்தியாவுக்கு விஜயம் செய்வது குறித்து தங்கள் கருத்து?**

-யு.எல்.ரிபாஸ், மாவனல்ல.

உலக வல்லரசு, பிராந்திய வல்லரசுடன் இணைந்து ஈராக் விவகாரத்துடன் மாங்காய்த் தீவின் பிரச்சினையையும் அலசுவார்கள் என எதிர்பார்க்கலாம்.

**"சிவாஜி"யில் ரஜினியுடன் சானியா மிர்ஸாவை நடிக்க வைக்க சங்கர் எடுத்த முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்து விட்டனவே, ஏன்?**

-எஸ்.சதீஸ், நெல்லியடி.

டென்னிஸ் ஸ்டாருக்கும், சூப்பர் ஸ்டாருக்கும் பொருந்தி வராது பாருங்கோ.

## சிந்தியா பதில்கள்

**இன்றைய இலக்கியங்களின் வரவு குறைவாக இருக்கிறதே, என்ன காரணம்?**

-மணிவேல் ருத்ரா, சின்ன செல்வகந்த.

இலக்கியத் தேடல்கள் அரிதாகிவிட்டது. ஓர் காரணமாக இருக்கலாம்.

**சோகங்களை மனதிற்குள் மூட்டை கட்டி வைப்பவர்கள் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?**

-எஸ்.சுதர்ஷினி, மாங்கேணி.

ஒழுங்காக அடுக்கி வைக்கத் தெரியாதவர்கள்.

**றோஸ்ட் சிக்கன் - டெவல் சிக்கன் - சிந்தியாவின் தெரிவு எது?**

-எம்.அனீஸ், மூதூர் -02

உஷ்........... பறவைக் காய்ச்சல் பீதி ஓயட்டும், சொல்கின்றேன்.

**ஜெனீவா பேச்சு யாருக்கு வெற்றி? அவர்களுக்கா? இவர்களுக்கா?**

-வி.வினோ, வவுனியா.

தற்காலிக வெற்றிதான். அதுவும் மக்களுக்கு. அது சரி வினோ, அவர்கள் யார்? இவர்கள் யார்?

**இலங்கை கிரிக்கெட் அணியின் உப தலைவர் பதவி முரளிதரனுக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்த்தேன். ஏமாற்றி விட்டார்களே?**


-சி.பிரேம்குமார், கண்டி.

சாதனை நாயகர்கள் பதவிக்காகக் காத்திருப்பதில்லை. கடந்த 28ஆம் திகதி பங்களாதேஷில் நடைபெற்ற இலங்கை - பங்களாதேஷ் அணிகளுக்கிடையேயான டெஸ்ட் போட்டி முரளிதரனுக்கு 100ஆவது போட்டியாகும். அந்த வகையில் 100ஆவது டெஸ்ட் விளையாடும் இரண்டாவது வீரர் என்ற பெருமை முரளிக்குக் கிடைத்துள்ளது. முதல் வீரர் சனத் ஜெயசூரியா. அதுமட்டுமல்லாமல் கிரிக்கெட் உலகில் டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளில் மொத்தம் ஆயிரம் விக்கட்டுக்களை வீழ்த்தப்போகின்ற முதல் வீரராக முரளி திகழப் போகின்றார். இதற்கும் அப்பால் குட்டி சுழற்பந்து வீச்சாளர் ஜூனியர் முரளியும் கிடைத்தது முரளிக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. உங்களுக்கு எப்படி?

**ஜெனீவா சென்ற புலிகளின் குழுவினர் எப்போது நாடு திரும்புவர்?**

-கா.பிறேமலதா, செட்டிகுளம்.

ஷொப்பிங் முடிந்ததும். இந்தப் பதிலை ஆலோசகரின் பாணியில் நான் சொல்லவில்லை.



**அமைச்சர் பேரியல் அஷ்ரப் ஜெனீவாப் பேச்சுவார்த்தைகளில் அரச தரப்புப் பிரதிநிதியாகக் கலந்துகொண்டதை மு.கா. தலைவர் தவறு என்று விமர்சிக்கிறாரே, அது சரிதானா?**


-எம்.எம்.கமால்தீன், ஏறாவூர்.

அவரே செய்கிறபோது சரியாகத் தெரிந்தது. அதையே இன்னொருவர் செய்கிறபோது தவறாகத் தெரிகிறது. எல்லாம் அரசியல் தப்புத்தாளங்கள்.

**கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில வார இதழில் இலங்கையின் எப்பகுதிக்கும் செல்வதற்கு ஹெலிக்கொப்டர் வாடகைக்கு விடப்படுவதாக ஒரு விளம்பரத்தினை தனியார் வான் சேவை நிறுவனம் பிரசுரித்துள்ளதே அந்த சேவையினை நாமும் பெற்றுக்கொள்ள முடியுமா?**

-சிவகணேசன், கொட்டாஞ்சேனை.

தாராளமாகப் பெற்றுக்கொள்ளலாம். என்ன ஒரு பயணத்துக்கு சில லகரங்கள் கட்டணமாக அறவிடப்படும். பரவாயில்லையா?



**இலங்கையை எப்போதாவது சுனாமி தாக்கியதுண்டா?**

-பஸ்மினா பர்வின், கல்முனை.

2004 டிசம்பர் 26 அன்று எந்தப் பேரழிவும் நடைபெறவில்லை. 30 ஆயிரத்திற்கு மேற்பட்ட எவரும் அதற்குப் பலியாகவில்லை. ஐயாயிரத்துக்கு மேற்பட்ட எவரும் காணாமற்போகவும் இல்லை. இலங்கையின் கரையோரப் பகுதிகள் பாரிய அழிவுக்கு உட்படவுமில்லை. லட்சக் கணக்கான மக்கள் அகதியாக இன்றுவரையும் கூட இருக்கவும் இல்லை. அவ்வளவு ஏன்? 2005.12.26 அன்று எந்த நினைவு கூரல்களும் நடைபெறவில்லை. இப்படி எல்லாம் நினைத்துக்கொண்டிருக்க நான் என்ன அரசியல்வாதியா?

**நான் ஒரு தொழிலாளி. மண்வெட்டி பிடித்து விவசாயம் செய்யவும் தெரியும், ஏணி வைத்து ஏறி பெயிண்ட் அடிக்கவும் தெரியும், காக்கா பிடிக்காமல் சேவல் பிடிக்கவும் தெரி யும். என்னைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

-வே.வீரவாகு, சாமிமலை.

ஒன்று மட்டும் உண்மை. உங்களது வாக்கு நிச்சயம் நிராகரிக்கப்படப் போகிறது.

**நாட்டில் பாலியல் குற்றங்கள் மிக அதிகரித்து விட்டனவே, கட்டுப்படுத்துவதற்கு என்ன செய்யலாம்?**

-எச்.றூபன், வத்தளை.

ஒரே தீர்வு - நறுக்.

**இந்தியா சென்றுள்ள அகதிகள் மீளத் திரும்ப முடிகின்றது. வன்னிக்குச் சென்ற அகதிகள் மீளத் திரும்ப முடியவில்லையே?**

-ப.வசீகரன், மீசாலை.

அதுதான் ஜனநாயகத்திற்கும் ஏகப்பிரதிநிதித்துவத்திற்குமுள்ள வித்தியாசம்.

# ஸ்போர்ட்ஸ்

ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ்

## NCC க்கு வந்த சோதனை!



**அவுஸ்திரேலியர்கள்** தான் மற்றவர்கள் பந்து வீசுவதில், துடுப்பாடுவதில் பல விதமான பிழைகள் கண்டு பிடிக்கிறார்கள் என்று பார்த்தால், இப்போது, அவுஸ்திரேலியர்களிடமே பிழையைக் கண்டு பிடித்துள்ளது NCC எனும் கிரிக்கெட் தரப்படுத்தும் குழு ஒன்று. பெரிதாக ஒன்றுமில்லை.

அடம் கில் கிறிஸ்ட் அனேகமாக துடுப்பாடுவதற்கு பயன்படுத்தும் துடுப்பாட்ட மட்டை கொக்கபிரா எனும் நிறுவன தயாரிப்பாகும். இது மற்றைய துடுப்பாட்ட மட்டைகளை விட சற்று பாரம் கூடியது. அதுமட்டுமல்ல, இதில் விசேடமாக மேற்பரப்பில் ஒருவகையான வழுக்கும் தன்மையான ஒரு திரவம் பூசப்பட்டிருக்குமாம். இந்த மட்டையை பாவிப்பதால் தான் கில் கிறிஸ்ட்டுக்கு இப்படி விளாச முடிகிறது என்றும் இம் மட்டைகளை ICC தடை செய்ய வேண்டும் என்றும் கூறியிருந்தது.

அதுமட்டுமல்ல, அவுஸ்திரேலியர்கள் அனைவரும் கிட்டத்தட்ட இம்மட்டைகளையே பாவிக்கின்றார்கள் என்றும் கூறியிருந்தார்கள்.

இந்த வழக்கை பரிசீலித்த ICC, மட்டை இவர்களின் விளாசல்களுக்கு காரணமில்லை என்றும் இந்த மட்டையைப் பாவிப்பதற்கு தடை ஏதும் விதிக்க தம்மால் முடியாது என்றும் தெரிவித்ததையடுத்து விழித்துக் கொண்ட கொக்கபிரா நிறுவனம் NCC க்கு எதிராக மான நஷ்டம் கோரி வழக்கு ஒன்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது. சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தது போல் சரியாக ஆராயாமல் கூறிய பழியினால் இப்போது NCC எத்தனை கோடி ரூபாய்களை கொடுக்கப்போகிறதோ தெரியவில்லை.

மற்றுமொரு தகவல் என்னவென்றால் கிரிக்கெட் போட்டிகளில் பயன்படுத்தும் பந்து எப்போதும் கொக்கபிராவாக இருக்க வேண்டும் என்பது எழுதப்படாத சட்டமாக இருக்க வேண்டுமாம் என்பது குறிப்பிடத்தக்கது.

நடந்து முடிந்த இந்தியாவுக்கும் - பாகிஸ்தானுக்கும் இடையிலான ஹச் கிண்ணப் போட்டித் தொடர்களில் இந்திய அணி ஒரு நாள் போட்டித் தொடருக்கான கிண்ணத்தை வென்றெடுத்தது அனைவருக்கும் தெரிந்ததே! இத் தொடரில் முதல் 10 இடங்களில் வந்த துடுப்பாட்ட வீரர்களின் விபரங்களை ICC மூலம் அறியக் கிடைத்தது.

| பெயர் | அணி | ஓட். | சராசரி | உ.ஓட். | 100கள் | 50கள் | கட்ச் | ஸ்டம்பிங் |
|---|---|---|---|---|---|---|---|---|
| யுவராஜ் சிங் | இந். | 344 | 172 | 107 | 1 | 2 | 0 | 0 |
| ஷொகிப் மலிக் | பாக். | 314 | 62.8 | 108 | 1 | 2 | 3 | 0 |
| சச்சின் டெண்டுல்கர் | இந். | 237 | 59.25 | 100 | 1 | 1 | 0 | 0 |
| தோணி | இந். | 219 | 50.00 | 77 | 0 | 3 | 8 | 0 |
| ராகுல் ட்ராவிட் | இந். | 205 | 41.00 | 59 | 0 | 3 | 5 | 0 |
| யூனுஸ் கான் | பாக். | 189 | 63 | 81 | 0 | 2 | 0 | 0 |
| சல்மான் பட் | பாக். | 114 | 28.5 | 101 | 1 | 0 | 1 | 0 |
| மொகமட் யூனுஸ் | பாக். | 111 | 22.2 | 67 | 0 | 1 | 1 | 0 |
| இன்ஷமாம் உல் ஹக் | பாக் | 110 | 22 | 49 | 0 | 0 | 1 | 0 |
| அப்துல் ரசாக் | பாக். | 107 | 26.75 | 64 | 0 | 1 | 0 | 0 |


## சானியா தொடர்ந்தும் அதே இடத்தில்

**புதுடில்லி** சர்வதேச டென்னிஸ் தர வரிசையில் சானியா மிர்சா தொடர்ந்தும் 36 ஆவது இடத்தில் இருக்கிறார். செரினா வில்லியம்ஸ் 46ஆவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளார்.

டபிள்யூ.டி.ஏ. டென்னிஸ் புதிய தரவரிசை பட்டியல் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் இந்தியாவின் நம்பிக்கை நட்சத்திரம் சானியா மிர்சா எந்த முன்னேற்றமும் பெறவில்லை.

துபாய் ஓபனில் காயத்துடன் விளையாடி முதல் சுற்றிலே தோற்ற இவர், 537.75 புள்ளிகளுடன் 36 ஆவது இடத்திலே நீடிக்கிறார். வலது முழங்கை காயம் இன்னும் முழுமையாக குணமடையாததால் டோகா ஓபனில் பங்கேற்காத சானியா, அடுத்த வாரம் அமெரிக்காவில் துவங்கும் இண்டியானா வேல்ஸ் தொடரில் மீண்டும் களமிறங்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அசைக்க முடியாத வீராங்கனையாகத் திகழ்ந்த அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் படுபாதாளத்தை நோக்கிப் பயணம் செய்து கொண்டிருக்கிறார். காயம் காரணமாக சமீபகாலமாக எந்தத் தொடரிலும் பங்கேற்காத இவர், 448 புள்ளிகளுடன் 46 ஆவது இடத்திற்கு தள்ளப்படுள்ளார். இவரது சகோதரியான வீனஸ் வில்லியம்ஸ் 1493 புள்ளிகள் பெற்று 10 ஆவது இடத்திலிருக்கிறார். காயம் காரணமாக மூன்று ஆண்டு இடைவெளிக்குப் பிறகு களமிறங்கும் சுவிற்சர்லாந்தின் மார்டினா ஹிங்கிஸ் மடமட வென முன்னேறி வருகிறார்.



துபாய் ஓபனில் காலிறுதி வரை முன்னேறியதன் மூலம் 50 ஆவது இடத்திலிருந்து 44 ஆவது இடத்தை பிடித்துள்ளார். தற்போது ஹிங்கிஸ் 495 புள்ளிகள் பெற்றுள்ளார். விரைவில் இவர் முதல் 10 இடத்திற்குள் வந்து விடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. முதல் மூன்று இடங்களில் எந்த மாற்றமும் இல்லை.

பெல்ஜியத்தின் கிம் கிளைஜஸ்டர்ஸ் (3,566 புள்ளி) முதலிடத்திலும் பிரான்சின் மெலி மவுரிஸ்மொ (3,402) இரண்டாவது இடத்திலும், அமெரிக்காவின் டேவன் போர்ட் (2,902) மூன்றாவது இடத்திலும் உள்ளனர்.

துபாய் ஓபன் சாம்பியன் பட்டம் வென்றதன் மூலம் பெல்ஜியத்தின் பெனின் (2,798) ஐந்திலிருந்து நான்காம் இடத்திற்கு முன்னேறியுள்ளார். இவரிடம் தோற்ற மரியா ஷரபோவா (2,574) ஐந்தாவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளார்.

## எண்களின் பலன்கள் எப்படி?

| எழுத்துக்கள் | எண்கள் | கிரகம் |
|---|---|---|
| A,J,I,Y,Q | - 1 எண் | சூரியன் |
| B,K,R | - 2 எண் | சந்திரன் |
| C,G,L,S | - 3 எண் | குரு |
| D,M,T | - 4 எண் | ராகு |
| E,H,N,X | - 5 எண் | புதன் |
| U,V,W | - 6 எண் | சுக்கிரன் |
| O,Z | - 7 எண் | கேது |
| F,P | - 8 எண் | சனி |

உதாரணம்: D.VISAGAN
4 6 1 3 1 3 1 5 = 24

## பிறப்பெண் - 4, கூட்டெண் - 2

4, 13, 22, 31 போன்ற திகதிகளில் பிறந்து, பிறந்த திகதி, மாதம், வருடம் ஆகிய மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 2 வருமேயானால் இவர்கள் ராகு, சந்திரன் ஆதிக்கத்தில் பிறந்தவராவர். இவர்களது உயிர் எண் சந்திரனாக இருப்பதால் அடிக்கடி மனநிலை, திடம்குறைந்து, பின்தெளிவடையும். சிலருக்கு அடிக்கடி சளி பிடித்துக் கொள்ளும். பார்ப்பதற்குக் கம்பீரமாகக் காட்சியளித்தாலும் திடீரென்று மனம் குழம்புவர். வசதி படைத்த குடும்பத்தில் பிறந்தவராக இருந்தாலும் இவர்களை ஆண்டவன் சோதனை செய்தே மேன்மையாக்குவார். ஆனால் பெயர் பொருத்தமானதாக அமைந்திருக்குமேயானால் சோதனையின்றி வாழ்க்கையில் மேன்மையடையலாம்.

இயற்கையாகவே உயிர் எண்ணை உடல் எண் கிரகணம் பிடிப்பதால், ஏதாவது ஒரு பிரச்சினையை, சுமந்து கொண்டேயிருப்பர். ஆரோக்கியம், வாழ்க்கைத் துணை, குழந்தைகள், செல்வம் இவற்றில் ஏதாவது ஒன்றில் குறைபாடு இருக்கும். ஆனால் பெயர் பொருத்தமானதாக அமைந்துவிட்டால் எவ்விதக் குறையும் இல்லாமல் வாழ்வர். பிறருக்கு உதவும் மனப்பான்மையுடன், எப்பொழுதும் சுறுசுறுப்பாகவே காட்சியளிப்பர்.

தன் மனம் நேர்மையையே விரும்புவதால் தீய காரியங்கள் செய்ய மனம் கூசுவர். சிரமப்பட்டுப் பணம் சம்பாதிக்கும் இவர்களுக்கு செலவு காத்துக் கொண்டிருக்கும். நல்ல முன்னேற்றம் இருக்கும் நேரத்தில் திடீரென்று எல்லாம் சூன்யமாகிவிடும். ஆனால் பெயர் நன்றாக அமைந்துவிட்டால் அதன் உதவியால் மகிழ்ச்சியாகவும், வசதியாகவும் வாழ்வர். துன்பம், துயரம் எவ்வளவு வந்தாலும் தாங்கிக் கொள்ளும் மனம் கொண்ட இவர்களுக்கு ஆறுதல் கூறவும், அதே நேரத்தில் உதவவும் பலர் முன்வருவர். போலியாக நடிக்கத்தெரியாத இவர்கள் தன் மனக் கருத்துக்களைத் தெளிவாக வெளியிடுவர். கடன் வாங்குதலையும், பிறருக்குத் தலை வணங்கிப் போவதையும் வெறுப்பவராவர்.

அன்புக்கு அடிபணியும் இவர்களிடம், அன்பால் எதையும் சாதித்துக் கொள்ளலாம். நாணயமாக இருக்க ஆசைப்படும் இவர்கள், பிறரும் தன்னிடம் நாணயமாக நடந்துகொள்ள வேண்டும் என்று ஆசைப்படுவர். இவர்களுடைய பிறந்த திகதி, எண்களுக்குப் பொருத்தமானதாகப் பெயர் அமைந்து விட்டால் நல்ல முன்னேற்றமும், வீடு, நிலம், வாகனம் போன்ற வசதியுடனும் வாழ்வர்.

பசி என்று யார் சென்றாலும், உடனே உதவும் இளகிய மனம் கொண்டவர்களாதலால் ஆண்டவன் இவர்களை எந்தச் சந்தர்ப்பத்திலும் கைவிடுவதில்லை. வாதம் செய்வதில் திறமை வாய்ந்த இவர்கள் குறுக்குக் கேள்வி கேட்பதிலும், பெரியவர்கள் பேசுவதை அப்படியே கிரகித்துக் கொள்வதிலும் சிறந்தவர்கள். சாஸ்திரம், சட்டம், சமயம் ஜோதிடம் போன்றவற்றில் ஆராய்ச்சியுடையவராக விளங்குவர். தன்னுடைய கல்வியைப் பூர்த்தி செய்வதற்குள் பல தோல்விகளைச் சந்தித்து வெற்றி பெறுவர்.

பள்ளிப் படிப்பை விட உலக அனுபவப் படிப்பில் உயர்ந்த இடத்தை வகிப்பர். உத்தியோகம் செய்பவர் சிலர். ஆனால் வியாபாரம் செய்பவர்கள் பலர் இந்த எண்ணிக்கையில் இருக்கின்றனர்.

**தொழில்:**

இவர்களுக்கு வாகனத்தாலும், ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்துக்குப் பொருள்களை அனுப்புவதாலும், கல், நெருப்பு, இரும்பு சம்பந்தப்பட்ட பொருளாலும், ஆடம்பரப் பொருள், திரவ சம்பந்தமான பொருள்களாலும், வாழ்க்கையில் உயர்ந்த இடத்தை வகிப்பர்.

**நோய்:**

உஷ்ண சம்பந்தமான வியாதிகள் அனைத்தும், பைல்சு, வயிற்றுக் கோளாறு, முதுகுவலி, அடிக்கடி சளி பிடித்தல் போன்றவைகள் வந்து நீங்கும்.

**பெயர் அமைக்கும் முறை:**

ராகு, சந்திரன் ஆதிக்கத்தில் பிறந்திருப்பதால், சுக்கிரன் சூரியன் ஆதிக்கமான 15, 24, 33, 42, 51, 60, 69; 19, 37, 46, 64 போன்ற எண்களில் பெயரை அமைத்துக் கொள்ளலாம்.

**பின்பற்ற வேண்டியவை:**

யோகமான எண் - 6, 1.

யோகமான திகதிகள் - 6, 15, 24; 1, 10, 19, 28.

யோகமான நிறம் - மஞ்சள், வெளிர் நீலம், சந்தனக் கலர், வெளிர் பச்சை.

யோகமான மோதிரக்கல் - கோமேதகம், வெளிர் நீலக்கல்.

ஆகாத நிறம் - கறுப்பு, சிவப்பு, காப்பிக் கலர்.

ஆகாத திகதிகள் - 8, 17, 26. (ஆனால் 8, 17, 26 எதிர்பாராத நன்மை அளிக்கும்).

*அடுத்த வாரம் பிறப்பெண் 4, கூட்டெண் 3 பற்றிப் பார்ப்போம்*

## குழந்தைகள் தாங்காது!

**பிரபல** குத்துச் சண்டை வீரர் முகம்மது அலியின் மகள் லைலா அலி மெக்ஸிக்கோவில் உள்ள கான்குன்னில் நடைபெற்ற உலக பாக்ஸிங் கவுன்சில் நிகழ்ச்சியில் தலைசிறந்த குத்துச் சண்டை வீராங்கனை என்ற விருது வழங்கிக் கௌரவிக் கப்பட்டார்.



குத்துச் சண்டை விளையாட்டை குழந்தைகள் தேர்தெடுக்க வேண்டாம் என்பது இவரது கருத்தாக உள்ளது. பாக்ஸிங் போன்ற ஆபத்தான விளையாட்டில் குழந்தைகள் யாரும் நுழையாமல் இருப்பதே நல்லது. இதை என் குழந்தைகளுக்கும் சொல்லி வருகிறேன். அவர்களும் அதை பின்பற்றுவார்கள் என்றே நம்புகிறேன் என்கிறார்.

முகம்மது அலிக்கு விருப்பமில்லை என்று தெரிந்தும் குததுச்சண்டை விளையாட்டை தேர்வு செய்த லைலாதானா இப்படிக் கூறுவது என்று அனைவரும் மூக்கில் விரல் வைக்கின்றனர்.

பஞ்ச், பாக்ஸிங், கிக் என தினமும் எதிரிகளைத் திணறடிக்கும் லைலா அலி குழந்தைகள் என வரும்போது தாயாக மாறிவிடுவதில் ஆச்சர்யமில்லை தானே.

## 5 ஆவது ஆண்டு நினைவுகளுடன்

இவ்வுலகில் 19.04.1949

இறைவனடியில் 19.02.2001



**அமரர் கனகர் கந்தசாமி (கண்ணன்)**

**திதி : 2006.02.25**

கூடு கலைந்த குருவிகளாய் நாங்கள் இங்கே!
உங்களைத் தேடுகின்றோம் எம் அப்பா.....
தவிக்கவிட்டு எங்கு சென்றீர்கள்
எங்கள் அப்பா......
எல்லோருக்கும் நல்வழி காட்டினீர்கள்
எமக்கு எந்த வழியையும் காட்டாமல் - கண்ணீரை மட்டும்
தந்துவிட்டீர்கள்.
ஆண்டுகள் ஐந்தாகியும் என்றும் மறவோம் எம் அப்பாவே
உங்கள் வழியில் எம் பயணம் உங்களை நினைத்து.
ஓம் சாந்தி... ஓம் சாந்தி... ஓம் சாந்தி....

நீங்காத நினைவுகளுடன்
மனைவி - பிள்ளைகள் - மருமக்கள் - பேரப்பிள்ளைகள்

தகவல்: கமல் ஆனந்தி,
வெள்ளவத்தை - 06


உங்கள் இதயம் கவர்
தினமுரசில்
பல சாம்ராச்சியங்கள் கவிழ்ந்த கதையின் பின்னணிகள்...
பிரபலங்களின் அந்தரங்க விடயங்கள்.......
பற்றி அறிய ஆவலாக இருக்கும் வாசகர்களுக்காக..
உலகப் பிரபலங்களின் அந்தரங்கங்கள்
புத்தம் புதிய விறு விறு கிறு கிறு தொடர் விரைவில்
உங்கள் முரசில் படிக்கத் தவறாதீர்கள்......

# அரிஸ்டாட்டில்
## (கி.மு. 384 - 322- நூற்றாண்டு)

# உலகை வியக்க வைத்தவர்கள்

**பண்டைய** உலகில் தலைசிறந்த தத்துவஞானியாகவும், விஞ்ஞானியாகவும் திகழ்ந்தவர் அரிஸ்டாட்டில். இவர் முறையான தருக்கவியல் ஆராய்ச்சியைத் தோற்றுவித்தார். தத்துவத்தின் அனைத்துத் துறைகளையும் வளப்படுத்தினார்; அறிவியலுக்கு அளவிறந்த அருந்தொண்டுகள் புரிந்தார்.

அரிஸ்டாட்டிலின் கொள்கையில் பல இன்று காலங் கடந்தனவாகி விட்டன. எனினும், இவருடைய தனிக் கோட்பாடுகளைவிடப் பெருமளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குவது இவருடைய பகுத்தறிவு அணுகு முறையாகும். மனித வாழ்க்கையின் மற்றும் சமுதாயத்தின் ஒவ்வொரு அம்சமும், சிந்தனைக்கும்,



பகுப்பாய்வுக்கும் உரிய நூதல் பொருளாக அமையும் என்ற கோட்பாடு. இந்த அண்டம், முறையற்ற தற்செயல் நிகழ்வுகளினாலோ மந்திர தந்திரத்தினாலோ, மனம்போல நடக்கிற தெய்வங்களின் விருப்பு வெறுப்புகளினாலோ கட்டுப்படுத்தப்படவில்லை. மாறாக, பகுத்தறிவு சார்ந்த விதிகளுக்கு உட்பட்டு அண்டம் இயங்குகிறது என்னும் கொள்கை; இயற்கை உலகின் ஒவ்வொரு அம்சம் குறித்தும் மனிதர்களை முறையான ஆராய்ச்சிகள் செய்வது பயனுடையதாக இருக்கும் என்ற நம்பிக்கை; நமது முடிபுகளைச் செய்வதில் அனுபவ நோக்கறிவினையும், தருக்கமுறைப் பகுத்தறிவினையும் பயன்படுத்த வேண்டும் என்பதில் ஆழ்ந்த பற்றுறுதி - இவை அனைத்தும் அரிஸ்டாட்டிலின் எழுத்துக்களில் அழுத்தமாக இழையோடக் காணலாம்.

அரிஸ்டாட்டில், மாசிடோனியாவிலிருந்து ஸ்டாகிரா என்ற நகரில் கி.மு. 384இல் பிறந்தார். அரிஸ்டாட்டில் தம்முடைய 17ஆம் வயதில் ஏதென்ஸ் நகருக்குச் சென்று, பிளேட்டோ என்ற பேறறிஞரின் கல்விக் கழகத்தில் சேர்ந்து பிளேட்டோவின் மாணவரானார். அங்கு அவர் பிளேட்டோ இறந்த சில ஆண்டுகளுக்குப் பின்புவரை 22 ஆண்டுகள் இருந்தார். இவருடைய தந்தை, புகழ்பெற்ற அலெக்சாந்தரின் தந்தையான பிலிப்பின் அரண்மனையில் வைத்தியராக இருந்தவர். எனவே, இவருடைய தந்தையை அடியொற்றி ஆர்வம் தோன்றியிருக்கலாம். பிளேட்டோ விடம் பயின்ற காரணத்தால் தத்துவமுறை அனுமானங்களிலும் ஆர்வத்தை வளர்த்துக் கொண்டார்.

அரிஸ்டாட்டில் கி.மு. 342இல் மாசிடோனியா திரும்பினார். பிலிப் மன்னரின் வேண்டுகோளுக்கிணங்க அம்மன்னனின் 13 வயது மகனுக்கு ஆசிரியரானார். இந்த இளவரசன்தான் பிற்காலத்தில் உலக வரலாற்று மகா அலெக்சாந்தர் எனப் புகழ் பெற்றவர் ஆவார். இளம் அலெக்சாந்தருக்கு அரிஸ்டாட்டில் பல ஆண்டுகள் கல்வி கற்பித்தார். கி.மு. 335இல் அலெக்சாந்தர் அரியணை ஏறினார். அரிஸ்டாட்டில் ஏதென்ஸுக்குத் திரும்பி, அங்கு சொந்தமாக ஒரு பள்ளியை நிறுவினார். 'லைசியம்' என்பது இந்தப் பள்ளியின் பெயர். தம் மாணவருக்கு மெய் விளக்கியல் கொள்கைகளைக் கற்பிப்பதற்காக ஏதென்ஸ் நகரத்திலிருந்த ஒரு தோட்டத்தில் இதை அவர் நிறுவினார். இதற்கு "உலாப் பள்ளி" என்ற பெயரும் உண்டு. அரிஸ்டாட்டில் இங்கு உலாவிக் கொண்டே பாடம் சொல்வது வழக்கமாக இருந்ததால் இப்பெயர் ஏற்பட்டது என்பர். இங்கு 12 ஆண்டுகள் இவர் கழித்தார். இந்தக் கால அளவின்போது தான் அலெக்சாந்தர் தம் ஆட்சிப் பரப்பினை விரிவுப் படுத்துவதற்காக நாடுகளைக் கைப்பற்றும் படையெடுப்புக்களை மேற்கொண்டிருந்தார். அலெக்சாந்தர் தம்முடைய முன்னாள் ஆசிரியரிடம் அரசியல் தொடர்பான ஆலோசனைகளைக் கேட்கவில்லை. எனினும், அவரது ஆராய்ச்சிகளுக்குத் தேவைப்பட்ட நிதி உதவிகள் அனைத்தையும் தாராளமாக வழங்கிவந்தார். ஒரு விஞ்ஞானி தம் ஆராய்ச்சிக்காக அரசிடமிருந்து பெருமளவில் நிதியுதவி பெற்றது உலக வரலாற்றில் இதுவே முதல் நிகழ்ச்சி எனலாம். இதன் பின்பு பல நூற்றாண்டுகள் வரை எந்த விஞ்ஞானிக்கும் அரசு நிதியுதவி கிடைத்ததில்லை.

அலெக்சாந்தருடன் அரிஸ்டாட்டில் கொண்டிருந்த தொடர்பு சில ஆபத்துக்களையும் தோற்றுவித்தன. அலெக்சாந்தரின் சர்வாதிகாரமுறை ஆட்சியை அரிஸ்டாட்டில் கொள்கையளவில் எதிர்த்தார். அரசு துரோகக் குற்றம் செய்ததாக, ஐயத்தில் அரிஸ்டாட்டிலின் மருமகனை அலெக்சாந்தர். தூக்கிலிட்டபோது, அரிஸ்டாட்டிலையும் தூக்கிலிடுவதற்கு அவர் எண்ணியிருக்க வேண்டும். அரிஸ்டாட்டில் மக்களாட்சி ஆதரவுக் கொள்கையை அலெக்காந்தர் விரும்பவில்லை. அதே சமயத்தில் அவர் அலெக்சாந்தருடன் நெருக்கமாகத் தொடர்பு கொண்டிருந்தமையால் ஏதென்ஸ் மக்கள் அவரை நம்பவில்லை. கி.மு. 323இல் அலெக்சாந்தர் இறந்த பின்பு அரசியல் நிலைமை மாறியது. மாசிடோனியாவை எதிர்க்கும் குழுவினர் ஏதென்ஸில் ஆட்சிக்கு வந்தனர். ஆட்சியாளர்கள், சமயத்தை அவமதித்ததாக ஏதென்ஸில் 76 ஆண்டுகளுக்கு முன்பு சாக்ரட்டீஸுக்கு நேர்ந்த கதியை நினைவு கூர்ந்த அரிஸ்டாட்டில், "தத்துவத்திற்கு எதிராக இரண்டாவது பாவத்தைச் செய்ய ஏதென்சுக்கு நான் இடமளிக்கப் போவதில்லை" என்று கூறி அந்த நகரிலிருந்து தப்பி ஓடினார்.

**வியப்புக்கள் தொடரும்....**

# காதிலை பூ கந்தசாமி



### நோட்டீஸ் பலகை

**நான் சொல்வ தெல்லாம் பொய்.**
**பொய்யைத் தவிர**
**வேறொன்றுமில்லை**
***-காதில பூ கந்தசாமி-***

வணக்கமுங்கோ,

வணக்கமுங்கோ!

**ஆஹா...** ஆஹா...ஜெனீவாவில நடந்தது எவ்வளவு அற்புதமான பேச் சுங்கோ. அந்தப் பழம்பெருமை வாய்ந்த பெலஸ்சில அற்றாச் பாத்ரூம் பக்கம் அரச குழுவுக்கும் கொமன் பாத்ரூம் பக்கம் இயக்கக் குழுவுக்கும் குடுத்த அரெஞ் மெண்ட் ஆரம்பத்திலேயே பாலசிங்கத்துக்கு பிடிக்கயில்லையாம். பிறகென்ன, பேச்சுவார்த்தை மேசையில நாங்கதான் முதல்ல பேசுவம் எண்டு இயக்க தரப்பும் இல்ல, இல்ல நாங்கதான் முதலில பேசு வம் எண்டு அரச தரப்பும் போட்டி போட் டதைப் பாத்து அம்பெயரா பணியாற்றின எரிக் சொல்ஹெய்முக்கு அப்பிடியே புல்லரிச்சுப் போட்டுதாம், சமாதான பேச்சுவார்த்தையில ரெண்டு தரப்பும் இவ்வளவு ஆர்வமா இருக்காங்களே எண்டு. ஆனா இவை ஆர்வப்பட்டது சமாதானப் பேச்சுக்காக இல்லையா முங்கோ. முதலில பேசிறவைதான் பெரி யாக்கள் எண்ட இமேஜ் கிடைக்கு மெண்டதாலதானாம். கடைசியில இவையின்ர குள்ளநரி விளையாட்டை, தெரிஞ்சுகொண்ட எரிக், தான் புல்லரிச்சுக் கொண்டதை வெளியில சொல்லாமலே மறைச்சுப் போட்டாராம். அஞ்சு பைசா வுக்கும் பிரயோசனம் இல்லாத உந்த விடயத்திற்கு அவரே ஒரு முற்றுப் புள்ளி யையும் வைச்சிருக்கிறார். என்னதான் இருந்தாலும் ஜனநாயக ஒழுங்குக்கும், சட்டதிட்டங்களுக்கும் கட்டுப்பட்டு நடக்கிற அரச தரப்புக்குத்தான் முதலிடம் கொடுக்க வேண்டுமெண்டிட்டு அரச குழுவுக்கு தலைமை தாங்கிப்போன அமைச்சர் சில் வாவை ஆரம்பித்துப் பேசும்படியும், அதோடை பாலசிங்கத்தைப் பேச அழைக் கும் படியும் தீர்ப்புச் சொல்லியிருக்கிறார்.

உது சரியான தீர்ப்பு எண்டிட்டு அஜீத் பாணியில அது....எண்ட கணக்கா ஆரம்ப உரையை நிகழ்த்தினாருங்கோ. உந்தப் பேச்சுவார்த்தை சமரசமா முடியப்போற தில்லை எண்டதை ஏற்கனவே, அதாவது ஜனவரி இருபத்தி அஞ்சாந் திகதியே முடிவு செய்திருந்த படியினால, பாலசிங்கத்தார் தன்ர உரையில துணைப் படை, அந்தப் படை, இந்தப் படை எண்டு வாய்க்கு வந்த பெயர்களைச் சொல்லி உரையாற்றினவர். உந்த உரையை ஆற்றி முடிக்கிறதுக் குள்ள தாங்கள் நிரபராதிகள் எண்ட தோரணையில நடுவர்களாக இருந்த வெள்ளக்காரரை கண்ணாடிக்கு மேலாக அடிக்கடி பாத்துக்கொண்டாருங்கோ. உவரின்ர உரைக்கு எந்தவித ரியாக்ஷ னையும் காட்டாம அம்பெயர்மார் இருந் ததைப் பாக்கேக்க இவையின்ர வண்ட வாளங்களைத் தங்களுக்குத் தெரியா தெண்ட நினைப்பில பாலசிங்கத்தார் பேசுறார் எண்டு அவை நினைச்சிருப் பினமாக்கும். அதேமாதிரி அமைச்சர் சில்வா, தங்களின்ர உரையை நிகழ்த் தேக்க சு.ப.வையும் பாலசிங்கத்தாரையும் அடிக்கடி பாத்துப் பேசினாருங்கோ.

உப்பிடிப் போன ஜெனீவாப் பேச்சு நூற்றுக்கு தொண்ணூற்று ஒன்பது பேர் நினைச்ச மாதிரி இன்னொரு டேற்றுக்கு தள்ளிப் போயிருக்கு. உதுதானுங்கோ பொலிற்றிக்ஸ். உதச் சொல்லேக்க இன்னொரு விசயமும் சொல்ல வேணும் போல இருக்கு. ஆனால் சொல்லவா, வேண்டாமா எண்டு யோசனையாவும் இருக்கு. சொல்லாட்டில் அடி வயித்தில இருந்து ஒரு உருண்டை உருண்டு கொண்டு வந்து தொண்டைக்குள்ள அடைக்குமுங்கோ. உந்த வேதனையைப் போக்க வேணுமெண்டால் அதைச் சொல்லித்தான் ஆகணுமுங்கோ. உதைச் சொல்லுறதுக்காக எனக்கு ஊடக சென்சே தெரியாது எண்டு யாரும் நினைச்சுப் போடாதெங்கோ. ஏனெண்டால் நடந்ததை அப்படியே சனத்துக்குச் சொல்லுறதுதான் என்ர வேலையுங்கோ. உந்த ஜெனீவா பேச்சு நடந்துதெல்லோ, அதில ஏதோ ஒன்பதாவது அதிசயம் நிகழப்போகிற தெண்ட கணக்காகவும், அங்க நடக்கி றதை அப்புடியே தங்கட ஊடகங்களில ஒப்புவிக்க வேணுமெண்ட மாதிரியும் சொந்தச் செலவில போனவைக்கு உருப் படியா எந்த நியூசும் கிடைக்கயில் லையுங்கோ. பேச்சு எங்கயோ நடக்க, இவை எங்கயோ இருந்து கொண்டு மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடிறதும், இவையின்ர கற்ப னையில கதை விட்டதும் தொண்ணூற்று ஏழு வீதம் எண்டால் அங்க வெளியான அறிக்கையை சொன்னது மிச்ச வீத முங்கோ. உதுக்காக அவ்வளவு செலவு பண்ணி போயிருக்க வேணுமோ எண்டு சில ஊடக நிறுவன ஆக்கள் ரொம்ப பீல் பண்ணினமாம்.

என்ன செய்யிறது? வானத்துக்கும் பூமிக்கும் குதியோ குதியெண்டு குதிக்கி றவை தொப்பெண்டு கீழ விழயிக்க கஷ்ட மாத்தான் இருக்கும். இனியெண்டாலும் சாதாரணமா நடக்கப்போற சம்பவங் களுக்காக கொமன்றி பண்ணப் போற மெண்டு அடம்பிடிக்காம இருக்கிறது நல்லதுங்கோ. உலகம் சுத்திப் பாக்கிற விருப்பத்துக்காக ஊடகச் சாட்டுச் சொல்லாதீங்கோ. உப்பிடிச் சொல்லிப் போட்டன் எண்டு கோவிக்காதேங்கோ

ஐ யேம் வெரி சொரிங்கோ...

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்

(02.03.2006 தொடங்கி 08.03.2006 வரை)

## சோதிட மாமணி தில்லை

### இந்த வாரக் கிரக நிலை

கும்பம் - சூரியன். மீனம் - புதன், இராகு. இடபம் - செவ்வாய். கர்க்கடகம் - சனி. கன்னி - கேது. துலாம் - வியாழன். தனு - வெள்ளி.
சந்திரன் மீனம், மேடம், இடபம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம் :**
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.) தொழில் நன்மை, காரியானுகூலம், பணவரவு, உயர்ந்த நிலை, பெரியோர் சகாயம், வெளியிடப் பயணம், குடும்பப் பொறுப்பு, உத்தியோக மேன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 04.

**இடபம் :**
(கார்த்திகைப் பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை.)
தொழில் அலைச்சல், காரியத்தடை, பணச்செலவு, வெளியிட வாழ்க்கை, மனக்குறை நீங்கும், குடும்பப் பகை, உத்தியோகப் பயம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.
அதிர்ஷ்ட இலக்கம்:- 03.

**மிதுனம் :**
(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்.)
தொழில் கஷ்டம், செலவு மிகுதி, பெரியோர் பகை, அந்நியர் சகாயம், தேகசுகக் கஷ்டம், குடும்பக் கலகம், உத்தியோக சிரமம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர்கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 05.

**கர்க்கடகம் :**
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.)
தொழில் நன்மை, காரியானுகூலம், பணவரவு, வெளியிடப் பயணம், மனக்குறை நீங்கும், இனசன மகிழ்ச்சி, உறவினர் கலகம், உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியா பாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 07.

**சிங்கம் :**
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்.)
தொழில் மேன்மை, உயர்ந்த நிலை, தேகசுகக் கஷ்டம், வெளியிடப் பிரயாணம், மனமகிழ்ச்சி, அந்நியர் நட்பு, குடும்பப் பொறுப்பு, உத்தியோக அலைச்சல், மேலதிகாரிகள் பகை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 01.

**கன்னி :**
(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.)
தொழில் பகை, மனக்கலக்கம், வெளியார் உதவி, பயனற்றச் செயல், தூர இடப்பயணம், மனக்குறையதிகம், குடும்பப் பொறுப்பு, உத்தியோகச் சிக்கல், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 03.

**துலாம் :**
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்.)
தொழில் கலக்கம், பணச்செலவு, மனக்கிலேசம், பெரியோர் சகாயம், தேகசுகக் கண்டம், பிரயாண மிகுதி, குடும்பப் பகை, உறவினர் உபத்திரம், உத்தியோக மகிழ்ச்சி, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.
அதிர்ஷ்ட இலக்கம்:- 06.

**விருச்சிகம் :**
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை.)
தொழில் நன்மை, கௌரவம், மனமகிழ்ச்சி, பணவரவு கஷ்டம், பெரியோர் சகாயம், உறவினர் உதவி, குடும்ப மேன்மை, உத்தியோக உயர்ச்சி, மாணவர்கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.
அதிர்ஷ்ட இலக்கம் :- 04.

**தனு :**
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்.)
தொழில் கஷ்டம், பணச்செலவு, மனக்குறையதிகம், வெளியார் தொல்லை, கடன்பயம், இனசனக் குழப்பம், தேகசுகக் கஷ்டம், உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 01.

**மகரம் :**
(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை.)
தொழில் நன்மை, காரியானுகூலம், பெரியோர் உதவி, மனக்குறை நீங்கும், குடும்பத் தொல்லை, உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.
அதிர்ஷ்ட இலக்கம்:- 05.

**கும்பம் :**
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.)
தொழில் உயர்ச்சி, பலவித பேறு, பெரியோர் சகாயம், மனப்பயம் நீங்கும், கௌரவம், குடும்ப மகிழ்ச்சி, பிள்ளைகளால் தொல்லை, உத்தியோகப் பொறுப்பு, மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 02.

**மீனம் :**
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி.)
தொழில் மந்தம், பணச்செலவு, காரியானுகூலம், வெளியிடப் பயணம், தேகசுகக் குறைவு, குடும்பப் பொறுப்பு, இனசனப் பகை, உத்தியோகப் பயம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 04.

Regd. as a News Paper at the G.P.O.(QD/06/NEWS/2006)


# இதய வீணை

தினமும்

அடக்கப்பட்ட மக்களின் உணர்வுகள் கருத்துக்களாய் கதைகளாய்... செய்திகளாய்... நமது காதுகளில்

மாலை 6.30 தொடக்கம் இரவு 8.30 மணி வரை


கிழக்கு மாகாணம் 107.9, 104.5
வட மாகாணம் 92.2
கொழும்பு 105.6

நாடு முழுவதும் தென்றல் FM அலைவரிசையில்....

இதய வீணையின் பொதுத் தொடர்புகளுக்கு
இதய வீணை
த.பெ. இல - 1665
கொழும்பு.
தொலை பேசி :- 0773114208
Web - www. tirradio.com
E-Mail : idayaveenai@hotmail.com
info@tirradio.com

இலங்கையில் ஒலிபரப்பாகும் இதயவீணை நிகழ்ச்சிகள் இப்பொழுது ஐரோப்பிய நாடுகளில் வாழும் எமது தாயக உறவுகளுக்காக செய்மதி ஊடாகவும் ஒலிபரப்பப்படுகிறது

| | |
|---|---|
| Satellite : | HotBird - 6 |
| Location : | 13° East |
| Frequency : | 10971MHz |
| Polarity : | Horizontal |
| Symbol rate : | 27.500 Msb |
| FEC : | 3/4 |
| Transponder : | 133 |


# சீட்டுக் கட்டு ராஜா



# இளம் கலைஞன்



**இளம்** இசைக்கலைஞர்கள் கூடிய ளவில் இளசுகளுக்கேற்ற வகையில் தங்களுடைய இசைப் பாணியை மாற்றி அமைத்து வருவது அனைவருக்கும் தெரிந்ததே. ஆயினும் இங்குள்ள அங்கேரி நாட்டைச் சேர்ந்த அடம் லோரன்ஸ் என்பவர் மிகவும் இளம் இசைக் கலைஞராவார். இவருக்கு ஆக 14 வருடங்களே பூர்த்தி யாகின்றன. இவர் 2002ஆம் ஆண்டு அங் கேரி யாவில் புகழ்பெற்ற இசைக்குழு ஒன்றின் ஆல்பத்துக்கு இசையமைத்து, பெருமையும், சாதனையும் நிலைநாட்டியுள்ளார். 23 பேர் பங்குகொண்ட 92 நிமிடம் நிகழ்ந்த இந்த இசை நிகழ்ச்சியே உலக சாதனை பெற்றுள்ளது.

**சீட்டாட்டத்தில்** பல உலக சாதனைகள் நிகழ்த்தப் பட்டுள்ளது. ஆயினும் இங்குள்ளது. ஒரு வித்தியாசமான சீட்டுக்கட்டு சாதனையே. சீட்டுக்கட்டுகளில் குறை ஒழுங்கில் ஒவ்வொரு வடிவத்தையும் 40.39 செக்கன்களில் அடுக்கி, உலக சாதனையை புரிந்துள்ளார் குனியிக்கோ திரதா எனும் ஜப்பான் நாட்டைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.


## குடித்துப் பார்ப்போமா?





**நட்சத்திர** விடுதிகளில் ஒரு கோப்பை கோப்பி அதிக விலையாக இருப்பது உண்மைதான். அந்த வகையில் இங்கிருக்கும் கோப்பியும் உண்மையில் அதிக விலைதான். என்ன விசேடம் என்றாலும் ஒவ்வொரு வருடமும் 227 கிலோ கிராம் கோப்பி தான் மொத்தமாக கம்பனியால் உற்பத்தி செய்யப்படுகிறதாம். லுவாக் எனப்படும் இந்தோனேசியா நாட்டின் தயாரிப்பான இது 0.45 கிலோ கிராம் 300 அமெரிக்க டொலர்களாகும். காரணம் இக் கோப்பி மரங்களில் இருக்கும் கோப்பிப் பழங்களை ஒரு வகையான ஊர்வன விலங்கு உண்ணுமாம். இவ் விலங்கினை பிடித்து அதன் இரைப்பைகளில் இருந்துதான் இக் கோப்பி தயாரிக் கப்படுவதாலேயே இவ் வளவு விலையாம்.









# புல் இடை வெளி

புல்வெளிகள் பல வகைகளில், வடிவங்களில் சித்திரிக்கப்படுகின்றன. அந்த வகையில் இங்குள்ளதும் புல் இடைவெளிதான். இங்கிலாந்தில் இருக்கும் 'காசில் வெலன்' பூங்காவிலேயே இது உள்ளது. 11215 சதுர மீற்றர் (2.771 ஏக்கர்) பரப்பளவுடைய இப் புல்வெளி, 3.51 கிலோ மீற்றர் நீளமுடையதாம். 2001ஆம் ஆண்டு திறந்துவைக்கப்பட்ட இப் புல்வெளி இடைவெளியானது இன்று கூட இங்கிலாந்து மக்களிடையே பெரும் செல்வாக்கைப் பெற்றுள்ளது. நம் நாட்டில் இப்படியொன்று இருந்தால் நாடு முழுவதும் புல்வெளியாகவே இருக்கும்.

# 1 ஆவது பிறந்த நாள் வாழ்த்து | 03.03.2006

## செல்வி நவினன் நதீபா



கணேஸ்வரம் அளவெட்டியைப் பிறப்பிடமாக கொண்ட நவீனன் - சசிதா தம்பதியரின் செல்வப் புதல்வீ நதீபா தனது முதலாவது பிறந்தநாளை 03.03.2006 அன்று ஜெர்மனியில் (முன்சன்) மிகக் குதூகலமாகக் கொண்டாடுகிறார். நதீபாவை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, பூட்டி, அம்மம்மா, மாமாமார், அன்ரிமார், அத்தைமார், சித்தப்பாமார், சித்திமார், அண்ணாமார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் பல்கலையும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

தகவல் :- ரஞ்சன் (கொழும்பு)